
கல்கி

KALKI 9-3-80 90 காசு



மின்னலடிக்கும் ஸூப்பர் ரின் வெண்மை...



...இதர, டிட்டர்ஜெண்ட் வில்லை, பார் எதனையும் மிஞ்சும் வெண்மை.

பார்வைக்கு தப்பவே தப்பாத வெண்மை உங்கள் துணிகளுக்கு—வேளை தவறாத ஸூப்பர் ரின் சலவையின் வெண்மையே தனி.
இதர டிட்டர்ஜெண்ட் வில்லை, பார் எதனையும் மிஞ்சுவது ஸூப்பர் ரின் வெண்மை.
காரணம், மிகுந்த வெளுக்கும் சக்தி அடங்கியது ஸூப்பர் ரின்.



நீங்களே கண்டுகொள்வீர்கள்

இதை வேறெந்த வெளுத்தது டிட்டர்ஜெண்ட பார்



இதை வெளுத்தது ஸூப்பர் ரின்


<u>அதிக</u>
வெளுப்பூட்டும் சக்தி படைத்தது ஸூப்பர் ரின்.

இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு

லின்டாஸ்-RIN.35-2012 TM

திருவரங்கன் அருள் பெற...

வட்ட மேஜை



● திருவரங்கத்தில் ஸ்ரீரங்கநாதர் கோவிலின் தெற்குக் கோபுரப் பணியை 'நான் செய்து முடிக்கிறேன்' என்று அரசாங்க அனுமதி பெற்று, பல இலட்ச செலவுகளை ஏற்றுக்கொண்டு இங்கு ஸ்ரீ அகோபில மடாதிபதி வந்து ஒரு வருடம் ஆகப் போகிறது. ஏழாவது பிராகாரத்தில் இருக்கும் இந்த மகா கோபுரத் திருப்பணிக்காக ஸ்ரீ காஞ்சிப் பெரியவர்கள் ஸ்ரீமடத்துக்குக் கடிதம் எழுதி நன்கொடை ஒரு லட்சம் அனுப்பியுள்ளார்கள். மேலும் நன்கொடைகளை அனுப்ப விரும்பும் பக்த கோடிகள் செக், டிராஃப்ட் அல்லது மணியார்டர் மூலம் அனுப்பிப் பெரிய பெருமாளின் அனுக்கிரகத்துக்கு ஆளாக அழைக்கிறேன். வருமான வரி விலக்கு உண்டு. முகவரி: ஸ்ரீ காரியம் ஸ்வாமி, ஸ்ரீ அகோபில மடம், தசாவதார சன்னதி, (கேம்ப்) ஸ்ரீரங்கம்-620006. செக் அல்லது டிராஃப்டில் எழுத வேண்டிய பெயர்: ''ஸ்ரீரங்கம் ராஜ கோபுர நிர்மாண நிதி''
ஸ்ரீரங்கம் — இ. எஸ். பட்டப்பா

● ''ஒளியில் பார்க்கும் சர்க்கஸ்'' கவிதையைப் படிக்கப் படிக்கச் சிரிப்பாய் இருந்தாலும் சிந்தனையைத் தூண்டும்படியாகவும் இருந்தது. இன்றைய அரசியல்வாதிகளின் அர்த்தமற்ற பேச்சையும் போக்கையும் அழகாகக் கவிதை வடிவிலே எழுதியவர் யார் என்பதைக் குறிப்பிடவில்லையே?
சென்னை-4 — மயிலை ரகு

[''திருநெல்வேலிக் கவிராயர்'' என்ற புனைபெயரிலும் எழுதும் நெல்லை ஆ. கணபதி அக்கவிதையை எழுதியவர். தவறுதலாக அவர் பெயர் விட்டுப் போயிற்று. வருந்துகிறோம்.]

● திரு ரவிசங்கரின் சிதார் கச்சேரி பற்றிய குமாரி ஜெயலலிதாவின் விமர்சனம் மிக அழகான ரசனையுடன் இருந்தது. இறுதியில் திரு ரவிசங்கர் சுருதி சேர்க்க நேரம் அதிகம் எடுத்துக்கொண்டதாகக் குற்றம் சாட்டியுள்ளார். இதனைப் பற்றி சிறு விளக்கம்:

ஏர் கண்டிஷன் தியேட்டரில் குறிப்பிட்ட காலத்தில் கச்சேரி ஆரம்பிக்க வேண்டுமென்றால் ஒன்றரை மணி நேரம் முன்னதாகவே ஏர் கண்டிஷன் போட்டு இசைக் கருவிகளையும் முன்னதாகவே எடுத்துச்செல்ல வேண்டும். அந்தச் சூழ்நிலையில் இசைக் கருவிகள் இருந்தால்தான் சரிவர சுருதி சேர்த்துக் குறிப்பிட்டபடி கச்சேரி ஆரம்பிக்க முடியும். இதனை உணர்ந்து தக்க ஏற்பாட்டைச் செய்யும்படி திரு ரவிசங்கர் எங்களிடம் சொன்னார். மேலும் ரவிசங்கரும் அல்லா ரக்காவும் ஆறரை மணிக்கே வந்துவிட்டனர். ஆனால் அகாடமி ஏர்கண்டிஷன் மெக்கானிக் முன்னதாக வரச் சொல்லி யிருந்தும் மாலை 7.20 வரை அங்கு வரவில்லை. அதன் பிறகுதான் ஏர்கண்டிஷன் போடப்பட்டது. எனவேதான் இசைக் கருவிகளை வருவாக சுருதி சேர்த்துக் குறிப்பிட்ட நேரத்தில் கச்சேரியை ஆரம்பிக்க இயலவில்லை. ஆகையால் இதற்கு திரு ரவிசங்கர் பொறுப்பல்ல என்று வாசகர்களுக்குத் தெரியப்படுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.
சென்னை-35 — நாராயணன், காரியதரிசி, பாலசுப்பிரமணிய சங்கீத சபா

● வட்டமேஜை பகுதியில் திரு ராஜகோபால சாஸ்திரி கடிதத்தில் 'அதிக சப்தம் ஆரோக்கியத்தைக் கெடுக்கும்' என்ற கருத்தில் குறிப்பிட்டுள்ள அனைத்தும் ஏற்றுக் கொள்ளும் வகையில் இருக்கின்றன. ஆனால் 'கோவில்கள், மசூதிகள், இவைகளும் கூட இக்கைங்கரியத்தில் ஈடுபடுகின்றன' என்று கூறியிருப்பதை ஆட்சேபிக்கிறேன்.

மசூதிகளில் ஒலிபெருக்கி மூலம் ஒரு நாளைக்கு ஐந்து நேரம் மட்டும் (பாங்கு) தொழுகைக்கு அழைக்கப்படுகின்றனர். ஒரு தடவை தொழுகைக்கு அழைக்க மூன்று நிமிடம்தான் ஆகும். இதனால் பொது மக்கள் யாருக்கும் எந்த வித தீங்கும் விளையாது.
சென்னை-1 — நாகை ஜி. அஹமது

● திருமதி ராஜம் கிருஷ்ணனின் ராஜினாமா விவரத்தைப் பிரசுரித்த துணிச்சலைப் பாராட்டுகிறேன். பெண்களை இலக்கியம் மூலம் 'கொடுமைப்படுத்தும்' சிறுமைக்கு எதிராக ஓர் இயக்கமே நடத்த வேண்டும்.

அதில் அவருடன் நான் சேரத் தயார்.
ஜபல்பூர்-11 — தி.சா. ராஜு

● நகைச்சுவைச் சிறப்பிதழுக்காக 'உமாபதி'யைத் தேர்ந்தெடுத்துப் பொறுப்பைக் கொடுத்திருப்பது பாராட்டுக்குரியது. இதழ் சிறப்பாக அமையும் என்பதில் சந்தேகமே இல்லை. எனவே முன்னதாகவே வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.
பெங்களூர்-5 — அ. குமார்

● கவியரசின் பாட்டெழுதும் திறன் பற்றி தமிழ்ப் பித்தன் எடுத்துக் காட்டியிருந்த உதாரணங்கள் சுவையாக இருந்தன. ஆனால் 'தோல்வியுறப் போகும் படங்களைக் கூட வெற்றிப் படங்களாக மாற்றிடும் பெருமை அவரது பாடலுக்கு உண்டு' என்று அவர் குறிப்பிட்டிருந்ததைப் படித்தபோது கவிஞரின் மீது அளவுக்கு அதிகமாக நம்பிக்கை கொண்டுள்ளார் என்றே நினைக்கத் தோன்றியது.
போடிநாயக்கனூர் — எஸ். சையது முகமது

ஆளுனரின் ஆலோசகர்

இனிவான பேச்சு, இனிமையான பார்வை, யாரையும் மயக்கும் கம்பீரச் சிரிப்பு, இளைஞரைப் போன்ற சுறுசுறுப்பு... ஆளுனரின் ஆலோசகராகப் பொறுப்பேற்றிருக்கும் திரு டி. என். லக்ஷ்மிநாராயணனுக்கு வயது 58 என்றால் யாரும் நம்பமாட்டார்கள்.

''எனது பி. எஸ்ஸி. படிப்பைத் தொடர்ந்து சென்னை கிறித்துவக் கல்லூரியில் எம். ஏ. பட்டம் வாங்கினேன். அந்த மாணவப் பருவ நினைவுகளை வாழ்நாளில் எப்படி மறக்க முடியும்? பௌதிகம் எனக்குப் பாதாம் அல்வா மாதிரி. பிடித்த சப்ஜெக்டில் எம். ஏ. முடித்தேன்.

''பின்பு ஐ. ஏ. எஸ்.ஸில் அடியெடுத்து வைத்தேன். ஆந்திராவில் ராஜமுந்திரியிலும் தமிழ் நாட்டில் திண்டுக்கல்லிலும் துணைக் கலெக்டராகவும், கூட்டு மாஜிஸ்டிரேட்டாகவும் பதவி ஏற்றேன். அப்போது எனக்கு முப்பது வயது. தொடர்ந்து பல பதவிகள் வகித்தேன்.''

''கல்லூரி நாட்களில் உங்கள் மறக்க முடியாத விஷயம்?''

''சமீபத்தில் மறைந்த கிறித்துவக் கல்லூரியைச் சேர்ந்த பேராசிரியர் பாய்ட் என்னை மிகவும் கவர்ந்தார். அவரது சொற்பொழிவுகள் இன்று நினைத்தாலும் பசுமையாக இருக்கின்றன.''

லக்ஷ்மிநாராயணனுக்கு மூன்று பெண்கள். (சுமித்ரா, ரமா, ராஜலட்சுமி) ஒரு மகன், ராம்குமார். சென்னை டான்பாஸ்கோ பள்ளியில் பத்தாவது படிக்கிறான். முதல் மாப்பிள்ளை குருமூர்த்தி, அமெரிக்காவில் பென்ஸில்வேனியா பல்கலைக் கழகத்தில் உள்ளார். அடுத்தவர் அருண், தமிழ்நாடு ஸிராமிக்ஸில் வேலை பார்க்கிறார். மூன்றாவது மகள் ராஜிக்கு இன்னும் திருமணம் ஆகவில்லை. சென்னை சட்டக் கல்லூரி மாணவி.

அவருக்குப் பிரியமான உணவு பற்றிக் கேட்டபோது சொன்னார்:

''நான் இந்தியாவின் பல பகுதிகளில் பெரிய பதவிகள் வகித்திருக்கிறேன்; இருபதிலிருந்து முப்பது முறையாவது பல வெளி நாடுகளுக்குச் சென்றுள்ளேன். எங்கு சென்றாலும் அசைவ உணவைத் தொடுவதில்லை. முட்டை கூட விலக்குத்தான். வெளி நாடு சென்றால் ரொட்டியும் பாலும் தான். பல்லைக் கடித்துக் கொண்டு அதைச் சாப்பிட்டுப் பழகியதால் சமயத்தில் ருசி கூட மறந்தே போய்விடும். நான் அதிகம் சாப்பிடுபவன் அல்ல. ஆனால் ரசித்து உண்பேன். கேரளாவைச் சேர்ந்தவன் என்பதால் தேங்காய் வறுவல் ரொம்பவும் பிடிக்கும். வடநாட்டு உணவு வகையில் சப்பாத்தி ஃபேவரிட் டிஷ்.''

''பிடித்தமான பொழுதுபோக்கு?''

''நான் எப்போதும் யாருடனும் அதிகம் பேசமாட்டேன். நேரம் கிடைக்கும்போதெல்லாம் புத்தகங்கள்தான் என் நண்பன். சார்லஸ் டிக்கன்ஸ், ஸ்காட், நகைச்சுவை எழுத்தாளர் பி. ஜி. வோட்ஹவுஸ் என்னைக் கவர்ந்த ஆங்கில எழுத்தாளர்கள். தவிர சரித்திரப் புத்தகங்களையும் படிப்பேன். மனோதத்துவ நூல்களும் மத சம்பந்தப்பட்ட நூல்களும் எனக்கு விருப்பமானவை.''

இதை அவர் கூறக் கேட்கும்போது கல்லூரி நாட்களிலே எல்லாவற்றிலும் முதலானவர் என்று இவர் பெயர் பெற்றதில் வியப்பில்லை என்று எண்ணத் தோன்றுகிறது.


''இந்தப் பதவியில் நீங்கள் என்ன சாதிக்க நினைக்கிறீர்கள்?''

''எனக்குத் தொழில் வளர்ச்சியிலும் உழைப்பாளிகள் முன்னேற்றத்திலும் ரொம்பவும் ஈடுபாடு உண்டு. நான் இப்பதவியில் இருக்கிற காலகட்டத்தில் என்னால் முடிந்த வரை தமிழகத்தை எல்லா விதத்திலும் முன்னேற்றமடையச் செய்வதுதான் என் நோக்கம்.''

• —பேட்டி: ''சிக்கி''



திரை உலகுக்கு திரும்பும் எம்.ஜி.ஆர்



ஆர். பி. ராமச்சந்திரன்
(கல்லூரி மாணவர்)

இன்று தயாரிக்கப்படும் படங்களில் பாதிக்கு மேல் வெளிப்புறப் படப்பிடிப்புத் தான். பத்து நாட்களில் படம் என்று கூறு பவர்கள்தான் அதிகம். ஸ்டூடியோ ஃப்ளோர் களைப் பயன்படுத்துவாரில்லை. தொழிலா ளருக்கு வேலை இல்லை. சரித்திரப் பின்னணிப் படங்களையும், மிகப் பெரிய செட்டுக்களைப் போட்டு எடுக்கும் படங்களையும் நாம் மறந்தே விடுவோம் போலிருக்கிறது. சமீ பத்தில் ''நாடோடி மன்னனை'' டெலி விஷனில் பார்த்தபோது இனி இம்மாதிரிப் படங்களை நாம் எடுப்போமா? என்று எனக்குச் சந்தேகம் வந்து விட்டது. தமிழ்ப் பட உலகை மறுபடியும் அத்திசைக்குத் திருப்ப எம். ஜி. ஆரால்தான் முடியும்.

சங்கர் *(மின்பொறி இயலாளர்)*

'நான் நடிப்பேன். நீங்கள் பார்க்க வேண்டும். நான் அர சியலுக்குத் தாவி ஓட்டுக் கேட்பேன். நீங்கள் போட வேண்டும். நான் திரும்பவும் சினிமாவுக்கு வந்தால் நீங்கள் ஆதரிக்க வேண்டும்' — தமிழ் நாட்டு மக்களை எம். ஜி. ஆர். எவ்வளவு அழகாக எடை போட்டிருக்கிறார் என்பதற்கு இதை விடச் சான்று வேறு வேண்டுமா என்ன?

அவர் திரும்பவும் நடிக்க வந்தால் என்ன புதுமையாகச் செய்துவிடப் போகிறார்? வரப்போகின்ற முதல் படம் ''அண்ணா நீ என் தெய்வம்''. இதில் எட்டாயிரம் அடி முன்பே படமாக்கப்பட்டு விட்டது. திரும்பவும் அவரது பழைய மசாலாக்களைத்தானே பார்க்கப் போகிறோம்?

மதி ஒளி ஷண்முகம்
(டைரக்டர், தயாரிப்பாளர்)

பதினாறு வயதினிலே, முள்ளும் மலரும், உதிரிப் பூக்கள் போன்ற இயற்கையான படங்களைப் பார்த்துத் தமிழக திரைப் பட ரசிகர்களின் ரசனை உயர்ந்திருக்கிறது. அந்த வளர்ச்சி எம். ஜி. ஆரின் பிரவேசத்தால் தடைப்பட்டுப் போகும்.

ஒரே ஆள் ஐம்பது பேரை அடித்து வீழ்த்துவதும் கதையிலே வரும் பாத்திரம் தேவையான வசனம் (Functional Dialogue) மட்டும் பேசாமல் தேவையில்லாத அரசியல் பேசுவதும், சுய புராணம் பாடுவதும் வளர்ந்து வரும் சினிமாவைக் கண்டிப்பாகக் கெடுக்கும். இப்பொழுது ரசிகர்களிடையே மோதலில்லை. உண்மையான சினிமா ரசனை மட்டுமே இருக்கிறது. எம். ஜி. ஆரின் வருகையால் மறு படியும் ரசிகர்களிடையே கட்சிச் சண்டை தூண்டி விடப்படும். குடும்பத்தோடு சினிமாப் பார்க்கும் அமைதி கெட்டுத் தியேட்டர் வாசலில் குண்டர்களின் ஆதிக்கம் அதிக மாகும். சினிமா உலகுக்கு நல்ல சலுகைகளைத் தமிழக முதல்வராக இருந்தபோது அளித்து வாழ வைத்த எம். ஜி. ஆர். இப்போது சினிமா உலகிலிருந்து ஒதுங்கி இருந்தே அதைக் காப்பாற்ற வேண்டும். பாதியில் நிறுத்தப்பட்டிருக்கும் படங்களை முடிப்பதை நான்

✖ மதிஒளி ஷண்முகம் ✖ சங்கர் ✖ ஆர். பி. ராமச்சந்திரன்





எதிர்க்கவில்லை. ஆனால் புதுப் படங்களை ஒப்புக்கொள்வது நல்லதல்ல. எம். ஜி. ஆர். டைரக்டராக இருந்து கொண்டு இளம் நடிகர்களை நடிக்க வைத்துப் படம் எடுக்கலாமே! இன்றைய இளைய தலைமுறையின் எதிர்ப்பு இல்லாமலிருக்குமே!

என் கருத்தைச் சொன்னேன். பிறகு அவர் இஷ்டம்.

குமாரி ஸ்வப்னா

எம். ஜி. ஆர். திரும்பவும் கலை உலகுக்கு வருவதால் நூற்றுக் கணக்கான தொழிலாளர்கள் நல் வாழ்வு பெறுவார்கள். ஸ்டண்ட் மாஸ்டர்களும், உதவியாளர்களும் இன்று வேலையே இல்லாமல் இருக்கின்றனர். எக்ஸ்ட்ராக்களுக்கு மிகவும் குறைவாக ஊதியம் தரப்படுகிறது. எம். ஜி. ஆர். படம் எனில் நியாயமான ஊதியம் கிடைக்கும். புற்றீசல் போல் வரும் தரமில்லாத மினி பட்ஜெட் படங்கள் கட்டுப்படுத்தப்படும். உண்மையான பொழுது போக்குச் சம்பவங்கள் கொண்ட படங்கள் எம். ஜி. ஆர். நடிப்பவைதாம். பட்டணத்தில் இருப்பவர்கள் மட்டுமல்ல, பட்டிக்காட்டில் இருப்பவர்களும் கூட எம். ஜி. ஆர். நடிக்கப் போகிறார் என்று கேள்விப்பட்டதுமே மெய் சிலிர்த்து மகிழ்கிறார்கள். இது பலருக்கு ஜீரணிக்க முடியாமல் இருக்கலாம். ஆனால் உண்மை அதுதானே?

பேட்டி : "சலன்"

இசை உலகு வரவேற்கும் பணி

"மாலை லஞ்சராரே", "ப்ருஹி முகுந்தேதி" போன்ற பாடல்களைத் தமிழ் நாட்டில் கேளாதவர் இரார். இவற்றை இயற்றியவர் சதாசிவ பிரம்மேந்திரர் என்னும் ஞானி. 18ம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்த இவர் தம்முடைய அனுபவங்களை அழகிய சொற்களில் வடமொழியில் அமைத்துள்ளார். ஆதிசங்கரர் பஜகோவிந்தம் பாடியதுபோல் இவர் இராமபிரான் பேரிலும் கண்ணன் பேரிலும் உள்ளத்தை உருக்கும் கீர்த்தனைகளை இயற்றியுள்ளார். "ஆனந்த பூர்ண போதோஹம்", "ஸர்வம் ப்ரம்ம மயம்" போன்றவைகளில் உயர்ந்த வேதாந்தக் கருத்துக்களை எளிய மொழிகளில் விளக்கியுள்ளார்.

இம்மகானின் கீர்த்தனைகளை பஜனை சம்பிரதாயத்தில் மிகவும் போற்றி வருகிறார்கள். இவற்றைக் கச்சேரிகளில் பாடிப் பிரபலப்படுத்திய பெருமை டாக்டர் செம்மங்குடி ஸ்ரீநிவாச ஐயர் அவர்களையே சாரும். ஏறக் குறைய ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் "வரகூர் பெரியவாள்" என்னும் துறவி இட்ட ஆணைப்படி அவர் சதாசிவ பிரம்மேந்திரரின் கீர்த்தனைகளைப் பாடி வருகிறார். பாடல்களுக்குத் தாமே இசையமைத்துள்ளார். அவற்றுள் "தத்வத் ஜீவத்வம்" என்ற ரேவாணி கீர்த்தனையும் "துங்கதரங்கே" என்ற குந்தலவராளி கீர்த்தனையும் குறிப்பிடத் தக்கவை.

சதாசிவ பிரம்மேந்திரரின் 23 கீர்த்தனைகள் இப்போது புத்தக வடிவில் ஸ்வரதாளக் குறிப்புடன் வெளியிடப் பட்டுள்ளன.

இவற்றுள் குறிஞ்சி, சங்கராபரணம், சாமா, மத்யமாவதி, காம்போதி போன்ற பிராசீன இராகங்களையும், சிந்து பைரவி, யமுனா கல்யாணி, பீலு போன்ற ஹிந்துஸ்தானி இராகங்களையும் செம்மங்குடி பயன்படுத்தியுள்ளார்.

ஸ்வரப்படுத்தியிருக்கும் முறை எல்லோரும் எளிதில் கற்கும் முறையில் அமைந்துள்ளது. புத்தகத்தின் கட்டுக்கோப்பு பாராட்டத் தக்கது.


டாக்டர் செம்மங்குடி ஸ்ரீநிவாச ஐயரின் சீடர்கள் நடத்தும் டிரஸ்டு இந்நூலை வெளியிடுவதன் மூலம் எல்லோருக்கும் பயன்படக்கூடிய மகத்தானதொரு தொண்டு செய்துள்ளார்கள்.

இசை உலகம் இந்நூலை விரும்பி வரவேற்கும்.



ஸ்ரீ சதாசிவ பிரம்மேந்திரரின் கீர்த்தனைகள் டாக்டர் செம்மங்குடி ரா. ஸ்ரீநிவாச ஐயர் ஸ்வரப்படுத்தியது. செம்மங்குடி ஸ்ரீநிவாஸய்யர் பொன் விழா டிரஸ்டு வெளியீடு. விலை: ரூ. 6. விலாசம்: 182, வித்யாதீர்த்த நகர், ஸெயின்ட் மேரிஸ் சாலை, சென்னை-18.

-டாக்டர் **எஸ். இராமநாதன்**


பதவி யாசகம்!
பிரதமர் அலுவலகம்
பன்சிலால்
என்னையும்
பிரசிடெண்ட் ஆக்குங்க!
கிரீடம்
உங்களுக்குத்தான்!
வருங்கால
முதலமைச்சர்
கலைஞரே!
ஆர்.வி. சுவாமிநாதன்
பேச்சு
ஆர்.வி. சுவாமிநாதன்
பக்கத்திலே
அம்மையார்
நிக்க முடியுங்களா?
உடன்பிறப்பு



1980 மார்ச் 9
சித்தார்த்தி மாசி 26
மலர்: 38 இதழ்: 32



கல்கி

தமிழ்த்திரு நாடு தன்னைப் பெற்ற எங்கள் தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்

சத்தான சந்தானம்

தன்னலனை அடியோடு துறக்கவேண்டும்; லட்சிய வாழ்க்கை நடத்த வேண்டும்; தேசத்தை உயர்த்தவேண்டும்; இவற்றிலேயே நிறைவான மகிழ்ச்சி காணவேண்டும் என்று எண்ணிய ஓர் அதிசயத் தலைமுறை இத்தேசத்தில் இருந்தது! அவர்களிலும் சுதந்திரம் வந்த பிறகு அடியோடு மாறிப்போனவர் பலர். மாறாத சிலரில் கே. சந்தானம் ஒருவர்.

மனிதனை உயர்த்துகிற பண்புகள் என்னென்னவோ அத்தனையையும் கொண்டிருந்தார் என்று ஒரே வாக்கியத்தில் எளிதாக சந்தானத்தை வர்ணித்து விடலாம்.

அவர் செய்யாத தியாகமில்லை; வகிக்காத பதவியில்லை. தினசரி பத்திரிகைகள் பட்டியல் தருகின்றன, பத்திரிகையாசிரியராகவும் விளங்கிய இவர் வகித்த இதர பதவிகளைப் பற்றி. தியாகங்களை அவர் பறைசாற்றிக் கொண்டதுமில்லை; பதவிகளைத் தலைக்கேற விட்டதுமில்லை.

சத்தியவான்-அதனாலேயே அவரது வாழ்க்கை மாலை நேரத்தின் நிச்சலனமான தெளிந்த ஏரி போன்று என்றும் கம்பீரமானதாக விளங்கியது.

பேரறிவாளன் - வடமொழி, ஆங்கிலம், தமிழ், இலக்கியம்; பொருளாதாரம், சட்டம், தத்துவம், அரசியல் அனைத்திலும் நிபுணர். தளும்பாத நிறைகுடம். யாரும் அணுகுதற்கு எளிதானவர். இந்த அடக்கம் அவரை அமரனாக்கியது.

அச்சமற்றவர் – சொல்லவேண்டியதை, சொல்லவேண்டிய நேரத்தில் சொல்லியே தீர்வார். ஆனால் சொல்லில் நயமிருக்கும். யாருடைய செயலை விமர்சித்தாரோ அவரே விரும்பிக் கேட்கும் அல்லது படிக்கும்படியிருக்கும். செயலை விமர்சிப்பாரே யன்றி செயலாற்றியவரை யல்ல. அதனால் அவருக்கு எதிரிகளே இருந்ததில்லை.

சத்தானவர் – சத்து என்பதற்குப் பல பொருள்கள் உண்டு. உண்மை, அழியாதது, சாரம், அறிவு, ஒழுக்கத்தில் சிறந்தவன் என்று எந்த அர்த்தத்தை எடுத்துக் கொண்டாலும் அது சந்தானத்துக்குப் பொருந்தும்.

சாந்த சொரூபி - காந்தியிடம் கற்றாரோ, இயல்பாகவே பெற்றாரோ, சுடுசொல் அறியாதவர்.

பரம பக்தர் - இன்று வைகுண்ட பதவி அடைந்தார்.

நீண்ட நெடுங்காலம் வாழ்ந்து முதிர்ந்து உதிர்ந்த சந்தானம், காந்திய சகாப்தத்தைத் தொடக்கம் முதல் இறுதிவரை பார்த்தார். பின்னாளில் காந்தியம் இங்கு காற்றிலே பறக்க விடப்படுவதையும் கண்டார். பாரத ஜனநாயகம் செயல்படுவதைப் பார்த்துப் பெருமித முற்றவர், அதன் பலவீனங்களையும் உணர்ந்து செப்பனிட ராஜாஜியுடன் இணைந்து பாடுபட்டார். நேருவின் உற்ற தோழராய் விளங்கிய சந்தானம், பிற்காலத்தில் நெருக்கடி நிலைப் பிரகடனத்தையும் பார்த்தார். அதன் பின்னர் நடந்தவற்றையும் கண்டார். இதனாலெல்லாம் அவர் மனமுடைந்து போனதாகக் கூறமுடியாது. ஏனெனில் மனித குலத்தின் சாரமான நல்விதயத்தில் அவர் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டிருந்தார். மீண்டும் இங்கே வசந்தம் தவழும் என நம்பினார்.

அவரது நம்பிக்கை வீண் போகாதிருக்க இளம் தலைமுறையினர் அவரை முன் மாதிரியாகக்கொண்டு அவரது சந்தானங்களாகவே உருவாக வேண்டும்.

திருப்பதிக்கு அருகிலுள்ள அந்த நகரி மூக்கில் தீபம் தெரிகிறதா என்று பால்மர்ஸன் கேட்டார்.

இந்தியக் கடற்கரைக்கு அருகில் அவரது கப்பல் வந்திருக்கும் என்று அனுமானம்.

எஸ்டன் கண்கள் வலிக்க எல்லாத் திசைகளையும் பார்த்தார். மை இருட்டு, பொட்டு வெளிச்சம் இல்லை. ஊமை மினுப்பு கூட வானில் இல்லை. கப்பலும் கடலும் அந்தகாரத்தில் கலந்திருந்தன.

எத்தனையோ வித ஆபத்துக்களை அனுபவித்திருந்த எஸ்டனுக்குப் பீதி ஏற்பட்டது.

-காப்டன்! நாம் ஒரு பெரிய ஆபத்தில் மாட்டப் போகிறோம் என்று கூறினார்.

-எஸ்டன் என்றார் காப்டன். -தைரியம் இழக்காதே கேப் ஹார்னை விட உலகத்தில் அட்டூழியமான இடம் கிடையாது! அதையே இரு முறை கடந்திருக்கிறேன், என்றார், நிதானமாக.

மேல் தளத்தில் நிற்க முடியவில்லை.

காற்று அவர்களைப் பிடுங்கி வெளியே எறிந்துவிடும் போல.

உள்ளே அலைச்சாரலும், முழு அலைகளும் தாரானமாக வீசின.

-காப்டன்! பெரிய ஆபத்து! காற்று விசை அதிகமாகிறது. கப்பல் கொம்பு சுற்றுகிறது என்றார் எஸ்டன்.

காற்றில் பேரோசை வந்துவிட்டது.

கப்பலும் மாறி மாறிச் சுழன்றது. அதை உணர முடிந்தது, பார்க்க முடியவில்லை.

-வாருங்கள், கீழே போகலாம், என்றார் எஸ்டன் ஆத்திரத்துடன். மேலே நிற்க முடியவில்லை.

காப்டன் பதில் பேசவில்லை.

காபின் கைப் பிடியைப் பிடித்து வெறியுடன் இருட்டைப் பார்த்தார்.

அவர் கண்களில் தெரிவது என்ன?

அது என்ன ஜோதி?

10

"The clouds gathering thick upon us and the winds, singing and whistling most unusually.... day turned into night, the blackness of the heaven......"

-வில்லியம் ஸ்ட்ராசியின் அனுபவங்கள். 'எலிசபெத் கால கப்பல் பிரயாணங்கள்' என்ற நூலில் இருந்து.

மல்லிக் பார்க்க, பிரத்தியேக வழியில் ரங்கூன் பங்களாவை நோக்கிப் போய்க் கொண்டிருந்தவன் அந்த மீசைக்காரன், பாதுகாக்கப்பட்ட இடத்தில் மல்லிக் பார்த்த அதே ஆசாமி! சொல்லப் போனால் அவன் தலையில் கும் கொடுத்தவனும் அவன் தான்!

இவனா!

அந்த ஆள் நீள நடந்து போனான். திரும்பவில்லை.

மல்லிக் யோசித்துக் கொண்டே கிருஷ்ணனுடன் நடந்தான்.



இந்த மீசைக்காரனுக்கும் இந்தச் சம்பந்த சாமிக்கும் தொடர்பு உண்டா?

சம்பந்தசாமி சொல்லித்தான் மீசைக்காரன் அந்தப் பாதுகாக்கப்பட்ட இடத்தில் தோண்டினானா?

அந்த டிகேண்டர் சீசா பார்த்தோமே, அது அங்கேதான் கிடைத்ததோ?

கிருஷ்ணனும் அவனும், சிறிது தூரம் போன பின், இருவரும் ரொம்ப இதமாக விடைபெற்றுப் பிரிய

கிருஷ்ணன் கடற்கரைப் புதுப் பகுமை களைத் தேடிப் போனார்.

—டிகேண்டர் பாட்டில்! அது என்னடா? என்றான் கோபி.

அவர்கள் ஐந்து ரூபாய் அறையில் இருந்தார்கள். ருக்மிணி விலாஸ் என்று ஓட்டலின் பெயர். ஊர் பூத்தளம். களிநாகவாபுரத்திலிருந்து ஐந்தாவது மைலில் இருந்தது.

நகரத்தின் ஆரம்ப லட்சணங்களுடன் இருந்தது ஊர். அங்கிருந்துதான் இனி மேற்கொண்டு காரியத்தைக் கவனிப்பது என்று தீர்மானித்திருந்தார்கள்.

—மது வைக்கும் சீசாடா அது! வண்டலை வடிகட்ட ஏதுவாக இருக்கும் சீசா! அது அந்தச்சம்பந்தசாமி வீட்டிலே இருந்தது. அது வியல் மண்ணோட.

—அது என்னடா மண்ணு?

—பாதுகாக்கப்பட்ட இடத்திலே இருந்த மண்ணு அந்த ரகம்தான். அதனாலே அந்தப் பாட்டில் அங்கேதான் கிடைச்சிருக்கணும்.

—அந்த பாட்டில்லே என்ன விசேஷம்?

—அது கரும் பச்சைக் கலர் பாட்டில்! கழுத்தோரம் இரண்டு சதுர அங்குலத்துக்கு வேறு விதமா கலர் தெரிஞ்சது. உள்ளே எதுவோ ஒட்டிண்டிருக்குன்னு அர்த்தம்.

—என்ன இருக்கும்?

—கடிதம். அந்த நாளிலே பாட்டில்லே மெஸேஜ் வச்சுக் கடலிலே மிதக்க விடுவாங்க.

கோபி திகைத்தான்.

—எதுக்கு?

—உதவி கிதவி வேணும்னு செய்வாங்க! இங்கே இந்த பால்மர்ஸன் அது போல ஏதோ எழுதித் தன்னோட வச்சிருக்கணும். உதவி கிடைக்காம இறந்துட்டா பின்னாலே யாராவது அவரைப் பற்றிய விஷயங்களைப் புரிஞ்சுக்கிடணும்னு கடிதம் எழுதி வைச்சிருப்பார்.

கோபிக்கு அவன் சொல்வது ஆச்சரியமாக இருந்தது. —என்ன எழுதியிருப்பார்னு நினைக்கிறே?

—கப்பலுக்கு என்ன நேர்ந்தது. அது எங்கே போச்சு இதப் போல பல விஷயம் எழுதியிருப்பார்.

பளிச்சென்று கோபிக்கு வெளிச்சம்.

—பலே ஆராய்ச்சிடா! இப்போ அந்தப் பாட்டிலைப் போய்ப் பார்க்கணும்கிறயா?

—ஆமாண்டா. பார்த்தா ஏதாவது விஷயம் தெரிய வரும்.

—சம்பந்தசாமிகிட்டயே கேளேன்.

—ஐயோ! அவருக்கு நான் வந்ததே பிடிக்கலே. இதைப் போய்க் கேட்கப் போனா ஆபத்து. முக்கியமா ஜூலி விஷயம் அவருக்குத் தெரியக் கூடாது.

இருவரும் யோசித்தார்கள்.

இரண்டு நாட்கள் எதுவும் தோன்றவில்லை.

மூன்றாம் நாள் மல்லிக், —கோபி! இதுக்கு நியாயமான வழி கிடையாது. அநியாயத்திலே இறங்க வேண்டியதுதான்.

—என்ன வழி?

—திருட்டுத்தனமாப் பார்க்க வேண்டியது தான்.

—முடியுமா?

—முடியும். ராத்திரி வீட்டுக்குள்ளே புகுந்துட வேண்டியது.


—ஐயோ, சட்டப்படி குற்றம்டா!

—இருந்தாலும் செய்யத்தான் வேணும்,

இரவின் சில்க் இருட்டு. வானத்தில் நட்சத்திரங்களால் ஒரு பால்-வழிவு! சுத்தமான கண்ணுடிக் காற்று! மல்லிக்கும் கோபியும் வயல் வரப்பில் நடந்தார்கள்.

எட்டத்தில் பங்களா தெரிந்தது.

கீழ் வரிசை சன்னல்களில் வெளிச்சம் கொளுத்தி இருந்தது.



'பெண் பார்த்த' பின்னர்



என் நிறம் மட்டு என்றாராம்,
என்னைப் பார்க்க வந்தவர்.
என் கல்வி குறைவு என்றாராம்,
எதையும் எடைபோடும் அவர் அப்பா.
என் நகை போதாதாம் -
என் மாமியாராக வர இருந்தவர் கூற்று,
என்னை, நிறுத்து, அளக்கும்
இவர்க்கெல்லாம் தெரியாதவை ;
என் எண்ணத்தின் ஒளி,
லட்சியத்தின் கனம்,
கனவுகளின் வண்ணம்,
இன்னும்,
இவர்களை ஏற்கும் என் இங்கிதம்,

—அ. ஆசிர்வாதம்

நெருங்கினார்கள்.

ஐந்தடிக் காம்பவுண்ட்
—நீ இருந்துக்கோ! நான் போயிட்டு வர்றேன்.

மல்லிக் காம்பவுண்டை ஏறிக் குதிக்க உள்ளே அயல் சங்கீதம் ஜிஜிஜம் ஜம்ஜா. ஜிஜிஜம் ஜம்ஜா என்று தாளம் போட்டுக் கொண்டிருந்தது.

பங்களாவின் பின்புறம் அது! எங்கும் இருட்டாகிக் கிடக்க, சில வெண்டிலேட்டர் இடுக்குகளில் வெளிச்சம் கசிந்து கொண்டிருந்தது.

உள்ளே எல்லோரும் என்ன செய்கிறார்கள்?
எம்பிப் பார்ப்பதற்கு வசதியாக சன்னல் வெளி விளிம்புகள் இருக்க, மெள்ள ஏறினான்.
வெண்டிலேட்டரை விண்டு பார்த்ததும் உள்ளே ஒரு மெல் வெளிச்சம் மரத்துக் கிடந்தது.

அநேகர் விமரிசையாகக் குடித்துக் கொண்டிருந்தார்கள். சில பெண்கள் பற்று ஆடைகளுடன் மது வகைகளை வழங்கிக் கொண்டிருந்தார்கள்.

ஒரு மேஜையில் விநோதச் சீசாக்களில் வர்ணத் திரவங்கள் பல உயரங்களில்!
பெண்கள் இருபதுக்கு அந்தப்புறமும் இந்தப்புறமும் இருக்க,

உடம்புகளில் மதனனின் அழைப்புக்கள் பளீர் பளீர் என்று துள்ளின.
சம்பந்தசாமி மகா ரசிகர் என்றாரே, கிருஷ்ணன். ரசிகர்தான்!
இப்படியே அடுத்த அறையும் டிட்டோ!

மல்லிக்கிற்கு அது நல்ல சமயம் என்று தோன்றியது.
அந்த அரும்பொருள் ஹால் எங்கிருக்கிறது என்று தெரியும்.

அதன் வெண்டிலேட்டர் தனியாக ஒதுங்கி இருந்தது.
உயரத்தில் ஏறி, பல பிரயத்தனங்கள் செய்த பின், வெண்டிலேட்டர் சிக்கலைத் தவிர்த்துப் பிரித்தான்.

நடுக் கம்பியில் கயிற்றைக் கட்டி உள்ளே குதித்தான்.
இருட்டில் முதலில் எதுவும் தெரியவில்லை,

பிறகு அந்த அரும்பொருட்கள் திட்டுத் திட்டான உயரங்களில் தெரிய, மனம் படபடத்தது.

ட்ரிக்பிட் வுட்கள் தாண்டி, சீசாக்கள் பகுதி வந்து அந்த டிகேண்டர் பக்கம் வந்தான்.


இதயம் உடம்புக்கு வெளியே அடித்தது.
அவசரமாகச் சீசா மீது கை வைத்து அதை எடுத்தான்.

ஒரு அலாரம் திடீரென்று பொழிந்தது. அந்த ஹால் எங்கும் வெளிச்சம் சரீர் என்று விழுந்தது.
திடுக்கிட்டு நிமிர்ந்தான் மல்லிக்.

20 அம்சம்!

எங்களது கப்பல்
மூழ்கிக் கொண்டிருக்கிறது.
புன் முறுவலுடன்
கேப்டன் வந்தார்.
'சக பாடிகளே!
பிரயாணிகளே!
முத்துக் குளிப்பதற்கு,
இதுவே தருணம்.
நமது கப்பலின்
ஓட்டைகளை,
முத்துக்களாலேயே
அடைப்போம்.
எல்லோரும் கடலில் குதியுங்கள்.
ஜெய்ஹிந்த்.

—மு. கோசலராமன்



வொய்ட் கதவைத் திறந்து வெளியே வந்தார். டார்வின் பெரிய லாரல் (ஹார்டி) புன்னகையோடு நின்ருர். வாய் ரொம்ப தூரம் கிழிந்திருந்தது.

—என்ன? என்ருர் வொய்ட், அரை குறை உடுத்தலில் பொத்தான்களை மாட்டிக் கொண்டு. அவர் கைகளில் இன்னும் கேடரீனுவின் ஸ்பர்சம் ஒட்டியிருந்தது.

—லைஃப் லைன்லே நாலு இழுப்பு இழுத்தாங்க!

—ஓ! என்ருர் பரபரப்புடன் வொய்ட். —அதற்குள் ஏதாவது சிக்கி விட்டதா?

—இருக்கும்.

முக்குளிப்பவன் நம்பர் ஒன்று இப்போது சமிக்ஞை செய்துவிட்டு மேலே வந்துகொண்டிருந்தான்.

வொய்ட்டுக்கு ஆவல் கூடியது. தளத்தில் இருப்புக் கொள்ளவில்லை. நேராக டைவிங் பிளாட்பாரத்துக்குப் போனுர். கடலுக்குள் உற்று நோக்கினுர். லைஃப்லைன், ஏர்—பைப் இரண்டும் ஜோடிகளாகத் தண்ணீருக்குள் ஓடியிருந்தன. அவை இப்போது அசைந்துகொண்டிருந்தன.

கடலில் முக்குளிப்பவன் விரைவாக மேலே வந்துவிட முடியாது.

முப்பத்து மூன்று அடிக்குக் கீழே உள்ள ஆழத்தில் இருப்பவன் மேலே வரும்போது நிறைய எச்சரிக்கைகளைக் கடைப்பிடிக்க வேண்டும். மேலே ஏற ஏறத் தண்ணீரின் அழுத்தம் குறைவதால், அந்தத் திடீர் அழுத்தக் குறைவுகள் அவனது உடம்பில் பெரிய உபாதைகளை ஏற்படுத்தும். சிலர் இறந்துகூட விடுவார்கள். எனவே ஒவ்வொரு பத்துஅடி ஆழத்திலும் அவர் பல நிமிடங்கள் நின்று நின்று வரவேண்டும்.

எனவே ஆள் மேலே வர 45 நிமிஷம் ஆகும் என்று வொய்ட்டுக்குத் தெரியும். நேரத்தைப் பொறுமை யிழந்து போக்க,

காற்றுக் கொப்புளங்கள் மேலே வர ஆரம்பித்தன.

—இதோ, இதோ, என்று டார்வின் கத்தினுர். (தொடரும்)

FOCUS

"பார்த்திபனுடைய புதல்வன் விக்ரமன் சுதந்திர சோழ நாட்டின் சிம்மாதனம் ஏறியபோது அடைந்த மகிழ்ச்சியை நானும் அடைந்தேன்" என்று "கல்கி" குறிப்பிடுகிருர் என்ருல் 'அது எந்தச் சந்தர்ப்பத்தில்?' என்று அறிந்து கொள்ள உடனே ஆர்வம் உண்டாவது இயல்பு.

ஸ்ரீ கே. வி. ரங்கசாமி ஐயங்காரிடமிருந்து பார்த்திபன் கனவு நாவலுக்கு ஒரு பாராட்டுக் கடிதம் பெற்றபோதுதான் "கல்கி" அவ்விதம் மகிழ்ந்தார். சென்னை பச்சையப்பன் கல்லூரி துணைப் பேராசிரியராகவும், பின்னர்; திருவனந்தபுரம் மகாராஜா கல்லூரி, காசி மத்திய ஹிந்து கல்லூரி, திருப்பதி ஓரியண்டல் ஆய்வு நிலையம் ஆகியவற்றில் முதல்வராகவும் விளங்கிப் புகழ் பெற்ற பேராசிரியர் கே. வி. ரங்கசாமி ஐயங்கார், சரித்திரம், பொருளாதாரம், நீதி சாஸ்திரம் ஆகியவற்றில் நிகரில்லாப் புலமை வாய்ந்த நிபுணர்; ஆராய்ச்சியாளர்.

இந்த வருஷம் அவருடைய நூற்ருண்டினை அவரால் பயனுற்ற எண்ணற்ற மாணவர்கள் நன்றியோடு கொண்டாடுகின்றனர்.

பார்த்திபன் கனவுக்குப் பெற்ற பாராட்டு, "கல்கி"யை சிவகாமியின் சபதத்துக்கு முன்னுரை எழுதித் தருமாறு அவரைக் கேட்கத் துணிவை அளித்தது. அவரும் ஒப்புக்கொண்டு ஆங்கிலத்தில் எழுதித் தந்த முன்னுரை, சரித்திரக் கதை எப்படி அமைய வேண்டும் என்பது பற்றிய ஓர் அற்புத ஆராய்ச்சிக் கட்டுரையாகவே திகழ்கிறது! "தனி நூலாகவே வெளியிடத் தகுதி வாய்ந்தது; வருங்காலத்தில் தமிழில் சரித்திரக் கதைகள் எழுதப்போகும் அனைவருக்கும் வழிகாட்டி" என்கிருர் "கல்கி" தமது நன்றியுரையில்.

பழைய வடமொழி நூல்களில் மதிப்புமிக்க பலவற்றைத் தேடிப் பிடித்து, திருத்தம் செய்து பதிப்பிப்பதிலும் தம்முடைய ஆராய்ச்சிகளைத் தொடர்ந்து உரைகள் நிகழ்த்துவதிலும் அவர் காட்டிய ஆர்வத்துக்குப் பல விருதுகளைப் பெற்றவர் கே.வி. ரங்கசாமி ஐயங்கார். நாமும் நமது நினைவஞ்சலியைச் செலுத்தி ஒரு தவப் புதல்வனைக் குறித்துப் பெருமிதம் கொள்வோம்.

▫ கே. வி. ரங்கசாமி அய்யங்கார்





⌘ ராஜம் கிருஷ்ணன்

ஹேமா ஆனந்ததீர்த்தனின் பதிலைப் படித்த பிறகும் ராஜம் கிருஷ்ணன் தமது கருத்தில் உறுதியாக நிற்கிறார்:

ஆளுமை வளரட்டும்; நொய்மை நலியட்டும்

திரு ஆனந்த தீர்த்தன், நான் சாகித்ய அகாதமியையும், திரு தி. ஜானகிராமனையும் தாக்கியுள்ளதாகக் கூறியுள்ளார். ''தாக்குதல்'' என்ற சொல்லே தவறு.

ரொம்பவும் வருத்தத்தோடு நான் பேட்டி அளித்தேன். கோபத்தோடு அல்ல. ''பெண்களை இழிவு படுத்துகிறார்கள் என்று கூக்குரல் எழுப்புவது சிலருக்கு Phobia ஆகிவிட்டது'' என்கிறார் ஆனந்த தீர்த்தன். எனக்கு ஒரு Phobia வும் இல்லை. இந்தச் சமுதாயத்தில் ஒரு நல்ல மாறுதலை உண்டாக்க வேண்டும் என்ற ஆர்வத்துடன், முடியும் என்ற நம்பிக்கையுடன் இருக்கும் ஓர் இலக்கியப்படைப்பாளி என்ற முறையில் பேசினேன்.

திரு. ஜானகிராமனின் எழுத்துத் திறமையை நான் குறைவாகக் குறிப்பிடவில்லை. சாகித்ய அகாதமி என்ற நிறுவனம் (நான் மீண்டும் வலியுறுத்துகிறேன்) ஒரு தேசிய நிறுவனம். இந்த நாட்டின் உயரிய சிந்தனைகளைப் பிரதிபலிக்கும் எழுத்துக்களைத் தேடிப் பிடித்து அது கௌரவிக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன். இது ஜனநாயக நாடு. எதையும் எழுதுவதற்கு, பேசுவதற்கு யாருக்கும் உரிமை உண்டு. இன்று முக்கால்வாசிப் பத்திரிகைகள் வாசகர்களைக் கவருவதாகக் கூறிக்கொண்டு, பாலுணர்வு, வன்முறைகளை வளர்க்கும் விதமாகவே வெளியாகின்றன. சோரம் போவது, கற்பழிக்கப்படுவது போன்ற விஷயங்களையே திரும்பத் திரும்பத் தருகின்றன.

நம்முடைய இளம் தலைமுறையினர், குறிப்பாக பெண்கள், பரிணாம வளர்ச்சியின் ஒரு திருப்பு முனையில் இன்று இருக்கிறார்கள். நான் பழைமை விரும்பியும் அல்ல; புதுமைக்கு எதிரியும் அல்ல. ஆனால், பழமை என்று பழித்துரைத்து இன்றைய இளம் பெண்களைத் தன்னம்பிக்கை இழக்கச் செய்யக் கூடாது. புதுமை என்ற மாயையைத் தோற்றுவித்து இன்றைய வாழ்க்கைப் பிரச்னைகளை எதிர்நோக்கத் துணிவில்லாதவர்களாக்கிவிடவும் கூடாது. நல்ல ஆளுமை உருவாக விடாமல், ஒரு கணவில் மிதக்கக் கூடிய நொய்மையையே இன்றைய பெரும்பாலான ''இலக்கியங்கள்'' வளர்க்கின்றன.

இன்றைய சமுதாயத்தில் பெண், கல்வியிலும், தொழில் நுட்பத்திலும் மற்ற எல்லா துறைகளிலும் முன்னுக்கு வந்தும் சமுதாயத் தீமைகள் பல இன்னும் ஒழியவே இல்லை. அதற்குக் காரணம் பெண்கள் சிந்திப்பதில்லை. அவர்களைச் சிந்திக்கவும் விடுவதில்லை. இப்படிப் பல இலக்கிய கர்த்தாக்கள் இளைய தலைமுறையினரைச் சிந்திக்கச் செய்யக் கூடாது என்று கங்கணம் கட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

இதை நண்பர், எனது தாழ்வு மனப்பான்மை என்று சொல்வாரேயானால் அதைப் பெருமையாகவே கருதுகிறேன். ஆனந்த தீர்த்தன் நான் குறிப்பிட்டுள்ள பிரச்னையைத் தொடவே யில்லை. நான் குறிப்பிட்டுள்ள அகாதமி பரிசு பெற்ற ''சக்தி வைத்தியம்'' என்ற கதையில், ஒரு சமுதாயப் பொறுப்போடு எழுதப்பட்ட சிறப்பு இருக்குமானால் அதை அவர் எடுத்துக் காட்டட்டும். அதை விடுத்து 'சுய புராணம்' எதற்கு?

'இலக்கியம்' என்பதற்கு அவரவர் விருப்பத்துக்குத் தகுந்தாற்போல் பொருள் கூறிக்கொள்கிறார்கள். படைப்பு இலக்கியம் என்பது நீதிக் கதையல்ல; எனக்குத் தெரியும். மனித வாழ்க்கையைப் பிரதிபலிப்பது அது. ஆனால் அந்தப் பிரதிபலிப்பு படிப்பவர் மனத்தை உயர்த்துவதாக இருக்க வேண்டும். அது எழுத்தாளரின் பொறுப்பு. இன்றைய வாழ்க்கையின் பிரச்னைகளை மனிதாபிமானத்தோடு அணுகுவதற்கு அறிவார்ந்த முறையில் ஒரு வழிகாட்டியாக இருக்கக் கூடிய படைப்பை ஒரு நல்ல படைப்பிலக்கியம் என்று நான் கருதுகிறேன்.

இப்போதெல்லாம் இதுமாதிரி ஏதாவது கிளப்பி விட்டு ஒரு ''கோழிச் சண்டை'' மாதிரி மட்டமான முறையில் பிராபல்யம் தேடுவது வழக்கமாகி விட்டது. இதைக் கண்டு முதலில் நான் கூசினேன். ஆனால் நீங்கள் வந்து என்னைக் கேட்டபோது எனது கருத்தைத் தெரிவிக்க வேண்டியது கடமையாகிவிட்டது. பேட்டி: ''சிக்கி''

⌘ ஹேமா ஆனந்ததீர்த்தன்



சினி ஸ்டில்லும் சிந்தனையும்

ரேகாவை நோக்கும் போது...



சாத்தமான தர்மம் எனப் பொருள்படும் ''இமான்தரம்'' என்ற இந்த ஹிந்திப் படத்தின் ஸ்டில்லைப் பார்த்ததும் தமக்கு நினைவு வந்த பல விஷயங்களை நடிகர் **விஜயன்** கூறினார்:

பின்னணியைக் கவனியுங்கள். சுமார் ஐந்தாறு வருடங்களுக்கு முன்பு நான் ஒரு தனியார் நிறுவனத்தில் வேலை செய்துகொண்டிருந்தேன். எங்கள் அலுவலகத்துக்குப் பக்கத்தில் பல மாடிக் கட்டிடம் ஒன்று வேகமாகக் கட்டப்பட்டு வந்தது. அன்று ஏனோ என் மனதிலே சரியில்லை. ஒரு மணி நேரம் பர்மிஷன் போட்டுவிட்டு வெளியே வந்தேன். ஏதோ உந்துதலால் பக்கத்தில் கட்டப்பட்டு வரும் கட்டிடத்தை அண்ணாந்து பார்த்தேன். அதே சமயம் மேலிருந்து ஒருவர் கீழே விழ, 'ஐயோ' என்று அவர் அலற, என்னுடைய 'ஆ' என்ற அலறலும் இணைந்தன. அவர் கீழே விழுந்து அடைந்த ரத்தக் காயங்களைப் பார்த்தது, என்னை ரொம்ப நாளைக்கு உலுக்கி எடுத்துக் கொண்டிருந்தது.


அடுத்து இந்தப் படத்தில் என் கண்ணில் படுவது நீயணைப்பு வண்டிதான். எனக்கு நான்கு அல்லது ஐந்து வயது இருக்கும்போது பெரியவர்கள், ''எப்பொழுது நீயணைப்பு வண்டியின் மணியோசை கேட்டாலும் ஒரு விநாடி நின்று, 'உயிர்ச் சேதம் எதுவும் இல்லாதிருக்க வேண்டும் ஆண்டவா' என்று வேண்டிக் கொள்ள வேண்டும்' என்று சொல்லித் தந்திருந்தார்கள். நானும் விடாமல் அதைக் கடைப் பிடித்துக் கொண்டு வந்தேன். இப்போது கூட என்னையறியாமல் அப்படி நடந்துகொள்வதுண்டு.

அது போகட்டும், ரேகாவை நோக்கும் போது அவர் அணிந்திருக்கும் சாதா புடவை தான் ஆச்சரியத்தை அளிக்கிறது. இப்பொழுதெல்லாம் ஹீரோயின் என்று வந்து விட்டால் பாத்திரத்துக்கு ஏற்பத் தான் மாற வேண்டும் என்பதைவிடத்தனக்கு ஏற்றதாகப் பாத்திரம் மாற வேண்டும் என்று விரும்புகிறார்கள். ஆனால் ரேகா அணிந்துள்ள புடவை எத்தனை எளிமை! ரொம்பக் காலத்துக்கு முன்பு நடந்த சம்பவம், எனது பக்கத்து வீட்டில் ஓர் அழகான பெண். அந்தப் பெண் எப்பொழுதுமே சாதாரணமான புடவையே உடுத்துவாள். நாங்கள் எங்களுக்குள் பேசிக் கொள்வதுண்டு, 'நாகரீகம் எங்கோ சென்று கொண்டிருக்கும் பொழுது இந்தக் காலத்தில் இப்படியும் ஒரு பெண்ணா?' என்று. வெளியே போனாலும், சரி, பண்டிகைக் காலமானாலும் சரி, சாதாரணப் புடவைதான். அந்தப் பெண்ணுக்குத் திருமணம் நிச்சயமாயிற்று. சரி, அன்றாவது நிச்சயம் பட்டுப் புடவை அணிவாள் என்று எதிர்பார்த்துக்கொண்டிருந்தோம். ஆனால் எங்கள் எண்ணத்தில் எல்லாம் மண்ணைத் தூவிவிட்டு, பாம்பு கடிக்க அவள் இறந்துவிட்டாள். உடலைச் சாதாரணப் புடவையால்தான் போர்த்தினார்கள். நாங்கள் எல்லோரும் அழுதுவிட்டோம்.

பேட்டி : **சலன்**

அடுத்த பேட்டி: **ஜெயலலிதா**





ஒரு ரகசிய சந்திப்பு அம்பலமாகிறது!



ராமப்ரியா

“எனக்கு யார் மாமி பெண் கொடுப் பார்கள்? நான் இனி கல்யாணமே பண்ணிக்கொள்ளப் போவதில்லை'' என்று ஒருவித விரக்தியுடன் சொல்வான் ராகவன். அவன் போக்கு எனக்குப் புதிராக மட்டும் இல்லாமல் பயமாகவும் இருந்தது.

ராகவனுக்குப் படிப்பு, அழகு, உத்தியோகம், கை நிறையச் சம்பளம் எல்லாம் இருந்தும் ஏனோ அவன் கல்யாணம் தட்டிக் கொண்டே வந்தது.

இந்தச் சமயத்தில்தான் மைதிலியைப் பெண் பார்க்க ஹைதராபாத்திலிருந்து யாரோ வரப் போகிறார்கள் என்று மைதிலியின் அம்மா சொன்னாள். அவர்களும் எனக்குப் பிராண சிநேகிதர்கள். என்னவோ என் பெண்ணைப் பெண் பார்க்க வர மாதிரி தரையில் கால் பாவாமல் பறந்தேன். ரயில் வருவதற்கு முன் அவர்கள் வீட்டுக்கு ஆஜரானேன். அவர்களுக்கு டிபன் செய்வதிலிருந்து மைதிலிக்கு அலங்காரம் பண்ணுவது வரை எல்லாவற்றிலும் உதவி செய்தேன். மைதிலியும் அழகான, அடக்கமான பெண். சங்கீதத்தில் பி.ஏ. ஓரளவு வீட்டு வேலைகளும் செய்வாள். பையன் மிலிடரி சர்வீஸில் இருப்பதாகவும் நல்ல சம்பளம் என்றும் சொன்னார்கள்.

பிள்ளை பெற்றோருடன் வந்தான். பரஸ்பர க்ஷேமலாபங்கள், பொதுவான பேச்சு, டிபன் இத்யாதி எல்லாம் ஆயின. மைதிலியே டிபன்களைக் கொண்டு வந்து பரிமாறினாள். ஒருவருக்கொருவர் பார்த்துக் கொண்டார்கள். மைதிலியைப் பாடச் சொன்னார்கள்.

ஊருக்குப் போய் மற்ற விவரங்களை எழுதுவதாகச் சொல்லிவிட்டுப் போனார்கள். ஆனால் பிள்ளை வீட்டாரிடமிருந்து நல்லதாகக் கடிதம் வரவேண்டுமே என்று நான்தான் அதிகமாகக் கவலைப்பட்டேன்.

நான் அடுப்படியில் வேலை செய்யும்போது ''மீனு! மீனு!'' என்று பெரிய குரலெடுத்துக் கொண்டு வந்தாள் மைதிலியின் தாய்.

''என்ன மாமி! என்ன சமாசாரம்? ஏதேனும் கடிதம் வந்ததா?'' என்று ஆவலை அடக்க முடியாமல் கேட்டேன்.

''அதை ஏன் கேட்கிறே! அவா நம்ம பெண்ணை மட்டும் பார்க்க வரலேடி! இன்னும் இரண்டு மூன்று பெண்களைப் பார்த்திருக்கிறார்கள். நம்ம மைதிலியை விட ஒசத்தியாகத் தெரிந்த இன்னொரு பெண்ணை நிச்சயம்செய்துவிட்டுப் போய் விட்டார்களாம்!'' என்று குடியே முழுகிவிட்ட மாதிரி அழாக்குறையாகச் சொன்னாள் சிவகாமி.

''இதற்கு ஏன் இப்படிப் பதற்றமடைய வேண்டுமாம்! மைதிலி என்ன ஊசிப்போன பண்டமா? ஊறுகாயைக் கூட வெய்யிலில் வைத்துப் பாதுகாக்கிறோம். பெண் என்ன அதற்கும் கேவலமானவளா? இந்த மடையன் இல்லாவிட்டால் இன்னொரு...'' என்று சொல்லி முடிப்பதற்குள் ராகவன் வந்து நின்றான்.

''யாரை மாமி மடையன் என்கிறீர்கள்?'' என்று சிரித்துக் கொண்டே கேட்டான் ராகவன்.

அவன் திடீரென்று வந்து இன்னொரு மடையனின் பட்டத்தை வாங்குவதற்கென்றே வந்தது போல நின்றதைப் பார்த்தவுடனே என் மண்டையில் பளிச்சென்று ஒரு பொறி தட்டியது.

''உனக்கு ஒன்றுமில்லை. என்னமோ எங்களுக்குள் சில அந்தரங்கங்கள்!'' என்று சொல்லி மழுப்பினேன். ''மாமி! இவன் ஒரு எஞ்ஜிபில் பாச்சிலர். எம். ஏ. பட்டதாரி. நாலு இலக்கம் சம்பளம் வாங்கு

கிறான். பிக்கல் பிடுங்கல் கிடையாது. நல்ல கௌரவமான குடும்பம். இவனைப் பெற்றவர்கள் ரொம்பப் பண்பும் இங்கிதமும் உள்ளவர்கள்!'' என்னை அறியாமல் மளமளவென்று அடுக்கிக் கொண்டே போனேன்.

''மாமி! இப்ப நிறைய தரிந்து பேப்பரில் 'மாட்ரிமோனியல்' விளம்பரங்களைப் படிக்கிறீர்களாக்கும்! கடகடவென்று கடம் பண்ணி ஒப்பிக்கிறீர்களே!'' என்று இடையில் மறித்தான் ராகவன். சிவகாமு மாமி ராகவனின் ஹாஸ்யத்தை வெகுவாக ரசித்தபடி தலைப்பைச் சற்றே இழுத்துப் போர்த்திக் கொண்டாள். ஒருவேளை இவனே வருங்கால மாப்பிள்ளையாக வந்துவிட்டால்...? பாவம், பெண்ணைப் பெற்றவர்கள்!

''நீங்கள் உடனே மைதிலி ஜாதகத்தைக் கொண்டு வந்து கொடுங்கள். நான் ராகவனின் வீட்டுக்குப் போய்க் கொடுத்துவிட்டு அவன் ஜாதகத்தை உங்களிடம் கொடுக்கிறேன். ஜாதகம் பொருத்தமாக இருந்தால் மேலே நிமிஷமாக எல்லாவற்றையும் முடித்து விடலாம்!'' என்றேன் தணியாததொரு உற்சாகத்துடன்.

சிவகாமு மாமியும் மனத்தில் ஒரு புதிய தெம்பை வரவழைத்துக் கொண்டு வீட்டுக்குப் போனாள்.

''என்ன மாமி இதெல்லாம்!'' என்றான் ராகவன். அவன் குரலிலும் அவனை அறியாமல் ஒரு தெம்பு இருப்பதை என்னால் உணர முடிந்தது.

''அதுதான், உனக்குக்கல்யாணம்செய்தே வைத்துவிடுவது என்று தீர்மானம் செய்து விட்டேன். ஜாதகப் பொருத்தம் தெரிகிற வரை மூச்சு விடாதே. பிறகு நிமிஷமாக நான் எல்லாம் செய்கிறேன்'' என்றேன்.

''ஜாதகப் பொருத்தம் எப்போ மாமி தெரியும்?'' என்றான் கவலையுடன்.

''ஏண்டாப்பா, அப்படி அவசரமா?'' என்றேன் கேலியாக.


''அவசரம் ஒன்றுமில்லை. அதுவரை மூச்சு விடக் கூடாது என்றேளே, அதற்காகத் தான் கேட்டேன்!'' என்றான் சிரிக்காமல்.

இந்த நல்ல பிள்ளைக்கு மைதிலியைக் கட்டியே வைத்துவிடணும் என்று ஒரு வித வைராக்கியம் என்னுள் எழுந்தது. ஜாதகப் பொருத்தம் சரியாக இருக்கணுமே என்று உள்ளூறக் கவலையும் இருந்தது.

• • •

வேளையும் பொழுதும் வந்துவிட்டால் எதுவும் நிற்காது என்பதைக் கண்கூடாகக் கண்டேன். ஜாதகம் மிகப் பிரமாதமாகப் பொருந்தி விட்டதாக இரு வீட்டினரும் என்னிடம் சொன்னார்கள். எனக்குக் கிரீடம் வைத்து ரெட் கார்பட் விரிக்க இரு தரப்பினருமே தயாராக இருந்தார்கள். பெருமை எனக்குப் பிய்த்துக் கொண்டு போனாலும் முழுக்க நல்லபடியாக நடக்க வேண்டுமே என்ற கவலை ஒரு பக்கம் இருக்கத்தான் செய்தது. பெண் பார்க்க ஒரு நாள் குறிப்பிட்டு இருவரும் அந்த நந்நாளை வெகு ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். இருவருமே சூடு கண்ட பூனைகள். அதனால் இந்தத் தடவை அநாவசியமாகக் குழம்பாமல் சம்ம





உலகம் சுற்றும் சைக்கிள் வீரர்!

சில காலம் முன் எங்கள் ''தொலைபேசி மனமகிழ் மன்ற''த்திற்கு ஓர் உலக சைக்கிள் பயணி வருகை தந்தார்.

கல்கத்தாவைச் சேர்ந்த எம். எஸ்ஸி பட்டதாரியான திரு. மன்மோகன் சக்ரவர்த்தியின் வயது 28. தமது பயணத்தை 1976 டிசம்பர் 28ல் தொடங்கிய இவர் கடந்திருக்கும் தூரம் 55,000 மைல்கள்! இரண்டு கண்டங்களை(ஆஸ்திரேலியா, ஆப்பிரிக்கா) சுற்றியிருக்கிறார்.

பயணம் ஆரம்பிக்கும் நாளில் இவரின் கையிருப்பு ஐம்பது ரூபாய் தான். உலகெங்கிலுமுள்ள லயன்ஸ் கிளப்புகள் உதவி செய்துள்ளன. இந்தியாவில் தொலைபேசித்துறை மனமகிழ் மன்றங்களை அவை அளித்த உதவிகளுக்காக நினைவு கூருகிறார். தவிர வெளிநாடுகளில், டெலிவிஷன், ரேடியோ ஆகியவற்றுக்குப் பேட்டியளித்து அதன் மூலம் கிடைத்த தொகைகளைக் கொண்டும் செலவுகளைச் சமாளிக்கிறார்.

இவரது குறிக்கோள், உலகம் முழுவதையும் சைக்கிளிலேயே சுற்றி, ''சர்வதேச சகோதர மனப்பான்மை''யை வளர்ப்பது.

மனக்கசப்பளித்த சம்பவங்கள் இவரது பயணத்தில் இருமுறை ஏற்பட்டதாம். ஒன்று அங்கோலாவில் சிப்பாய்கள் இவரைப்பிடித்து அடித்துத் துன்புறுத்தியது. இரண்டு பம்பாய்-பூனா சாலையில் வழிமறிக்கப்பட்டுக் கடிகாரம், காமிரா போன்றவற்றை இழந்தது.

இவருக்கு வியப்பளித்தவை பல்வகை மக்களின் விருந்தோம்பல் முறைகள். ஓர் அனுபவத்தைக் கூறுகிறார்: ''நான் ஆப்பிரிக்காவின் பழங்குடியினரான ''மஸாய்'' இன மக்களால் வரவேற்கப்பட்டேன். ஒரு விசித்திரப் பானம் கொடுத்தார்கள். பசுவின் பாலுடன் அதன் இரத்தமும் கலந்து ஒரு கோப்பையில் எனக்கு அளிக்கப்பட்டது. அந்த இரத்தம் என்கண் எதிரிலேயே அப்பசுவின் கழுத்தில் கீறல் ஏற்படுத்தி எடுக்கப்பட்டது. ஒரு பயங்கலந்த அருவருப்புடன் மடக்கென்று குடித்து வைத்தேன். அப்பானம் சிறப்பு விருந்தினருக்குத் தரப்படுவது!

இவரின் பயணத்துக்குச் சென்னையைச் சேர்ந்த டிஐ சைக்கிள் நிறுவனம் பிலிப்ஸ் சைக்கிளை இலவசமாக வழங்கியுள்ளது.

-ஆர். பத்மநாபன்

நித்து விடுவார்கள் என்று நான் எனக்குள் ஒரு கணக்குப் போட்டு வைத்துக் கொண்டேன்.

பெண் பார்க்கும் நாளுக்கு முதல் நாள் காலை, மைதிலியும் அவள் அம்மாவும் வந்திருந்தார்கள். குழந்தைகளையும் இவரையும் பள்ளிக் கூடத்துக்கும் ஆபீசுக்கும் அனுப்பி விட்டு அவர்களுடன் பேசிக் கொண்டிருந்தேன். ஸ்கூட்டர் வந்து நிற்கும் சப்தம் கேட்டது. ராகவன் தான் வருகிறான் என்று தெரிந்து கதவைத் திறந்தேன். ''காலும் கெட்டுக் கிடக்கிறது மாமி! பார்த்துக் கதவைத் திறவுங்கள்!'' என்று எனக்குப் புத்திமதி வழங்கினான்.

''உன்னைத் தவிர யார் இப்படி கர்ண கடூர சப்தத்துடன் வருவார்கள்? கல்யாணம் ஆகும்வரை மாமியை அடிக்கடி வந்து பார்த்து தாஜா பண்ணவேண்டாமா?'' என்று கேலி செய்தேன். பிறகு, ''உனக்கு ஒரு சர்ப்ரைஸ். மைதிலியும் அவள் அம்மாவும் இந்தப் பக்கம் வந்தார்களாம். அப்படியே இங்கு வந்திருக்கிறார்கள்!'' என்றேன்.

மைதிலியும் மாமியும் எதிர் சோபாவில் நான் கேட்டுக்கொண்டபடி உட்கார்ந்தார்கள். நானும் ராகவன் பக்கத்தில் உட்கார்ந்தேன்.

ஒரு பத்து நிமிஷம் சம்பந்தா சம்பந்தமில்லாமல் எல்லோருமாக ஏதோ பேசினோம். ''கொஞ்சம் காப்பி போட்டுக் கொண்டு வருகிறேன்'' என்று எழுந்தேன். ''மைதிலி! நீ ராகவனோடு பேசிக் கொண்டிரு!'' என்று சொல்லிவிட்டு'' மாமி! எனக்கு ஒத்தாசைக்கு உள்ளே வாருங்கள்!'' என்று சிவகாமு மாமியை அழைத்துப் போனேன்.

சந்தர்ப்பத்தை அனுசரித்துக் கொண்டு மாமியும் தலைப்பை இழுத்துப் போர்த்திக் கொண்டு என்னுடன் வந்தாள்.

ஹாலில் மைதிலியும் ராகவனும் பேசிக் கொண்டிருப்பது தெளிவாகக் கேட்டது. உற்றுக் கேட்டால்தான் என்ன பேசிக் கொள்கிறார்கள் என்பதே புரியும். அப்படிக் கேட்கக் கூடாது என்பதற்காகவே பல விஷயங்களை, வேண்டாததை நானும் மாமியும் உரக்கப் பேசிக் கொண்டோம். நிதானமாக டிகாக்ஷன் போட்டேன். அதைவிட மெதுவாகப் பாலைச் சூட வைத்தேன். காப்பி கலக்க இதுவரை எவரும் எடுத்துக்கொள்ளாத நேரத்தை எடுத்துக் கொண்டேன். டபரா டம்ளரை டிரேயில் வைக்கப் பத்து நிமிஷம் செலவழித்தேன். சிவகாமு மாமிக்குச் சிரிப்பு பொங்கி வந்தது. ''இனி இவர்களைப் பேச விட வேண்டாம்! காப்பியை எடுத்துப் போகலாம்!'' என்று தனக்கே பொறுக்காமல் சொன்னாள் மாமி.

வேண்டுமென்றே பலவித சப்த ஜாலங்களுடனும் காப்பி டிரேயுடனும் போனேன். ராகவன் என்னைப் பார்த்து முகம் மலரச் சிரித்தான். மைதிலி மெல்லிதாகப் புன்னகைத்தாள். ரிசல்ட் தெரிந்து விட்டது. ''கன்கிராட்ஸ்!'' என்றேன். ''உங்களுக்கு என்ன தெரிந்தது. எப்படித் தெரிந்தது?'' என்றான் ராகவன். ''நீதான் எங்கப்பா

உவமை உண்டோ?

வில் ஒக்கும் நுதல் என்றாலும்
வேல் ஒக்கும் விழி என்றாலும்
பல் ஒக்கும் முத்து என்றாலும்
பவளத்தை இதழ் என்றாலும்
சொல் ஒக்கும் பொருள் ஒவ்வாதால்
சொல்லல் ஆம் உவமை உண்டோ?
நெல் ஒக்கும் புல் என்றாலும்
நேர் உரைத்து ஆகவற்றே!

— கம்பன்



வண்ணப்படம் எடுத்தவர்: சரஸ்வதி சத்தியமூர்த்தி

குதிருக்குள் இல்லை என்கிறாயே? உங்கள் இருவர் முகமும்தான் கதை கதையாகச் சொல்கிறதே!'' என்றேன்.

''அப்போ நான் வரட்டுமா, மீனா?'' என்று எழுந்தாள் சிவகாமு மாமி. மாமிக்குப் பெண்ணிடம் தனியாக ஆயிரம் கேள்விகள் கேட்கும் அவசரம்.

சரியென்று குங்குமம் கொடுத்து விடை கொடுத்தேன். மைதிலியும் மாமியும் கூட ராகவனிடம் சர்வ சாதாரணமாக விடை பெற்றனர். ''நாளைக்கு அப்பா அம்மாவுடன் வந்துவிடுங்கள்!'' என்று சம்பிரதாயத்துக்குக் கூப்பிட்டாள் மாமி ராகவனை. ''ஓ, எஸ்! இனி ஒரு ஃபார்மாலிடிக்குத் தானே வரணும்!'' என்று மைதிலியைப் பார்த்து விஷமமாகச் சிரித்தான் ராகவன்.

மறுநாள் பெண் பார்க்கும் வைபவத்துக்கு முன்னாலேயே போய்விட்டேன். சம்பிரதாயப்படி. சொஜ்ஜி, பஜ்ஜி, பொதுவாகப் பேசுவது, பெண் வந்து நமஸ்காரம் செய்வது, இரண்டு பாட்டுப் பாடுவது எல்லாமே வழக்கத்தை மீறாமல் நடந்தது. ராகவனின் அப்பா பையனின் காதைக் கடித்தார். அவருக்கு உடனேயே முடித்துவிட வேண்டும் என்பது. ராகவன் பெரிதாகத் தலையசைத்துச் சம்மதத்தைத் தெரிவித்துவிட்டான். மைதிலியின் முகம் தக்காளியாய்ச் சிவந்தது. சில விநாடிகள் அங்கு நிசப்தம் நிலவியது. ராகவனின் அம்மாதான் மௌனத்தைக் கலைத்தாள். ''ராகவா! அந்தப் பெண்ணை ஏதாவது கேட்க வேண்டுமென்றால் தனியாக அந்த உள்ளில் போய் வேண்டுமானால் கேளேன்'' என்றாள். இங்கிதமும் இந்தக் காலத்துக் குழந்தைகளின் மனோபாவமும் தெரிந்தவள்.

ராகவன் ஆனந்த உலகத்தில் அமிழ்ந்து போயிருக்க வேண்டும். தன்னையறியாமலே, ''ஒன்றும் கேட்க வேண்டாம். நேற்றே மீனா மாமி வீட்டில் எல்லாம் பேசியாகிவிட்டதே!'' என்று ஒரு போடு போட்டானே பார்க்க வேண்டும்.

எனக்குத் தூக்கி வாரிப் போட்டது. சிவகாமு மாமிக்கு நாடியே விழுந்துவிட்டது. மைதிலி வியர்வை வெள்ளமாகப் பெருக உள்ளே ஓடிவந்துவிட்டாள்.

ராகவனின் பெற்றோர் ஒரு நிமிஷம் விழித்தனர். அனுபவசாலியான அவர்களுக்குப் புரிய வைக்கவும் வேண்டுமா?

''ஏன் மீனா! அவர்கள் இருவரையும் நேற்றே உன் வீட்டில் பார்க்க வைத்துவிட்டு எல்லாம் உங்களுக்குள் முடித்துக் கொண்ட பிறகு இது என்ன நாடகம்!'' என்றாள் ராகவனின் அம்மா. அவள் கேட்டது தப்பாகப் படவில்லை. இந்தப் பிள்ளை இப்படி ஒரு குண்டைத் தூக்கிப் போடுவான் என்று நான் கண்டேனா?

அத்தனை பேரில் பாதிக்கப்பட்டவள் நான் தான். ராகவனின் தாயின் கைகளை இறுகப் பற்றிக் கொண்டேன். ''மாமி! நிஜமாக வேணும்னு பிளான் போட்டு ஒன்றுமே செய்யவில்லை. தானாக அப்படி அமைந்தது. அதை வெளியே சொல்ல வேண்டாம் என்று சொல்லிவிட்டு, இவனே இப்படிச் சொல்வான் என்று நினைக்கவில்லை. ப்ளீஸ்! நீங்கள் என்னைத் தப்பாக நினைக்காதீர்கள்!'' என்று நடந்தவற்றை விவரமாகக் கூறினேன்.


பேசவே சக்தியில்லாமல் நின்று கொண்டிருந்தாள் மைதிலியின் தாயார். அவள் அப்பாவோ, ''இந்தப் பெண்டுகளாகச் செய்கிற காரியம் இப்படித்தான் இருக்கும்!'' என்று கண்களாலேயே உருட்டி விழித்தார்.

சற்று முன் கலகலப்பாக இருந்த வீட்டில் அலாதி நிசப்தமும் கசப்புணர்ச்சியும் மெதுவாக வளர்வதை எல்லாரும் உணர்ந்தார்கள்.

அதைக் கலைத்தது ராகவனின் தந்தை தான். ''இப்போ என்ன நடந்து போச்சுன்னு எல்லோரும் மூஞ்சியை இப்படி வச்சுண்டிருக்கேள்? இன்றைக்கு நடக்கப் போவதை நேற்றே மீனா நடத்தி நமக்குச் சிரமத்தைக் குறைத்திருக்கிறாள். வி மஸ்ட் தேங்க் ஹர் ஃபார் தட். மீனா! தாங்க்ஸ் எ லாட்'' என்று பேசிக் கலகலப்பை உண்டாக்கினார். எல்லோரும் சில நிமிடங்களிலேயே பழைய நிலைக்கு வந்தனர். ராகவன் போகும் போது, என்னைப் பார்த்துப் பயந்த மாதிரி பாவனை செய்தான். ''அசடு! வெறும் அசட்டுப் பிள்ளை!'' என்றேன் செல்லமாக.

கல்யாணமும் நல்லபடியாக நடந்தது. இப்போது எனக்கு அந்தச் சம்பவத்தை நினைத்தாலே சிரிப்பு வருகிறது. மைதிலியின் கல்யாணமே வைபோகமே!

ஒற்றன் 4X-1 சித்திரக்கதை: புஜ்ஜாய் 9



தீக்குச்சி எடுக்கும் விளையாட்டு

எல்லாப் பையன்களும் ஒரு மேஜையின் சுற்றி அமர்ந்து கொள்ள வேண்டும். மேஜையில் தீக்குச்சிகளைக் கொட்டி தாறுமாறாகப் பரப்பி வைக்க வேண்டும்.


முதல் பையன் ஒரு தீக்குச்சியை எடுக்க வேண்டும். ஒரு தீக்குச்சியை மற்றொரு தீக்குச்சியை அசைக்காமல் எடுத்தால் அவன் விளையாட்டைத் தொடரலாம். இப்படி எந்தக் குச்சியும் அசையாமல் எடுக்கும்வரை ஆட்டத்தைத் தொடர்ந்து ஆட வேண்டும். ஒரு குச்சியை எடுக்கும்போது மற்றொரு குச்சியை அசைத்து விட்டால் அடுத்த பையன் விளையாட்டை ஆரம்பிக்க வேண்டும்.

இப்படி ஒவ்வொரு பையனும் ஆடும்போது யார் அதிகம் குச்சிகளை மற்றவை அசையாமல் எடுக்கிறாரோ அவனே வெற்றி பெற்றவனாகக் கருதப் படுவான்.

×

உருளைக்கிழங்கு கைமாற்றல்

ஒரு வட்டமாக எல்லா விளையாட்டுக்காரர்களும் உட்கார வேண்டும். ஒவ்வொரு ஆட்டக்காரரும் கையில் உருளைக்கிழங்கு வைத்திருப்பார். ஓர் ஆட்



(தொடரும்)

டக்காரரிடமுள்ள உருளைக் கிழங்கை பக்கத்திலிருப்பவர் வாங்கிக் கொள்ள வேண்டும். ஏதாவது சங்கீதம் ஒலிக்கும்போது உருளைக்கிழங்கு கைமாறும் படலம் தொடங்கி தொடர்ந்து நடக்கும். சங்கீதம் நின்றவுடன் யாரிடம் உருளைக்கிழங்கு இல்லையோ அவர் 'அவுட்'டாகக் கருதப்படுவார். அவரோடு ஓர் உருளைக்கிழங்கும் நீக்கப்படும். மறுபடி இசை ஒலிக்கும். ஒவ்வொரு தடவையும் சங்கீதம் நின்றவுடன் உருளைக்கிழங்கு இல்லாதவர் 'அவுட்' ஆகக் கருதப்படுவார்.

இந்த விளையாட்டு ஒரே ஒரு ஆட்டக்காரர் மீதியானதும் முடியும். அவரே வெற்றியாளராகக் கருதப்படுவார். பி. எஸ். எம்.

✕

மூக்கினுல் கோபம்!

சிரானு - டி - பார்கெலாக் என்பவர் புகழ் பெற்ற ஃபிரெஞ்சுக் கவிஞர். அவருக்கு மிகப் பெரிய மூக்கு இருந்தது. அவருடைய மூக்கைப் பார்த்துப் பலர் கேலி செய்வார்கள். சுமார் 1000 பேர்களோடு, மூக்கைக் கேலி செய்ததற்காக வாள் சண்டை போட்டு ஜெயித்தும் இருக்கிறார். ஒரு முறை, வாரத்திற்கு 4 பேர் விதம் 3 மாதங்களுக்குத் தொடர்ந்து வாள் சண்டை இட்டு ஜெயித்திருக்கிறார்!

டெபோனேரிலிருந்து
—சேலம் சங்கர்







⌘ போட்டியில் பங்கேற்ற மாணவிகள் தங்கள் ஆசிரியைகளுடன். இடது கோடியில் உட்கார்ந்திருப்பவர் 'குவிஸ்' மாஸ்டர் ராஜேஸ்வரி

⌘ குமாரி உமா மகேஸ்வரி முதல்வரிடம் பரிசு பெறுகிறார்

எதிர்த் திசையில் மாறி ஓடும் நதி எது?

[மதுரை மாநகரம். மீனாக்ஷி அரசினர் பெண்கள் கலைக் கல்லூரி. மாணவிய ரிடையே குவிஸ் போட்டியில் பங்கேற்க அளவிட முடியாத ஆர்வம். சீட்டுக் குலுக்கிப் போட்டு ஆறு மாணவிகள் தேர்ந்தெடுக்கப் பட்டனர். கொப்பளிக்கும் உற்சாகத்துடன் பார்வையாளர் பகுதியில் ஏராளமான மாண வியர். கல்வி தயாரித்த கேள்விகளைக் கொண்டு குவிஸ் மாஸ்டராக இருந்து நிகழ்ச் சியை நடத்திக் கொடுக்க முன்வந்தார் உத விப் பேராசிரியை திருமதி.என். ராஜேஸ்வரி. கல்லூரி முதல்வர் குமாரி வி. எஸ். ரத்னம் அவர்களும், பொருளாதாரப் பேராசிரியை திருமதி கே. ருக்மிணியும் ஒத்துழைப்பு அளித் தது நிகழ்ச்சி சிறப்பாக அமைய உதவியது.]

போட்டியில் பங்கேற்றவர்கள்:

1. குமாரி என். வி. பவானி
2. குமாரி—டி. மீனாக்ஷி
3 குமாரி ஆர். ரமாசுந்தரி
4. குமாரி D. கலாவதி
5. குமாரி D. மீனாகுமாரி
6. குமாரி என். உமா மஹேஸ்வரி

கேள்விகள்

1. தஸ்துர் திட்டம் (Dastur Plan) பற்றிக் கேள்விப்பட்டிருப்பீர்கள். அத்திட்டம் எக்காரணத்துக்கானது?
(பார்வையாளரில் ஒருவர் இக்கேள் விக்கான பதில் அளித்தார்.)
2. தனது முதல் கிரிக்கெட் டெஸ்டிலேயே இரண்டு இன்னிங்ஸிலும் சதம் போட்ட ஆட்டக்காரர் யார்?
(இக்கேள்விக்கான விடையை எவரும் கூறவில்லை)
3. இவ்வாண்டு மாஸ்கோவில் நடக்கவிருக் கும் ஒலிம்பிக் விளையாட்டுக்களில் பங் கேற்காமல் புறக்கணிக்கப் போவதாய் அமெரிக்கா முடிவு செய்துள்ளது. அதற் கான காரணத்தைக் கூற இயலுமா?









⌘ உற்சாக வெள்ளத்தில் மாணவிகள் ⌘ ஒலிம்பிக் கரடி சின்னம்
⌘ புட்டோ, ⌘ தையல் இயந்திரம் இயக்கும் தையல்

(சரியான விடையைக் கூறியவர் குமாரி மீனாட்சி)

4. வழக்கமாக ஓடிக் கொண்டிருந்த திசைக்குப் பதிலாக எதிர்த் திசையில் ஓட ஆரம்பித்த ஓர் அமெரிக்க நதி எது?
(தேம்ஸ் என்று ஒரு மாணவி கூறியது நல்ல நகைச்சுவை! சரியான விடையை எவரும் கூறவில்லை.)

5. 'Plebiscite' என்றால் என்ன?
(பார்வையாளரில் கே. பிரேமா என்ற மாணவி சரியான விடையைக் கூறினார்.)

6. யூகோஸ்லேவியா தற்போது எக்காரணத்துக்காகச் செய்தித் தாளில் அடிபடுகிறது என்று தெரியுமா?
(சரியான விடையைக் கூறியவர் பவானி)

7. ஹிந்துப் பத்திரிகையின் ஞாயிற்றுக் கிழமைப் பதிப்பின் இந்திய விலை என்ன?
(சரியான விடையை குமாரி கலாவதி கூறினார்.)

8. கானடா நாட்டின் நாணயத்தின் பெயர் என்ன?
(கலாவதி சரியான விடையைக் கூறினார்.)

9. பெரியம்மைக்கு எளிதான தடுப்பு ஊசியைக் கண்டு பிடித்தது யார்?
(பார்வையாளரில் ஒருவர் சரியான விடையைக் கூறினார்.)

10. சுதந்திர இந்தியாவின் முதல் ராணுவத் தளபதி யார்?
(சரியான விடையை பவானி கூறினார்.)

11. குஜராத் மாநிலத்தின் தற்போதைய கவர்னர் யார்?
(எவராலும் சரியான விடையைக் கூற இயலவில்லை.)

12. ஜோர்டானின் தலைநகரம் எது?
(பார்வையாளர்களில் எஸ். ரேவதி சரியான விடையைக் கூறினார்.)

13. டிசம்பர் 10ந் தேதியின் முக்கியத்துவம் என்ன?
(கலாவதி சரியான விடையைக் கூறினார்)

14. விருது, மரியாதை, அல்லது அதிகாரம் ஒருவருக்கு அல்லது பலருக்கு அளிக்கப்படும் விழா ஆங்கிலத்தில் என்னவென்று கூறப்படும்?
(சரியான விடையை எவரும் கூறவில்லை)

15. 'Prosthetic surgery' என்று எவ்வகை அறுவைச் சிகிச்சை அழைக்கப்படுகிறது?
(இக்கேள்விக்கான விடையை அளித்து குமாரி உமா மகேஸ்வரியும் மீனாட்சியும் மதிப்பெண்ணைப் பகிர்ந்துகொண்டார்கள்.)

16. புட்டோ பாகிஸ்தானின் பிரதமராக ஆனபோது பாகிஸ்தானின் ஜனாதிபதி பதவியை ஏற்றது யார்?
(எவராலும் இக்கேள்விக்குப் பதில் அளிக்க இயலவில்லை.)

17. இந்தியா தனது அணுகுண்டு பரிசோதனையை எவ்வாண்டில் நிகழ்த்தியது?

(சரியான விடையைக் கூறியவர் குமாரி பவானி.)

18. 'fait accompli' என்பதன் அர்த்தம் என்ன?
(எவராலும் விடையளிக்க இயலவில்லை)

19. மத்திய தோல் ஆராய்ச்சி நிலையம் எங்குள்ளது?
(உமா மஹேஸ்வரி சரியான விடையைக் கூறினார்.)

20. குளோரோஃபாரத்தைக் கண்டுபிடித்தது யார்?
(எவராலும் விடையளிக்க இயலவில்லை)

21. டூஃபான் எக்ஸ்பிரஸ் எவ்விடங்களுக்கிடையே ஓடுகிறது?
(விதவிதமான விடைகள் வந்தன. சரியான விடையை எவரும் கூறவில்லை.)

22. முதன் முதல் சோதனைக் குழாய் குழந்தையை உருவாக்க உதவிய மருத்துவர்களின் பெயர் என்ன?
(எவரும் விடையளிக்கவில்லை.)

23. தையல் மிஷினைக் கண்டு பிடித்தவர் யார்?
(எவராலும் பதில் அளிக்க இயலவில்லை)

24. மணிமேகலை நூலை இயற்றியது யார்?
(உமா மஹேஸ்வரி சரியான விடையைக் கூறினார்.)

25. சென்னையில் உள்ள திரைப் படக் கல்லூரியின் தற்போதைய முதல்வர் யார்?
(சிவாஜி கணேசன் என்று ஒரு மாணவி கூறினார்! சரியான விடையை எவரும் கூறவில்லை.)

26. வேம்பட்டி சின்ன சத்தியம் எத்துறையில் சிறப்புப் பெற்றவர் என்று கூற இயலுமா?
(பார்வையாளரில் ராதாலக்ஷ்மி என்ற மாணவி சரியான விடையைக் கூறினார்.)

பெண் + பணம் + கொத்தடிமை = திருமணம்.

அடிமைகள் கூட.....
விலை கொடுத்து
வாங்கப் படுகிறார்கள்!
ஆனால்...நாங்களோ...
அடிமைத்தனத்தை
விலை கொடுத்து
வாங்குகிறோம்!
இதில்
"யார் கொலோ...சதுரர்?" —எம்.ஏ. கவிலா



27. HUDCO என்பதன் விரிவு என்ன?
(பார்வையாளரில் கண்மணி என்ற மாணவி சரியான விரிவைக் கூறினார்.)

28. ஆஸ்திரேலியாவின் தேசிய விளையாட்டு எது?
(சரியான விடையைக்கூறியவர் மீனாட்சி)

29. நந்தன் சரித்திரக் கீர்த்தனைகளை இயற்றியது யார்?
(பார்வையாளரில் ' குமாரி பார்வதி சரியான விடையைக் கூறினார்.)

30. 'QUO VADIS' என்றால் என்ன?
(பார்வையாளரில் பி. தமிழ்ச் செல்வி சரியான விடையைக் கூறினார்.)

(அதிக மதிப்பெண்களைப் பெற்று கல்வியின் பரிசான ரூ. 50ஐ தட்டிச் சென்றவர் குமாரி உமா மஹேஸ்வரி. கல்லூரி முதல்வர் அவருக்குப் பரிசை அளித்தார்.)

விடைகள்

(1) இந்தியாவில் உள்ள எல்லா நதிகளையும் ஒருங்கிணைக்கும் நோக்கம் கொண்ட திட்டமாகும். (2) லாரென்ஸ் ரோ என்ற மேற்கிந்திய ஆட்டக்காரர். (3) ஆப்கானிஸ்தான் நாட்டின் உள்நாட்டு விவகாரங்களில் சோவியத் நாடு தலையிட்டுத் துருப்புக்களை அனுப்பி ஆக்கிரமிப்புச் செய்ததை எதிர்த்து அமெரிக்கா இவ்விதம் முடிவெடுத்துள்ளது. (4) மிசிகன் ஏரியை நோக்கிப் பாய்ந்துகொண்டிருந்த சிகாகோ நதி திசை மாறி எதிர்ப் பக்கமாகப் .பாய்கிறது. (5) பிரச்னைக்கு உரிய ஓர் அம்சத்தில் எல்லா வாக்காளர்களும் வோட்டளித்துத் தீர்ப்பு வழங்கும் முறை. Referendum என்றும் சொல்வதுண்டு. (6) யூகோஸ்லேவிய ஜனாதிபதி டிட்டோ மிகவும் நோயுற்று உள்ளார். மருத்துவர்கள் அவர் உயிர் பிழைப்பது கடினம் என்று கருதுகிறார்கள். (7) 55 பைசா. (8) டாலர். (9) எட்வர்ட் ஜென்னர். (10) ஜெனரல் கே.எம். கரியப்பா. (11) திருமதி சாரதா முகர்ஜீ. (12) அம்மான் (Amman) (13) மனித உரிமைகள் தினம். (14) An investiture (15) பழுதடைந்த அல்லது இழந்துவிட்ட உடலின் ஓர் அங்கத்துக்குப் பதிலாகச் செயற்கை அங்கத்தைப் பொருத்தும் அறுவை சிகிச்சை Prosthetic Surgery எனப்படுகிறது. (16) Fazl-e-Elahi Choudhury. (17) 1974. (18) நடந்து முடிந்த ஒரு காரியம். (19) சென்னையில். (20) சிம்ஸன்; ஹாரிசன் (21) புதுடெல்லிக்கும், ஹௌராவுக்கும் இடையே (22) டாக்டர் எட்வர்ட்ஸ், டாக்டர் ஸ்டெப்டோ. (23) அமெரிக்காவைச் சேர்ந்த இரு ஹோவ். (24) சீத்தலைச் சாத்தனார். (25) ப. நீலகண்டன். (26) குச்சுப்புடி நடனம். (27) Housing and Urban Development Corporation (28) கிரிக்கெட். (29) கோபால கிருஷ்ணபாரதி. (30) எங்கே போகிறோம்.

தொகுப்பு: நாயகன்

புகைப்படம்: கைலாஸ் ஸ்டுடியோ, மதுரை—1

அம்மா

சிவசங்கரி



4

"ஷ்......ஷ் வித்யா! என்ன டார்லிங் இது? ஹேய்..கண்ட்ரோல் யுவர்செல்ஃப்..."

அந்த அழுகையும் விசும்பல்களும் அடங்க இரண்டு நிமிஷங்கள் ஆயின.

தலையைத் தூக்கிக் கணவனை நேர் பார்வையால் பார்க்காமலேயே வித்யா பேசினாள்:

"இரண்டு மணி நேரமா நான் பட்ட அவஸ்தை எனக்குத்தான் தெரியும். உங்களுக்கு அது புரியாது ராஜு. புரிஞ்சிருந்தா இப்படிக் கேட்டிருக்க மாட்டேள். ராபின் ஓடிவந்து 'அம்மா ஜென்னிக்கு ஆக்ஸிடெண்டு'னு சொல்றான்; இவ உடம்புலே கடுகத்தனை பதற்றத்தைக் காணோம்! நான் துடிச்சுப் போயிட்டேன். தெரு முனையிலே குழந்தை கிடந்த பயங்கரத்தை இப்ப நினைச்சண்டாலும் வயிறு கலங்கறது... அந்த ரத்தம்.... விரல் கூட அசையாம ஜென்னி கிடந்த விதம்!... காட்! இட் வாஸ் டூ மச்... அலறிண்டு குழந்தையை மடிலே போட்டுக்கணும்னு எனக்குத் தோணறது. இந்த டோராவான்னா ஆணி அடிச்சமாதிரி நிக்கறா. சரி, கோரமான காட்சியைப் பார்த்ததுலே பிரமை பிடிச்சுப் போயிட்டான்னு நினைச்சு நா ஜென்னியைத் தூக்கப் போறேன் — இவ — 'நோ... நோ..... டோண்ட் லிஃப்ட் ஹர்'னு கத்தறா. டோராவுக்கு என்னாச்சு? அந்த ரத்தமும் அசிங்கமும் தன் மேல் பட்டுடும்னு ஒதுங்கி நிக்கறாளா? எனக்குப் புரியலே ராஜு... இவ ஒரு பெண் தானே, அதுவும் அம்மாதானே? மனசைக் கல்லாக்கிண்டு அவளால எப்படி இருக்க முடிந்தது?... எங்கம்மான்னா துடிச்சுப் போயிருப்பா. நானும் இதுவரை எத்தனையோ அம்மாக்களைப் பார்த்திருக்கேன். பட் நோபடி லைக் ஹர்... இந்த ஊர் பெண்கள் எல்லாருமே இப்படி பாசம் இல்லாமதான் இருப்பாளா ராஜு?... ஐம் ஷாக்ட்..."

ராஜுவுக்கு என்ன பதில் சொல்வதென்று புரியவில்லை. அனுவசியமாய், ஒன்றுமே இல்லாத விஷயத்தைப் பெரிசு பண்ணித் தன்னைப் போட்டுக் குழப்பிக் கொள்கிறாளே என்ற சிரிப்புடன், ஏன் இவள் தன் கண்ணோட்டத்தை விரிவு பண்ணிக் கொண்டு மற்றவர்களைப் புரிந்து கொள்ள மறுக்கிறாள் என்ற வருத்தமும் எழுந்தது.

இவளிடம் என்ன பேச வேண்டும்?



டோராவின் நடத்தையை விளக்கினால் இப்போது இருக்கும் மன நிலையில் புரிந்துகொள்வாளா? இல்லை — சற்று முன் கத்தியபடி 'உங்களுக்கும் இந்த மண்ணோட பழக்க வழக்கங்கள் வந்துடுத்து' என்று கத்துவாளா?

ராஜு யோசித்துக் கொண்டிருக்கையில் வித்யா தானே மேலே பேசினாள்.

''ஆம்புலன்ஸ் வந்து ஜென்னியை அள்ளிப் போட்டுண்டு போறது ராஜு. 'நான்தான் அம்மா. நானும் உங்களோட வரட்டுமா, குழந்தைக்கு எப்படி இருக்குனு ஒரு வார்த்தை? ஒரு கேள்வி? ம்ஹூம், ஒண்ணும் இல்லே. 'நீ போக வேண்டாமா, டோரா?'னு நான் கேட்டதும், 'வீட்டுக்குப் போய் மார்க்குக்கு போன் பண்ணிட்டுப் போகணும்'னு சாவகாசமா சொல்றா. இப்ப வீட்டுலே என்ன வச்சிருக்கு? மார்க்குக்கு நான் சொல்ல மாட்டேனா? போட்டது போட்டபடி ஓடாம, ஆற அமர யோசனை பண்ணிண்டு நிக்க இதுவா சமயம்! வீட்டுக்கு வந்தப்புறம் மெதுவா 'எனக்குப் படபடப்பா இருக்கு. நீ கார் ஓட்டிண்டு வரயா?'னு கேட்டா— போறது. இந்த மட்டுக்குப் படபடப்பாவது இருக்கேன்னு நான் சந்தோஷப்பட்டுண்டேன். ...இதையெல்லாம் விடுங்கோ... ஹாஸ்பிடலுக்குள்ள நுழைஞ்ச உடனே இவ அந்த நர்ஸ்கிட்ட என்ன கேக்கறா தெரியுமா? 'ஜென்னி செத்துப் போயிட்டாளா?'னு — டட் வாஸ் த லிமிட்... அச்சான்யமா நினைக்கிறதுகூடத் தப்புன்னு எங்கம்மா, மத்தவங்கள்ளாம் குதிப்பா... இவ என்னடான்னா பளிச்சுன்னு வாய் கூசாம, கேட்கறா... சே, என்ன மனுஷி இவனு எனக்கு ஆயிடுத்து...''

இனியும் ராஜுவால் சும்மா இருக்க முடியவில்லை.

சாமர்த்தியசாலிகள்!

16-2-1980ம் நாள் இரவு 7-15க்கு ஒலிபரப்பான வானொலி தமிழ்ச் செய்தி அறிக்கையில் பூரண சூரிய கிரகணம் தெரிந்தது பற்றி, பல விஷயங்களைக் கூறினார்கள். இலங்கை வானொலி நிலையத்தார் அச் செய்தி அறிக்கையில் கூறப்பட்ட விஷயங்களை அப்படியே டேப் செய்து, அதை அன்று இரவு 9-30க்கு ஒலிபரப்பினார்கள்! கெட்டிக்காரத்தனமான பயனுள்ள செயல்.

பி. நாராயணன்

''நீ டோராவைத் தப்பாப் புரிஞ்சுண்டு இருக்கேன்னு நான் நினைக்கிறேன் டார்லிங். அப்படிப் பாசம் இல்லாத பெண்ணு அவ எனக்குத் தோணலே. உணர்ச்சிகளை வெளிலே காட்டிக்கப் பிடிக்காம இருக்கலாம் இல்லையா? அபௌட் தட் ஆக்ஸிடெண்ட், இந்த நாட்டிலே விபத்துக்கு உள்ளாயிட்டவாளைக் கூடுமானவரை ஜனங்க தூக்க, எடுக்க, போலீஸ் விடறதில்லேனு உனக்குத் தெரியுமோ? இரண்டு நிமிஷத்திலே ஆம்புலன்ஸ் வந்துடும். அதுலே பயிற்சி பெற்ற அட்டெண்டர்ஸ் இருப்பா, அவா வந்து வாகவமா அடிபட்டவாளைத் தூக்கி ஆம்புலன்ஸ்லே கிடத்தி, உடனடி சிகிச்சை ஆரம்பிச்சுடுவா... நாம ஒண்ணும் புரியாம ஏசகு பிசகா தூக்கி, ஏதாவது தப்பாயிடலாம் இல்லையா? அந்த நினைவுலேதான் டோரா உன்னைத் தொடாதேன்னு சொல்லியிருக்கணும்; தானும் ஜென்னியைத் தூக்காம இருந்திருக்கணும். தட் ஈஸ் த பெஸ்ட் திங் டு டூ....''

நிஜமாகவா?

அடிபட்டவளின் வேதனையை அதிகமாக்கக் கூடாது என்றுதான் டோரா ஜென்னியைத் தூக்காமல் இருந்தாளா?

ராஜு சொல்வது போல் கண் மூடித் திறப்பதற்குள் ஆம்புலன்ஸ் வந்து சிகிச்சை ஆரம்பமாகி விட்டதே!

அது சரி, அதற்காக டோரா இடித்த புளி மாதிரி நின்றிருந்தது என்ன நியாயம்?

தூக்க வேண்டாம், அடித்துக் கொண்டு அழவேண்டாம்... ஓ.கே... கண்ணில் ஜலம் கூடவா ததும்பாது? வாய் அரற்றாது?

சோபாவில் வித்யா சாய்ந்து கொண்டாள்.

''நீங்க எத்தனை சமாதானம் சொன்னாலும் நான் ஒத்துக்க மாட்டேன்... கூட இருந்து பார்த்த எனக்குத்தான் அந்த ஜடத்தனம் புரியும். நாட் யூ... எமர்ஜன்ஸி ஆபரேஷன் பண்ணணும், அப்படிச் செய்தாலும் ஜென்னி பிழைக்கிறது ஆயிரத்திலே ஒரு சான்ஸ் தான்னு டாக்டர்சொல்றார், இரண்டு பேரும் 'சரி பண்ணுங்கோ'னு உத்தரவு கொடுத்துட்டு யாருக்கோ என்னவோ நடக்கிறமாதிரி ஹாய்யா வீட்டுக்கு வந்துட்டானு உங்ககிட்டச் சொன்னதுக்குத்தான் 'ஹாஸ்பிடல் உள்ளே போக முடியாது. அங்கே ரிஸப்ஷனில் டென்ஷனுடன் இருக்கிறதுக்குப் பதிலா வீட்டுக்கு வந்துட்டா'னு நீங்க ரெடியா சப்பைக் கட்டுக் கட்டினேள். உங்களுக்கு ஒண்ணு சொல்லட்டுமா? எங்க சாந்தா பெரியம்மாவை உங்களுக்குத் தெரியும் இல்லையா? அவ பெண் ரேகாவுக்கு ஒரு தடவை உடம்பு சரியில்லாமப் போச்சு. ஹாஸ்பிட்டல்லே பத்து நாள் அப்ஸர்வேஷன்லே வைக்கணும்னு டாக்டர் சொன்னதாலே ரேணுவை அங்கே சேர்த்துப் பெரியம்மா தானும் கூட இருந்தா. டாக்டர் எக்ஸாமின் பண்ணிண்டு இருக்கறப்போ திடீர்னு ஒரு நாள் ரேணு மயங்கி விழுந்தாள். டாக்டருக்கு விஷயம் புரிஞ்சுபோய் எமர்ஜன்ஸி மணியை அடிச்சு ஆபரேஷன் பண்ணத் தியேட்டருக்கு எடுத்துண்டு போயிட்டா. பெண்ணுக்கு அவசர ஆபரேஷன்னு பெரியம்மா கேட்டாளோ இல்லையோ, அங்கேயே மயங்கி விழுந்துட்டா, அப்புறம் ரேணுவுக்கு ஆபரேஷன் நல்லவிதமா நடந்து அவ கண் விழிச்சதும்தான் பெரியம்மாவும் எழுந்து உட்கார்ந்துண்டா. நம்ப நாட்டிலே அப்படி இங்கே இப்படி... நா ஏன் அப்செட் ஆனேன்னு இப்ப உங்களுக்குப் புரியறதா?''—

''பெண்ணுக்கு உபகாரமாக இருக்கவேண்டிய சந்தர்ப்பத்திலே உங்க பெரியம்மா தானும் ஒரு பேஷண்டாப் படுத்துண்டது ரொம்ப உயர்வான சமாசாரம், சரியான காரியம்னு நீ சொல்றயா?''—

''சரி தப்பு பத்தி நான் பேசவரலே... அந்த க்ஷணம் ஒரு அம்மாவோட மனசு எப்படித் துடிச்சுப் போகும்னுதான் சொல்ல வந்தேன்''—

உன்னோடு பேசிப் பயன் இல்லை என்கிற தினுசில் ராஜு ஒரு பார்வை பார்த்தான். அப்புறம் கைகளை நீட்டிச் சோம்பல் முறித்த வண்ணம் எழுந்து ''ஹௌ அபௌட் டின்னர்?'' என்றான்.

தலையை அமுக்கி விட்டுக் கொண்டே வித்யா எழுந்தாள்.

''ஏன் தலையைப் பிடிச்சுக்கறே —வலிக்கிறதா?''

''ம்....''

''பின்னே வலிக்காம? அசடு மாதிரி அழுதா?''—

வித்யா சமையல் கட்டுக்குப் போய் ஃப்ரிட்ஜைத் திறந்து பார்த்தாள்.

என்ன சமைக்கலாம்?

''தலையை வலிக்கிறதுன்னு சமைக்க வேண்டாமே வித்யா — நா பீட்ஸா ஹவுஸுக்குப் போன் பண்ணி பீட்ஸா கொண்டு வரச் சொல்லிடறேனே...''

தடிமனாய்ச் சப்பாத்தி இட்டு அதில் நறுக்கின கத்தரிக்காய், குடமிளகாய், வெங்காயம், சீஸ் எல்லாம் அடர்த்தியாய்த் தூவி, மேலே தக்காளி ஸாஸ் விட்டு, தயாரிக்கும் ருசியான பீட்ஸா அவனுக்கு ரொம்ப பிடிக்கும்.

வித்யா யோசித்தாள். அப்புறம் வேண்டாம் என்று தலையை ஆட்டினாள்.

''யாரோட பெண்ணோ அடிபட்டதுக்கு நான் ஏன் கலங்கணும்? பெத்தவளே வீட்டுலே வயிறு முட்டச் சாப்பிட்டுண்டு இருப்பா, அப்புறம் நமக்கு என்ன? வகையா நீங்க ஒரு வேளைதான் சாப்பிடறேள், அதைக் கூடச் செய்து போடாட்டா எப்படி? ஃப்ரிட்ஜ்லே வெங்காய சாம்பார் இருக்கு. ரைஸ் குக்கர்லே சாதம் ஆகறதுக்குள்ளே கோஸ் கறியும் ரஸமும் பண்ணிடுவேன்...''

பரபரவென்று ஸிங்கிடம் போன வித்யா வெந்நீரில் முகம் அலம்பிக் கொண்டாள். குக்கரில் அரிசி வைத்தாள். கோஸ் நறுக்கி வேகப் போட்டாள். அது வெந்த நாழிகையில் டேபிளில் தட்டுகளையும், தயிர், ஊறுகாய், வறுவலையும் வைத்தாள்.

இருபது நிமிடத்தில் கணவனைச் சாப்பிட அழைத்தாள்.

சாப்பிடும்போது வித்யா மீண்டும் பழைய பேச்சுக்குப் போனாள்.

''நன்னா யோசிச்சுப் பார்த்தா நீங்களும் நான் சொல்றதை ஒத்துப்பேள் ராஜு. இந்த ஊர் ஜனங்களையும் இவா விட்டேத்தியான ஸ்வபாவத்தையும் பார்க்கறப்போ எனக்குச் சில சமயம் மிருகங்கள் ஞாபகம் தான் வரது. குட்டிகள் கொஞ்சம் பெரிசானதும் பெத்தது அதுகளை விட்டுப் பிரிஞ்சுடற மாதிரிதானே இவாளும் ஒட்டுதல் இல்லாம நடக்கிறா? பதினஞ்சு வயசான பெண்ணும், பிள்ளையும் தனியாய்ப் போய் இருக்கறது இங்கே எத்தனை சகஜமா இருக்கு! பல குடும்பத்துலே அப்பா அம்மா வயசான



மகா சக்தியின் மகாத்மியத்தை விளக்கும் வண்ணப் படம். தெலுங்கிலிருந்து 'டப்' செய்யப்பட்டிருக்கிறது.

உடல் அழகை ஒளிவின்றிக் காட்டி, வஞ்சனையின்றி நடிக்கும் ஜெயமாலினி திரைக்கதையின் வில்லி; உடலை வளைத்து, நிமிர்த்தி, குலுக்கி நடனமாடுகிறார். தியேட்டரை விட்டு வெளியே வரும்போது ரயிலை விட்டு இறங்கியது போலிருக்கிறது! அவரைப் பற்றிக் குறிப்பிட்டுச் சொல்ல ஓர் அதிசயக் காட்சி வருகிறது! மகா சக்தியைக் குறித்துத் தவம் புரியும்போது உடம்பை மூடிப் புடவை உடுத்தி நடிக்கிறார், ஜெயமாலினி. இதைவிடப் பெரிய அதிசயம் என்ன இருக்க முடியும்! மற்றபடி படம் முழுவதும் 'மினிமம்' உடைதான்!

இப்படத்தின் பாராட்டுக்குரிய நடிகை, பழம்பெரும் நட்சத்திரமான ராஜசுலோசனாதான். ஜடாதரி என்னும் பெண் மந்திரவாதியாக வந்து, 'ஜெய் காளி' என்று ஆர்ப்பரித்துப் படம் முழுவதும் ஆக்ரமித்துக் கொள்கிறார்! ஜெய் சுலோசனா!

சொன்னதைச் சொல்லும் கிளி இப்படத்தில் டைரக்டரின் சொல்படி கேட்டு அருமையாக நடித்திருக்கிறது.

பாடல்கள் நிறைய இருக்கின்றன. படத்தின் ஓட்டத்தை இயன்றமட்டும் தடுக்கின்றன.

படத்தில் வரும் இளம் ஹீரோயின்—மாதவி கண்ணீரில் கரைந்து உருகி நன்றாக நடித்திருக்கிறார். ஹீரோ துள்ளிக் குதித்து, நடனம் ஆடி, டிஷ்யூம், டிஷ்யூம் என்று சண்டையிட்டுக் காதலித்துப் படத்துக்கு நிறைவு தருகிறார்.

நகைச்சுவைக் காட்சிகளும் இருக்கின்றன. வண்ண ஒளிப் பதிவு அருமையாயிருக்கிறது.

மகா சிவராத்திரியும், வைகுண்ட ஏகாதசியும் உள்ளவரையில் இம்மாதிரிப் படங்கள் வந்துகொண்டுதான் இருக்கும். —காந்தன்

காலத்திலே தனியா 'ஹோம்'லே இருக்கா. வருஷத்துக்கு ஒரு நாள் மதர்ஸ்டே, ஃபாதர்ஸ்டேனு கொண்டாடறதோட சரி. இதுலே பந்தமும் பாசமும் எங்கே இருக்கு?... அன்னிக்கு மிஸஸ் ஜொனத்தன் என் பெண்ணுக்குப் பதினாறு வயசாச்சு, ஆனா அவ இன்னும் ஆண்களோட பழகத் தயங்கறா. 'டேட்' ஒத்துக்கலே மாட்டேங்கறான்னு சொல்லி வருத்தப்பட்டது ஞாபகம் இருக்கா? பெண் காலா காலத்துலே ஒருத்தனோட பழக ஆரம்பிச்சு, தனக்குனு ஒரு வேலையைத் தேடிண்டுட்டா சுருக்கத் தன்னை விட்டுப் போயிடுவா, ஒரு பொறுப்பு குறையும்னுதானே அவ பேசினா? ஒரு அம்மா வாலே எப்படி இந்தத் தினுசுலே பேச முடியறது? ஷாக்கிங், ஐ டெல் யூ ரியலி ஷாக்கிங்...."

ரஸத்தைக் கிண்ணத்தில் விட்டுக் குடித்த ராஜுவுக்கு லேசாய்க் கமறியது. கனைத்துக்கொண்டு வித்யாவைப் பார்த்தான்.

"ரொம்ப வேகமாக இருக்கிற வாழ்க்கையிலே இதெல்லாம் சகஜம் டார்லிங். எல்லா வீட்டுலேயும் பதினஞ்சு வயசுலே குழந்தைகள் தனியாப் போயிடறதில்லே. சில குழந்தைகள் போக விரும்பினா அதைப் பெத்தவர்கள் தடுக்கிறதில்லே. அதுதான் நிஜம். சின்ன வயசுலேந்து தன்னம்பிக்கையோட குழந்தைகளை வளர்க்கிறதாலே அவா தனியா இருக்கணும்னு விரும்பறதுலே அதிசயம் என்ன? இதை வெச்சுண்டு நீ இந்த நாட்டு மனுஷாளுக்குப் பாசமே இல்லேனு சொல்றது எனக்கு வேடிக்கையா இருக்கு. மிஸஸ் ஜொனதன் பெண் 'டேட்' பண்ணலேனு வருத்தப்படறத்துக்குக் காரணம் அவ சுருக்கத் தனியாப் போகணும்னு இல்லே. சாதாரணப் பெண்களிலேயிருந்து வித்தியாசமா இருந்தா தன் பெண் பின்னாலே கஷ்டப்படலாமேங்கற ஆதங்கத்திலேதான்னு நான் நினைக்கிறேன்."—

வித்யா மோரைக் குடித்தாள். திரும்பத் திரும்பத் தன் பாயிண்டை விடாமல் கணவன் விவாதம் செய்வது எரிச்சலைத் தர, "இந்த நாட்டு மனுஷா எப்படி இருந்தா எனக்கு என்ன? வொய் ஷுட் வீ ஆர்க்யூ அபௌட் இட்?" என்றவள் திரும்பக் கண்களில் நீர் ஊறுவதை உணர்ந்து சட்டென்று எழுந்து கை அலம்பப் போனாள்.

"இந்த நாட்டு மனுஷாள் கிட்டே நல்லது, கெட்டது இரண்டும் இருக்கு: ஐ அக்ரி. ஆனா.இவா வாழற வாழ்க்கை வேறே, இவா பழக்க வழக்கங்கள் வேறே, இவா கல்சர் வேறே. இதைப் புரிஞ்சுக்கணும். சும்மா நம்ப அம்மா, நம்ப குடும்பம், நம்ப பழக்க வழக்கங்களோட இவாளைக் கம்பேர் பண்ணிப் பார்க்கறது சரியில்லே. இவாளை இவா கண்ணோட்டத்திலேந்து பார்த்து, ஜட்ஜ் பண்ணணும். அப்பத்தான் எதுவும் தெளிவாப் புரியும்.... இருபத்தியொரு வயசாகியும் இன்னும் இதெல்லாம் புரிஞ்சுக்காத குழந்தையா நீ இருக்கியேன்னு எனக்கு ஆச்சரியமா இருக்கு டார்லிங். ட்ரை டு க்ரோ அப், வில் யூ?...."

கை அலம்பிக் கொண்டு வந்தவளை ராஜு பிடிவாதமாய் இழுத்து மடியில் உட்கார வைத்து இதமாய்ப் பேசிய நிமிஷத்தில் வாசல் மணி அழைத்தது. (தொடரும்)



ஆட்டிப் படைத்த ஆவி வடிவம்

பேய், பிசாசு, பூதம், ஆவி வடிவங்களில் உங்களுக்கு நம்பிக்கை உண்டா? இவ்வகையில் உங்களுக்கு நினைத்தாலே மெய் சிலிர்க்கும் விசித்திர அனுபவம் ஏதும் ஏற்பட்டதுண்டா? அப்படியானால் ரத்தினச் சுருக்கமாக எழுதி அனுப்பவும். பிரசுரமாகும் அனுபவங்களுக்குப் பரிசு உண்டு.

முடிவு தேதி: மார்ச் 20.


யாருக்கும் மனத்தாங்கல் உண்டாதிருக்க உண்மையான பெயர்கள், ஊர்கள் இவற்றைக் குறிப்பிடாமல் மாற்றி எழுதலாம். ஆனால் "ரீல்" மட்டும் விடாதீர்கள்! அப்புறம் ஆவிகள் உங்களைச் சும்மா விடாது!

உங்கள் உண்மைப் பெயரையும் விலாசத்தையும் மறவாமல் குறிப்பிடவும். பிரசுரமானால் சன்மானம் வந்து சேர வேண்டுமல்லவா?

புகார் ஏதும் எழுந்தால் முழுப் பொறுப்பும் கட்டுரை ஆசிரியருடையதே; கல்கி ஸ்தாபனம் எந்த விதமான பொறுப்பும் ஏற்காது.

கடிதப் போக்குவரத்துக் கிடையாது. பிரசுரமாகாத கட்டுரைகளைத் திருப்பி அனுப்ப இயலாது. உறையின் மீது 'ஆட்டிப் படைத்த ஆவி வடிவம்' என்று குறிப்பிடவும்.

ஆசிரியர், கல்கி, சென்னை—32





சாண்டில்யன்

அத்தியாயம் 32

சாரு

மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதியில் ஏறுவது மிகக் கடினமென்றாலும், அதிக சிரமப்படாமலே ஏறினான் இந்திரஜித் அனந்த். அடர்ந்த காடுகளுடன் அமைந்திருந்த அந்த மலை உச்சியை நோக்கி. காடுகளில் ஏதோ ஒவ்வொரிடங்களிலிருந்து எழுந்து கொண்டிருந்த கொடிய விலங்குகளின் பயங்கர உறுமலும், நள்ளிரவாதலால் அடவியின் ஆழ்ந்த அந்தகாரம் விளைவித்த அச்சமும், ஆங்காங்கு கேட்டுக்கொண்டிருந்த வண்டுகள் முதலியவற்றின் ரீங்காரமும், பாம்பு போன்ற தரையில் ஊர்ந்து செல்லும் ஜந்துக்கள் மரச் சருகுகளில் விளைவித்த சலசலப்பும், ஏதோ ஓரிடத்திலிருந்து ஆந்தை அலறிய அபசப்தமும், எல்லாமாகச் சேர்ந்து இதயத்தைக் கிடுகிடுக்க வைக்கும் சூழ்நிலையை சிருஷ்டித்தும் இந்திரஜித் அனந்த் எதைப் பற்றியும் கவலைப்படாமல் காடுதான் தனக்கு வீடு என்பது போல் சர்வ சாதாரணமாக ஏறிச் சென்றான் அடவியின் ஊடே. இப்படி நீண்ட நேரம் பயணம் செய்து காடு சற்று இடைவெளி கொடுத்த இடமொன்றில் வந்து நின்று கொண்டு மலையின் உச்சியையும் நோக்கிக் கீழேயும் நோக்கினான்.

கீழே பெரும் பாதாளத்தில் அலை கடல் முப்புறம் தாக்க, நிலத்துடன் இணையும் பக்கம் அடவிகளால் அணுக முடியாதிருக்க, பெரும் பிசாசு போல் நின்று கொண்டிருந்தது கானோஜி ஆங்கரேயின் பிரசித்தி பெற்ற கடற் கோட்டையான விஜய துர்க்கம். இந்திரஜித் இருந்த இடத்துக்கும் விஜய துர்க்கம் இருந்த இடத்துக்கும் தூரம் அதிகமென்றாலும், அந்தக் கோட்டை பயங்கரமான அந்த இரவிலும் அழகாகவே தெரிந்தது. அந்த நள்ளிரவிலும் கூட விஜய துர்க்கத் துறைமுகத்தைக் காத்து நின்ற நாலைந்து போர்க் கப்பல்கள் ஒன்றில் தெரிந்த பாய்மர விளக்கு அனந்தை நோக்கிப் பரிகசிப்பது போல் கண்ணைச் சிமிட்டியது. கடலுக்கு அழகையும், கானோஜி ஆங்கரேயின் கடலாதிக்கத்துக்குத் தனி முத்திரையையும், விரிவடைந்து கொண்டிருந்த மகாராஷ்டிர சாம்ராஜ்யத்துக்குக் கடல் வழியில் பெரும் பாதுகாப்பையும் அளித்த விஜய துர்க்கத்தின் பிரதான வாயிலை அலங்கரித்த இரண்டு விளக்குகள் கூட சிறிது மங்கலான ஒளியை வீசிக் கொண்டிருந்தன தூரத்தின் காரணமாக,

அந்தக் கோட்டையைக் கண்டதும் இந்திரஜித்தின் மனத்தில் விவரிக்க இயலாத பெருமிதமும் மகிழ்ச்சியும் ஏற்படவே செய்தது. ''அதோ அந்தக் கோட்டையில் உறைகிறது ஒரு சிங்கம். அது எழுந்தால் நடுங்குகின்றன பல சாம்ராஜ்யங்களின் கடற்படைகள். ஆனால் யார் செய்த பாவமோ அந்தச் சிங்கம் இப்பொழுது அசைய மறுக்கிறது. வயதின் கோளாறோ, வியாதியளித்த பலவீனமோ தெரியாது, சிங்கம் நகருவதாகக் காணோம்.'' என்று கனோஜீ ஆங்கரேயைப் பற்றி எண்ணிப் பெருமூச்சு விட்ட இந்திரஜித் மலை உச்சியை நோக்கினான் சில விநாடிகள். பிறகுதான் கைத்துப்பாக்கியை எடுத்து இருமுறை சுட்டான் ஆகாயத்தில். சுட்டுச் சிறிது நேரம் நின்றான். விநாடிகள் ஓடின. மலை உச்சியில் ஒரு தீபம் தோன்றியது. அந்தத் தீபத்தில் ஒரு குடிசையும் அதன் திறந்த கதவும் கண்ணுக்குத் தெரிந்தது. குடிசைக் கதவைத் திறந்து கொண்டு வந்தது யாரென்பதை உணர்ந்ததால் அனந்த் மிகுந்த குதூகலத்துக்கு உள்ளானாலும், உடனடியாக மலை உச்சியை





நோக்கி விரைய இஷ்டப்பட்டாலும் தனது ஆவலை அடக்கிக் கொண்டு நிற்கவே செய்தான். தீபம் அவன் இருந்த திசையை நோக்கி இருமுறை ஆடிய பிறகுதான் அவன் உற்சாகத்துடன் உச்சியை நோக்கி ஏறத் தொடங்கினான்.

அவன் ஏறத் தொடங்கிய சில நிமிஷங்களுக்கெல்லாம் அந்த விளக்கும் மறைந்தது, குடிசைக்குள்ளே. குடிசையை அடைய இந்திரஜித்துக்கு இருந்த ஆர்வம் அவனை வெகு துரிதமாக மலை உச்சியை நோக்கி ஏற வைத்தது. மலைமீது செல்லச் செல்ல அடவியும் அடர்ந்து கொண்டே சென்றது. மிகவும் அடர்த்தியான ஒரு பாகத்துக்கு வந்ததும் தனது யாத்திரை முடிந்துவிட்டதென்பதை உணர்ந்த அனந்த் சிறிது காட்டு முகப்பில் நின்றான்.

எதிரே மரங்கள் சுற்றிலும் வெட்டி ஒதுக்கப்பட்டதால் தன்னந் தனியாக மலையின் உச்சிச் சரிவில் தெரிந்த அந்தக் குடிசையின் உள்ளே விளக்கு எரிந்து கொண்டிருந்ததைக் கதவிடுக்கின் மூலம் கண்டான் இந்திரஜித். ஆகவே மரங்களின் மறைவிலிருந்து வெளி வந்து குடிசையை அணுகி உள்ளே செல்லாமல் அதன் வாயிலிலேயே உட்கார்ந்து நன்றாகக் காலை நீட்டிச் சிரம பரிகாரமும் செய்து கொண்டான். சில விநாடிகள் கதவும் திறக்கவில்லை, அனந்தும் குரல் கொடுத்து அழைக்கவில்லை. திடீரென்று உள்ளிருந்த விளக்கு அணைக்கப்பட்டது. எங்கும் இருள் மூண்டது. அதனால் அனந்த் மிரளவில்லை. ஆகாயத்தை நோக்கி நட்சத்திரங்களை ஏதோ கணக்கெடுத்தான். ''சந்திரோதயத்துக்கு நேரம் இருக்கிறது'' என்று சற்று இரைந்து கூறினான் வாய் விட்டு.

அப்பொழுது குடிசைக்குள்ளிருந்து வெளி வந்த உருவம் அனந்த் பக்கத்தில் வந்து உட்கார்ந்து கொண்டு, ''சந்திரோதயத்தைப் பற்றி என்ன கவலை இப்பொழுது?'' என்று கேட்கவும் செய்தது.

அனந்த் அந்தக் கேள்விக்குப் பதில் சொல்லாது போகவே அந்த உருவம் அவனை நன்றாக நெருங்கி அவன் தோளின் மீது தனது கையையும் போட்டது. அனந்த் அந்தக் கையை எடுத்து அப்புறம் போட்டான். ''பெண்ணே! இது சரியல்ல....'' என்று சிறிது கடுமையுடனும் சொன்னான்.

அந்தப் பெண் கேட்டாள், ''எது சரியல்ல?'' என்று.

''உன் செய்கை.'' திட்டமாக இருந்தது அனந்தின் பதில்.

''என் செய்கைக்கு என்ன?'' என்று வினவினாள் அந்தப் பெண்.

''என்னை நீ தொடுவது தவறு.''

''ஏன்?''

''நான் பரபுருஷன்.''

''நான் அப்படி நினைக்காவிட்டால்?''

''உன் நினைப்பு மட்டும் இதில் முக்கிய மல்ல.''

''வேறு யார் நினைப்பு? உங்கள் நினைப்பா?''

''அதைப் பற்றிக் கவலை இல்லை. சமூகத்தின் நினைப்பு.'' இதைக் கேட்ட அவள் மிக மெதுவாக நகைத்தாள். அவன் கழுத்தைச் சுற்றித் தனது இரு கைகளையும் போட்டுக் கட்டினாள்: ''இப்பொழுது சமூகம் என்ன சொல்கிறது பார்ப்போம்.'' என்று சொன்னாள் சிரித்த வண்ணம்.

என்னதான் திட சித்தமுடையவனாயிருந்தாலும் அனந்தின் உணர்ச்சிகள் கலங்கவே செய்தன, அந்தக் காரிகையின் துணிகர அணைப்பால். அடுத்த கணம் அவள் கைகள் அவன் முகத்தைக் கீழே இழுத்துத் தலையைத் தனது மடியில் படுக்க வைத்துப் பிடித்தன. அந்த நிலையில் அவள் கால்களின் இன்மை இணைப்பு அளித்த சுகத்தில் அவன் அசையாமல் கிடந்தான். அவனை நோக்கிக் குனிந்து ''கண்ணை மூடிக்கொள்ளுங்கள்'' என்று கூறினாள் அந்தப் பெண்.

''எதற்கு?''



''சமூகத்தைப் பார்த்துப் பயப்படாதிருக்க.''

''விளையாடும் விஷயமல்ல இது.''

''வேறு என்ன விஷயம்?''

''உன் கௌரவத்தைப் பற்றிய விஷயம்.''

''அதற்குப் புதிதாக என்ன குறைவு வந்துவிட்டது இப்போது?'' என்று வினவிய அந்தப் பெண் அனந்தின் நெற்றியில் தன் இதழ்களைப் புதைத்து மீண்டாள்.

''எந்தக் குறையும் வரவில்லை சாரு. நீ தூய்மையானவள். ஆனால்....'' என்ற அனந்தை அவள் இடைமறித்தாள். ''இந்திரஜித்! என் தூய்மையை நீங்கள் ஒப்புக்கொள்ளலாம். நீங்கள் சொல்லும் சமூகம் ஒப்புக்கொள்ளாது. இந்த மலைக் குடிசையில் தனியாக வசிக்கிறேன். மாதத்துக்கு ஒரு முறையாவது நீங்கள் இங்கு வந்து போகிறீர்கள். இருமுறை உங்கள் நண்பர் வந்து போகிறார். இது ரொம்ப கௌரவத்தை எனக்கு அளிக்கும் என்று நினைக்கிறீர்களா? இல்லை, உங்களின் நவர் எதிரிகளும் கண்ணை மூடிக் கொள்வார்கள் என்று நினைக்கிறீர்களா? விஜயதுர்க்க வாசிகளுக்கு நான் ஒரு வேசி. ஒழுக்கம் கெட்டவள். அந்த நினைப்பில் இந்தக் குடிசைக்கெதிரே இரண்டு மூன்று வாலிபர்கள் நடமாடியதும் உண்டு. ஆனால் அவர்கள் என்னை அணுக முயன்ற நேரத்தில் உங்கள் நண்பர் வந்தார். அவர் வந்ததும் அவர்கள் மறைந்து விட்டார்கள். அப்புறம் யாரும் வரவில்லை. பயத்தால். உங்கள் நண்பரை நினைத்தால் மொகலாய சாம்ராஜ்யமே நடுங்குகிறதே. சாதாரண மக்கள் நடுங்க மாட்டார்களா? அதற்குப்

பிறகு யாரும் இங்கு வருவதில்லை. தூரத்திலிருந்து கையைக் காட்டி ஏதோ சொல்கிறார்கள். நான் திரும்பிப் பார்த்தால் ஓடிவிடுகிறார்கள். என் கௌரவம் என்றோ மலையேறி விட்டது. அதைப் பற்றி நான் கவலைப்படவில்லை. ஆனால் ஒரு கவலை இருக்கிறது எனக்கு'' என்று கூறினாள் அந்தப் பெண்.

''என்ன கவலை சாரு?'' என்று வினவினான் அனந்த் துக்கம் துளிர்த்த குரலில்.

''நீங்கள் இருவரும் என்னை என்றாவது ஒரு நாள் கைவிடலாம் என்ற கவலை'' என்றாள் சாரு.

''அந்தக் கவலை அர்த்தமற்றது. அதை அகற்றிவிடு உன் உள்ளத்திலிருந்து'' என்றான் அனந்த்.

''அப்படியா? அர்த்தமற்றதா?'' என்று வினவிய சாரு, ''வாருங்கள் உள்ளே போகலாம். பனி விழ ஆரம்பித்துவிட்டது.'' என்று கூறிக் கொண்டே அவனைத் தன் மடியிலிருந்து எழுப்பி உட்கார வைத்துவிட்டுத் தானும் எழுந்திருந்து குடிசைக் கதவைத் திறந்து கொண்டு உள்ளே சென்றாள். உள்ளே சென்ற சாரு, அனந்த் உள்ளே வந்ததும் குடிசைக் கதவை மூடி விளக்கை ஏற்றினாள்.

அந்தச் சிறு விளக்கிலும் சாரு அப்ஸரஸ் போல் நின்றாள். அவள் சந்திர முகத்தின் இரு கருவிழிகளும் சிறு விளக்கொளியிலும் ஆசையைக் கொட்டின அனந்தை நோக்கி. சீறி நின்ற மார்பகம் உடலின் அமைப்புக்குச் சிறிது அதிகமாயிருந்தது. அப்படி அதிகமாயிருந்ததாலேயே அதன் அழைப்பும் அதிகமாயிருந்தது. சிம்மாதனத்தில் ஏறி உட்காரக் கூடிய தோரணை அவளிடமிருந்தது. கால்களின் திண்மையும் அவை இணைந்த இடங்கள் இடம் கொடுத்த ஊகங்களும் யாரையும் சீரழித்து நிலைகுலையச் செய்யும் தன்மையை அடைந்திருந்தன.

அந்த அழகைக் கண்ட அனந்த் பெருமூச்செறிந்தான். ''இத்தனை அழகுக்கு அனுவசியமான அவமானமா? இவள் கண்ணியத்தை இவள் கண்களே பறைசாற்றுமே. அந்தக் கண்களை ஏன் பார்க்கவில்லை சமுதாயம்?'' என்று கேட்டுக் கொண்டான் இந்திரஜித்.

அவன் முகத்தில் துளிர்த்த ஆவலையும் அதை அவன் அடக்கிக் கொண்டதையும் கவனித்த சாரு சிறிது நகைத்தாள்.

''ஏன் நகைக்கிறாய் சாரு?'' என்று வினவினான் அனந்த்.

''கிட்டே இருப்பவர் என்னை அணுக அஞ்சுகிறார். தூரே இருப்பவர்கள் என்னை அணுக இஷ்டப்படுகிறார்கள். ஆனால் அவர்களும் உங்களிடமுள்ள அச்சத்தால் விலகி நிற்கிறார்கள். இப்படி வேறுபட்ட அச்சத்தின் அம்சங்களால் எனக்கு இந்தக் குடிசையில் நிரந்தர துறவறம்'' என்று கூறினாள் சாரு.

பிறகு குடிசையின் மூலைக்குச் சென்று ஒரு பாயை எடுத்து வந்து விரித்துப் போட்டாள். ''படுத்துக் கொள்ளுங்கள். விடிவதற்கு முன்பு நான்கு நாழிகையாவது உறங்கலாம்'' என்றும் சொன்னாள்.

''நீ?'' என்றுகேட்டான் அனந்த்.

''நான் வெளியே உட்கார்ந்திருக்கிறேன்'' என்ற சாரு வெளியே செல்ல முற்பட்டாள்.


அவளைக் கையைப் பிடித்து இழுத்து நிறுத்தினான் இந்திரஜித். ''நீ படுத்துக்கொள்'' என்று பாயைக் காட்டினான்.

முடியாது என்பதைக் குறிக்கத் தலையை அசைத்தாள் அவள். உள்ளே உடைந்து கொண்டிருந்த அவள் இதயத்தைக் கவனித்தான் அனந்த். சட்டென்று அவளை இழுத்து அணைத்துக் கொண்டான்.

அந்த அணைப்பு கடுமையாயிருந்தது. ஆனால் அதில் ஒரு வித்தியாசமும் இருந்தது. அதைச் சாரு உணர்ந்து கொண்டாள்.

(தொடரும்)

அருள் வாக்கு



வேதமும் சிருஷ்டியும்

ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராசாரிய சுவாமிகள்

''பரமாத்மாவுக்கு உயிராக இருக்கிற சுவாஸமே வேதம். அநாதியான அவர் என்றென்றும் உயிரோடு இருந்திருப்பதால், வேதமும் அவரது சுவாசமாக, அநாதியாக இருந்திருக்கிறது. பிரம்மா இந்த சப்தங்களை வைத்துக் கொண்டே சிருஷ்டி செய்தார் என்று சாஸ்திரங்கள் சொல்கின்றன.

நாகரிக மூளைக்கு ''இதெல்லாம் சுத்த நான்ஸென்ஸ்'' என்று தோன்றுகிறது.

நன்றாக ஆராய்ந்து பார்த்தால் பெரிய விஞ்ஞான உண்மையே இதில் இருக்கிறதென்று தெரிகிறது.

சப்தம் என்பது என்ன? Vibration தான். (அதிர்வுதான்) என்று ஸையன்ஸில் சொல்லுகிறார்கள். 'அணுவுக்குள் புகுந்து பார்த்தால் எல்லா வஸ்துவும் ஒன்றுதான். (அத்வைதம்தான்). ஏன் இப்படி வேறு வேறு வஸ்துக்களாகத் தெரிகிறது என்றால், அந்த ஒரே சக்தியில் தோன்றுகிற வெவ்வேறு விதமான Vibration களால்தான்' என்கிறார்கள்.

ஒரே சக்தியின் பலவித Vibration என்பதும், ஒரே பரமாத்ம சுவாஸத்தின் பலவித Vibration ஆன (வேத) சப்தம் என்பதும் முழுக்க முழுக்க ஒன்றேதான்.

மனுஷ்யர்கள், பிராணிகள் இருக்கிறோம். நம்முடைய ஆரோக்கியம், உணர்ச்சிகள் முதலியன எப்படி ஏற்படுகின்றன? நம்முடைய சுவாஸத்திலிருந்துதான். நாடிகளில் சுவாஸம் போகிறபோது ஏற்படுகிற Vibrationகளால்தான் தேகத்தின் பல பகுதிகளுக்கும் ஆரோக்கியம், அல்லது ஆரோக்கியக் குறைவு ஏற்படுகிறது. யோக ஸாதனங்களால் மூச்சை நாடிகளில் ஒழுங்குபடுத்திக் கொள்கிறவர்களுக்கு ஆச்சரியப்படும்படியான ஆரோக்கியம் இருக்கிறது. உடம்புக்கு மட்டுமின்றி மனஸின் ஆரோக்கியத்துக்கும் மூச்சே முக்கியமாக இருக்கிறது. நாடி சலனத்தைப் பொறுத்தே ஆரோக்கியமான (நல்ல), அல்லது ஆரோக்கியக் குறைவான (கெட்ட) எண்ணங்கள் உண்டாகின்றன.

இப்படிப் பார்த்துக் கொண்டேபோனால் இத்தனை ஜட வஸ்துக்களும் சைதன்ய வஸ்துக்களின் ஸ்ருஷ்டியாகி, விருத்தியாகி, அழிகிறபோது, மூல சக்தியில் ஏற்படும் சலனங்களெல்லாம் அதன் சுவாஸ கதியில் ஏற்படுபவை என்பதும், அவற்றின் சப்தரூபமே வேதம் என்பதும் ஏற்கக் கூடியதுதான் என்று ஆகிறதோ இல்லையோ?

பரமாத்மாவின் ஸ்ருஷ்டி சக்தி முழுவதையும் சேர்த்து பிரம்மா என்கிறோம். அதனால் அவரே வேதத்தைப் பூரணமாக ஸ்வீகரித்தார் என்று சாஸ்திரங்கள் சொல்கின்றன. அனந்தமான அந்த வேதத்தில் கொஞ்சம் கொஞ்சம்தான் இப்போது நமக்கு ரிஷிகள் மூலம் தெரியவந்திருக்கும் வேதங்கள். சலனம்-சப்தம் இதனால்தான் சகல காரியமும் ஏற்பட்டிருக்கிறது என்றால் லோக சக்திகளை அநுகூலம் பண்ணித் தரவும், நம் சித்தத்தையே சுத்தம் பண்ணிக் கொடுக்கவும் கூடச் சப்தங்கள் இருக்கத்தானே வேண்டும்? அப்படிப்பட்ட சப்தக் கோவைகள்தாம் நமக்கு ரிஷிகள் வழியே கிடைத்துள்ள வேதம்.

ரேடியோப் பெட்டி 'எலெக்ட்ரிக் வேவ்'களை (மின் அலைகளை) 'ஸவுண்ட் வேவ்' (சப்த அலை) ஆக்கித் தரவில்லையா? அதிலும் குறிப்பிட்ட ஸ்டேஷன்களை மட்டும் பிடிக்கவில்லையா? அதே மாதிரி ஆகாச வெளியான பரமாத்மாவில் இத்தனைக்கும் மூலமாக இருக்கும் Vibration களில் லோக க்ஷேமமாகவும், ஆத்ம க்ஷேமமாகவும் உள்ளவற்றை மட்டும் கிரஹித்து அதை ஸவுண்ட் வேவ்களாக ரிஷிகள் தந்திருப்பதுதான் வேதம். ஜடமான ரேடியோப் பெட்டிக்கு இருக்கிற சக்தியை சைதன்யமுள்ள ஜீவர்களும் தபஸினால் சம்பாதித்துக் கொள்ள முடியும்.

வி. ஐ. பி.

இன்றைய இந்தியாவில் நாங்கள் தான் வி. ஐ. பிக்கள்:

Velai
Illa
Pattadharigal !

— பூண்டி



இலக்கியங்களிலே
துகில் படைப்புகள் — 5

துகில்



கண்வ முனிவர் ஆசிரமத்தை விட்டு சகுந்தலை கணவன் மனைபுக ஏற்பாடுகள் நடக்கின்றன. அவள் அலங்கரிக்கப் படுகிறாள். ஆசிரமத்து வனதேவதைகள் அளித்த பட்டுத்துகில்கள், ஆபரணங்கள், செம்பஞ்சுக் குழம்பு முதலியவை அவளுக்குச் சூட்டப்படுகின்றன. அவள் தந்தையை நமஸ்கரிக்கிறாள்; தீவலம் வந்து, எல்லோரிடமும் பிரியா விடை பெற்று, ஆசிரமக் குடிலை விட்டு வெளியே வருகிறாள். அங்கு ஒரு சூல்கொண்ட மானைப் பார்க்கிறாள். அவள் வளர்த்த மான் அது. சகுந்தலை தன் தந்தையிடம் ''அப்பா, இந்தப் பெண்மான் குட்டியை ஈன்றதும் எனக்கு செய்தி சொல்லி அனுப்புங்கள்.'' என்று கூறக் கண்வரும் சம்மதிக்கிறார். பிறகு நடக்கத் தொடங்கிய சகுந்தலை, யாரோ அவள் பட்டுத்துகிலைப் பற்றி இழுப்பதை உணர்ந்து திரும்புகிறாள். ஒரு சிறிய அழகிய மான்குட்டி கண்களில் ஏக்கம் ததும்ப, அவள் பட்டுத்துகிலின் தலைப்பை வாயால் கவ்வி, அவளைப் போக விடாமல் இழுக்கிறது. அதைக்கண்டு கலங்கிய சகுந்தலையிடம் கண்வர் கூறுகிறார்: ''உனது குழந்தையான இம் மான் குட்டிக்கு நீ போவதில் விருப்பமில்லை. அதனால்தான் உன் துகிலை இழுக்கிறது.''

—காளிதாசனின் அபிஞான சாகுந்தலம்
நாலாவது அங்கத்தில் ஒரு காட்சி

நமது லக்ஷ்மி மில்ஸ் ஸ்தாபனம் காலம் காலமாக வந்த இந்தியப் பண்பாட்டைப் பின்பற்றுகிறது. நேர்மையே இந்த ஸ்தாபனத்தின் அடிப்படை. ''செய்யும் தொழிலே தெய்வம்; அதில் நேர்மையே எங்கள் செல்வம்'' என்ற குறிக்கோளுடன் செயல்பட்டு மக்களுக்குச் சேவை புரிவதையே தலையாய கடமையாகக் கொண்டுள்ளது நமது லக்ஷ்மி மில்ஸ் ஸ்தாபனம்.

லக்ஷ்மி மில்ஸ்
கம்பெனி லிமிடெட்
கோயம்புத்தூர்.

பற்றியிழுத்த துள்ளும் மான்குட்டி



ADWAVE/LM/1156 TAM C

அப்பாவின் குரலைக் கேட்டு விவேக் தன் சிந்தனையை உதறிவிட்டுத் தலை நிமிர்ந்தான்.

''நீங்க பேசறதை யெல்லாம் மாடிக்கு வந்து பேசுங்க அப்பா... இங்கே நீங்க ஏதாவது பேசி....பதிலுக்கு நாங்க ஏதாவது சொல்லி.... வேண்டாம்ப்பா!''

அவன் பேச்சில் இருந்த நியாயம் அவருக்கு உறைக்கத்தான் செய்தது.

பரிமளாவின் காதுபடும்படி இந்த நாடகங்களை நடத்துவானேன்?

''சரிடா... ரொம்ப சரி...''

அவர் எழுந்து மாடிப் படிகளில் ஏறவும் விவேக்கும் அவன் தம்பி அசோக்கும் அவரைப் பின்தொடர்ந்தனர்.

அவர் உள்ளே போய்க் கட்டிலில் உட்கார்ந்து கொண்டதும் சின்னவன்தான் கேட்டான்.

''நீங்க செய்திருக்கிற காரியம் உங்களுக்கே நல்லா இருக்கா அப்பா...? தாய்க்குத் தாயாய் எங்களை வளர்த்துட்டு இப்ப நீங்க முடிவெடுத்ததுதான் எங்களுக்கு வருத்தமாயிருக்கு!''

''இப்பவும் நான் உங்களுக்குத் தாய்க்குத் தாயாய் இருப்பதாகவே நினைச்சுக்கோங்கோ. பரிமளாவும் நல்ல பொண்ணுதான்... நீங்க வித்தியாசமாப் பார்க்காதேங்கோ!''

''நீங்க என்னதான் சமாதானப்படுத்தினும் நீங்க இப்படிச் செஞ்சுக்கிட்டது தவறுதான்!''

''இதை நான் ஒரு கடமையா நினைச்சுச் செஞ்சுக்கிட்டிருக்கேன்.... ஆறு ஒண்ணு... அப்பாவுக்கு ஒரு மனைவி, உங்களுக்கு ஒரு சின்னம்மா வந்துட்டாங்களே, நம்ப நிலைமை என்னமோன்னு நீங்கள்ளாம் கவலைப்படவே வேண்டாம். உங்க அக்கா அத்தானுக்கு டிரங்கால் போட்டு அவங்களை வரச் சொல்லு... சொத்து பத்தெல்லாம் வக்கீலை வச்சு இப்பவே உயில் எழுதிக்கலாம்.''

''திடுதிப்புனு இதெல்லாம் என்னப்பா?''

''நான்தான் சொல்றேனேடா! நானே எதிர்பார்க்கலை — இப்படி நடக்கும்னு! அவ ரொம்ப நல்ல பொண்ணு. அவ மனசு நோகும்படியா எதுவும் நடந்துக்காதீங்க!''

இவ்வளவு பெரியவர்... அப்பாவே குரல் தழுதழுக்கப்பேசுவதைக்கேட்டதும் அவர்கள் பேச முடியாமல் மௌனத்தில் ஆழ்ந்தனர்.


டிரங்கால் கிடைத்ததுமே மகளும் மருமகனும் அன்று மாலையே வந்து சேர்ந்து விட்டனர். மாமனாரிடம் நேரிடையாக விசாரிக்க வெட்கப்பட்டுக் கொண்டு சுற்றி வளைத்துப் பேசினார் மருமகன். பொண்ணும் அப்பா தனக்கு மட்டுமே ஏதோ வஞ்சனை செய்துவிட்டாற்போல் சதா கண்ணீரைக் கொட்டித் தன் அதிருப்தியைத் தெரிவித்துக்கொண்டாள்.

பெரிய பிள்ளை விவேக்கின் மாமனார், மாமியார் தம் சம்பந்தி ஏதோ தகாத காரியம் செய்தது போல் அடிக்கொரு தரம் நொடித்துப் பேசிய வண்ணம் இருந்தார்கள். குடும்ப வக்கீலும் சாயங்காலம் வந்து சேர்ந்தார்.

தொண்டையைச் செருமிக் கொண்டு அப்பா சொல்லச் சொல்ல, வக்கீலும் குறிப்புக்களைக் குறித்துக் கொண்டிருந்தார். அனைவருமே தங்களை மீறிய திகைப்பில் ஆழ்ந்து உட்கார்ந்திருந்தார்கள்.

''எல்லாம் நான் சம்பாதித்த சுயார்ஜிதச் சொத்துக்கள். ஆயிரம் பேருக்கு மேலே வேலை செய்யும் இந்தப் பாக்டரி என் உழைப்பினால் உருவானதுதான். அதிலே இரண்டு பையன்களுக்கும் சரியான அந்தஸ்து கொடுத்து, அவனவனுக்குப் பகிர்ந்து கொடுத்திருக்கிற பதவி எப்பவும் போல நீடிச்சு, அவனவன்களுக்கே அவற்றைச் சொந்தமாக்கி எழுதியிருக்கிறேன். இந்தப் பங்களா கீழ்ப் பகுதி பெரிய பையனுக்கு மேல் பகுதி சின்னப் பையனுக்கு... என் சம்சாரத்தோட நகை நட்டுக்கள், பட்டுப் புடவை வகையறுக்கள் பொண்ணுக்குச் சேர வேண்டியது... சிறியதாகக் கட்டியிருக்கிற அவுட் ஹவுஸ் எனக்கும் என் இளைய சம்சாரத்துக்கும் போதுமானது. மற்றப்படி சொத்துக்கள் எதுவுமே எனக்கு வேண்டாம். ஐந்து ஏக்கரா நிலத்திலிருந்து வரும் வரும்படியும், என் பெயரிலே ஏதோ பாங்கிலே போட்டிருக்கிற பணத்திலே வரும் வட்டியும் எனக்கும் என் புது சம்சாரத்துக்கும் போதும். ஒரு சந்தர்ப்ப வசத்தால் இந்தப் பெண்ணைக் கல்யாணம் பண்ணிக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது. இதற்கு மேலே நான் ஒன்றும் சொல்ல விரும்பவில்லை.''

''அம்மா மூச்சு இருந்தா இப்படி யெல்லாம் நடந்திருக்குமா?'' சிறு வயதில் எப்





போதோ போய்விட்ட அம்மாவுக்காகக் கண்ணீர் சிந்தினாள் பெண்.

பிள்ளைகளுக்கு அப்பாவின் சொத்தைப் பற்றிய பயம் நீங்கிவிட்டாலும், அந்தப் புது சின்னம்மாதான் அப்பாவைத் தங்களிடமிருந்து பிரித்துத் தனியாக அழைத்துப் போவது போல் குரோதம் பொங்க அவளைப் பார்த்தார்கள்.

மாப்பிள்ளை பொண்ணுக்குச் சாதகமா முடிவு கிடைத்த திருப்தியில் பெரிய பிள்ளை விவேக்கின் மாமனார், மாமியார் திரும்பிப் போய்விட்டார்கள்.

இத்தனை நாளும் அந்த மாடியில் அப்பாவுடனேயே இருந்துவிட்டு, இப்போது தனியாகத் தான் இருக்க வேண்டும் என்பதை நினைத்தபோது, எதையோ பறிகொடுத்தாற் போல் இருந்தது இளைய பிள்ளை அசோக்கிற்கு.

திடீரென்று அந்தப் பெரிய குடும்பம் 'சிதர்' தேங்காயாகப் போய்விட்டாற்போல இருந்தது.

வேலைக்காரி கூட வேண்டாம் என்று தானே பெருக்கி நறுவிசாக வேலை செய்து கொண்டிருந்த புது மனைவியைப் பார்த்து, "பரிமளம்... அவங்க சொல்றுப்பிலே இன்னும் கொஞ்சம் யோசிச்சு உன்னை நல்ல இடத்திலே கட்டி வச்சிருப்பேன்... அநாவசியமா என் வாயைக் கட்டிப் போட்டுட்டியேம்மா!" என்றார். அவர் கண் கலங்கிவிட்டது.

"அப்படி யெல்லாம் சொல்லாதீங்க.... நீங்க எனக்குக் கிடைச்சது தெய்வமே கிடைச்ச மாதிரிங்க..."

ஒரு கணம் இருவர் மனமும் நடந்துபோன சம்பவத்திலே ஆழ்ந்து போய்விட்டது.

இன்னொரு பாக்டரி வாங்கிப் போட, நிலத்தை நல்ல விலைக்கு விற்க வேண்டும் என்ற தீர்மானத்தோடு தம் நிலத்தை மேற்பார்வையிடும் கணக்கர் வீட்டில் வந்து தங்கியிருந்தார் அவர். மறு நாள் வாங்க

வேண்டிய பார்ட்டி வந்து நிலத்தை அளந்து விலை பேசலாம் என்று தகவல் சொல்லி விட்டுப் போயிருந்தார்.

கணக்கரின் வீட்டிலே ஒரே புழுக்கம். உள்ளுக்குள் படுத்துக்கொள்ள முடியாமல் கயிற்றுக் கட்டிலை வாசலில் போட்டுக் கொண்டு படுத்திருந்தார் அவர். ஊருக்கு அப்பாலே ஓடும் ஆற்றின் குளுமை கலந்த காற்று சுகமாக உடம்பை வருடிச்சென்றது. நல்ல அயர்ந்த தூக்கத்தினூடே, எங்கோ தூரத்தில் தெரு நாய் ஒன்று குரைக்கவும், தொடர்ந்து நாய்களின் கோரஸ் ஒலிகள் தூக்கத்தை வரவிடாமல் துரத்தின. கண்களை மூடிக்கொண்டு எத்தனை நேரம் இப்படி படுத்துக் கிடப்பது? படுக்கையில் எழுந்து உட்கார்ந்தார். தூரத்தில் ஏதோ ஓர் உருவம் மெல்ல ஓடுவது அவர் பார்வையில் பட்டது.

'திருடனாக இருக்குமோ!' திடீரென்று தன்னை உஷார் படுத்திக் கொண்டு அந்த உருவத்தைத் துரத்திக் கொண்டு ஓடினார்.

பின்னால் தன்னை அவர் துரத்திக்கொண்டு வருவதை உணராத அந்த உருவம் சடாரென்று தண்ணீருக்குள் குதிக்கிற ஓசை கேட்டது. இதுவரை திருடன் என்று எண்ணியவர், ஆற்றங் கரை மேட்டில் பிள்ளையாருக்கு எதிரில் உள்ள தெரு விளக்கு வெளிச்சத்தில் பெண்ணின் புடவைத் தலைப்பை இனம் கண்டு கொண்டுவிட்டார்.

தாமதிக்காமல் தாமும் உடனே குதித்து அவளைக் கரையேற்றுகையில் அரை மயக்க நிலையில் இருந்தாள் அவள். வயிற்றுக்குள் புகுந்த தண்ணீரை வெளியேற்றி, அவளுக்கு நினைவு வரவழைக்கப் படாத பாடு பட்ட பிறகு மெதுவாகக் கண்களைத் திறந்து பார்த்தாள் அவள். தான் சாகவில்லை, காப்பாற்றப்பட்டோம் என்பது தெரிந்ததும் அவள் துக்கம் எல்லை மீறியது. மிகுந்த சிரமத்தின் பேரில் எழுந்திருக்க முயன்றாள் அவள்.

''நீ யார் வீட்டுப் பொண்ணம்மா?... அநியாயமாய் ஒரு நொடியிலே உயிரைப் போக்க இருந்தியே!''


அவள் அவரை உற்றுப் பார்த்தாள்.

''நீங்க இப்போ என்னை எதற்காகக் காப்பாற்றினீங்க?... வாழத்தான் விட மாட்டேங்கறாங்க... சாகவும் விட மாட்டீங்களா....?'' அவள் குலுங்கிக் குலுங்கி அழத் தொடங்கி விட்டாள்.

''நீ தற்கொலை செஞ்சுக்க முனைஞ்சேன்னு சொல்லி உன் மேலே கேஸ் போடலாம். தெரியுமா?...'' அவள் அழுகையினூடே அவரை நிமிர்ந்து பார்த்தாள்.

நியெத்தில் ஒவ்வொருவருக்கும் பல பெயர்கள் இருக்கும். காரணம்? வியாதி வந்தால் தங்கள் பெயரை மாற்றிக் கொள்வார்கள்! - 'அதிசய உலகம்' நூலிலிருந்து

வ. தேனப்பன்



''என்னைப் பிழைக்க வச்சதுக்கு அது வேற தண்டனையா!''

''நீ ரொம்ப மனசு உடைஞ்சிருக்கே! என்ன நடந்தது? ஏன் இந்த முடிவுக்கு வந்தேன்னு சொல்லு... உனக்கு வேண்டிய உதவியைச் செய்யிறேன். என்னை நம்பு!''

''நீங்க கணக்கய்யர் வீட்டு முதலாளின்னு எனக்குத் தெரியும்.... ஒரு பொண்ணு எதை இழக்கக் கூடாதோ அதை இழந்துட்டேன். ஒரு பாவி என்னை அநியாயமா வஞ்சிச் சுட்டான்!''

''அவனைத் தேடிக் கண்டு பிடிச்சு என் செலவிலேயே அவனுக்குக் கட்டி வைக்கிறேன்!''

''அது முடியாத காரியம்... என்னை ஏமாத்திட்டு துபாய்க்குப் போய்விட்டான். அவனை அவ்வளவு எளிதா உங்களாலே கண்டு பிடிக்க எனக்கு வழி தேடித் தர முடியாது!''

''வேற நல்ல மாப்பிள்ளையைப் பார்த்து உனக்கு நானே ஏற்பாடு பண்ணறேன்... உயிரை மாத்திரம் போக்கிக்காதேம்மா!''

அவள் இப்போது பலமாக வாய் விட்டுச் சிரித்துவிட்டாள்.

''என் உண்மை நிலையை மறைச்சு நான் யாரையும் கட்டிக்க மாட்டேன்! நான் உண்மையைச் சொன்னா எவன் வந்து என்னைக் கட்டிப்பான் இந்த நாட்டிலே....?''

அவர் யோசனையுடன் மௌனமானார்.

''ஏன் மௌனமாயிட்டீங்க... நீங்களே மனசொப்பி எனக்கு வாழ்வு கொடுப்பீங்களா.... கொஞ்சம் யோசிச்சுப் பாருங்க... உங்க வயது எனக்குப் பெரிசில்லை....!''

''அப்படின்னா....!''

''நீங்களே தயங்கினா... மத்தவங்க எப்படி என்னை ஏத்துக்குவாங்களாம்? அநியாயமாக என்னைக் காப்பாத்தி இப்போ என்னையே எனக்குப் பிரச்னையாக்கிட்டீங்களே!''

சற்று நேரம் யோசித்தார். அவள் மௌனமாக முட்டைக் கட்டி உட்கார்ந்திருந்தாள். திடீரென ஒரு முடிவுக்கு வந்தவராக அவள் தலையைத் தொட்டு நிமிர்த்தினார் அவர்.

''எனக்கு இரண்டு பிள்ளைகள்.... மருமகள் மருமகன் எல்லோரும் இருக்காங்க... பரவாயில்லை. நீ உன் உயிரைப் போக்கிக்க வேண்டாம். நாளைக்கே நான் முறைப்படி உங்க வீட்டிலே பெண் கேக்க வரேன். நாளன்னிக்கே கோயில்லே நம்ம கல்யாணம். உனக்கு ஒண்ணும் ஆட்சேபனை இல்லையே?''

''நல்லா யோசிச்சுத்தான் பேசறீங்களா?''

''ஆமாம். இது என் முடிவான எண்ணம் தான்.''

அவள் விம்மிக்கொண்டே அவர் பாதங்களில் விழுந்தவள் அவர் பாதங்களைக் கெட்டியாகப் பற்றிக் கொண்டாள்.

முதலில் தயங்கினாலும் ஊராரின் அரசல் புரசல் பேச்சுக்களிலிருந்து தப்பிக்கத் தன் பெண்ணுக்கு இந்த மட்டும் ஒரு கல்யாணம் நடந்தால் சரி என்று அவள் அப்பனுக்கும் அம்மாவுக்குமே ஏதோ ஒரு திருப்தி.

எந்த நிர்ப்பந்தத்தில் அவளை மணப்பது என்ற முடிவுக்கு வந்தார் என்பதை அவரால் பிள்ளைகளிடம் விட்டுச் சொல்ல முடியுமா?



பட்டு மலர் மேனிக்கு
பாவையர் நித்தம் விரும்பும்
விநிபா
சந்தன முக பவுடர்



சருமத்திற்கு மென்மையும், பொலிவும் அளிக்கவல்ல மைசூர் சந்தனம், இந்திய அபூர்வ மூலிகைகள், மேனாட்டு வாசனை திரவியங்கள், உயர்ந்த அத்தர் வகைகள், தூய புனுகு, ஜவ்வாது, அரகஜா இவற்றை ஒருங்கே கலந்து விஞ்ஞான ரீதியில் நவீன மைக்ரோஃபைன் முறையில் தயாரிக்கப்படுகின்றன.

விநிபா ப்ராடக்ட்ஸ்

'கோகுல் கார்டன்ஸ்' கும்பகோணம்.

Criterion VP 3510 TM

வாழி எனைத்தூக்கி வைத்த கரதலங்கள்
வாழி எலாம்வல்ல மணிமன்றம்—வாழிநடம்
வாழி அருட்சோதி வாழிநட ராயன்
வாழி சிவஞான வழி!

— திருஅருட்பா

மகளிருக்கு ஒரு மங்கை

(தமிழில் வெளிவரும் பிரபல பெண்கள் பத்திரிகையான 'மங்கை' மாத இதழின் ஆசிரியர் திரு சாரதியை வாசகிகள் திருமதி இந்துமதி லக்ஷ்மணனும் திருமதி சாருமதி ஜெயராமனும் சந்திக்கிறார்கள்.)

சாருமதி: பெண்களுக்கென்று பிரத்தியேகமாக ஒரு பத்திரிகை ஆரம்பிக்க வேண்டும் என்ற எண்ணம் ஏன் ஏற்பட்டது?

சாரதி: குழந்தைகளுக்கென்று அம்புலிமாமா வருகிறது. சினிமா ரசிகர்களுக்கென்று 'பொம்மை' வருகிறது. குழந்தைகளையும் சினிமா விரும்பும் இளைஞர்களையும் தவிர குடும்பத்திலிருக்கும் பெண்களுக்கு ஏற்ற வகையில் ஒரு பத்திரிகை எங்கள் காம்பவுண்டிலிருந்து போனால் நன்றாக இருக்குமே என்று நாங்கள் எண்ணினோம். அதன் விளைவுதான் 'மங்கை'.

இந்துமதி: மங்கையில் நீங்கள் ஆண்களை எழுத அனுமதிப்பதில்லை. ஆண்களின் கேள்விகளுக்குப் பதில் சொல்வதுமில்லை. குடும்பம் என்றால் வெறும் பெண்கள், குழந்தைகள் மட்டும்தான் என்று ஏன் கருதுகிறீர்கள்?

சாருமதி: இதில் இன்னொரு விஷயம். பெண்கள் சம்பந்தப்பட்ட மனப் போராட்டங்களையோ, அவர்களின் உணர்ச்சிகளையோ ஆண் எழுத்தாளர்கள் கூட ரொம்ப அருமையாகச் சித்திரிக்கிறார்கள். 'மங்கை' பெண்களால் பெண்களுக்கான இதழ் என்றால், நிறைய ஆண்கள் பெண் பெயரில் எழுதுகிறார்களே, உங்கள் விளக்கம் என்ன?

சாரதி: பெண் எழுத்தாளர்களை ஊக்குவித்து அவர்களை முன்னுக்குக் கொண்டு வரவேண்டும் என்பதுதான் மங்கையின் முக்கிய நோக்கமே தவிர ஆண் எழுத்தாளர்களை ஒதுக்கி வைப்பது அல்ல. ஆண்களின் கேள்விகளுக்கும் மங்கையில் 'கற்பகம்' பதில் சொல்லிக் கொண்டுதான் இருக்கிறார். எதிர்காலத்தில் பிரபல ஆண் எழுத்தாளர்கள் மங்கையில் எழுதும் வாய்ப்பு உருவாகலாம். பெண்களால் பெண்களுக்கான இதழ் மங்கை என்று சாருமதி சொன்னதும் தவறு. 'மங்கை'யைத் தோற்றுவித்ததே ஆண்கள் பலர் ஒன்று சேர்ந்து செய்த முடிவுதான்.


இந்துமதி: உங்கள் பத்திரிகையில் அரசியல் கருத்துக்களோ கட்டுரைகளோ வருவதில்லை. பெண்களுக்கு அரசியல் வேண்டாம் என்பது உங்கள் கொள்கையா?

சாரதி: அப்படி இல்லை. எல்லோருக்கும் தேவைப்படும் எல்லோரும் தெரிந்து கொள்ள விருப்பப்படும் விஷயங்களைத் தருவது இன்னும் சிறப்பு என்கிற காரணம் தான் அரசியலுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படாமல் இருப்பது.

சாருமதி: ஆன்மிக விஷயங்கள் கூட அவ்வளவாகக் காணோமே?

சாரதி: என்னால் இதை முழுவதுமாக ஏற்றுக்கொள்ள முடியாது. 'பரசுராம க்ஷேத்திரம்' என்றொரு கட்டுரைத் தொடரில் கேரள கோயில் வழிபாடு முறைகளை விவரித்திருந்தோம். ஜகத்குரு என்று பாராட்டப்படும் காஞ்சி [illegible] பெண்களுக்கென பல அரிய கருத்துக்களை

இடமிருந்து வலம்: திருமதி சாருமதி ஜெயராமன், திருமதி இந்துமதி லக்ஷ்மண், திரு சாரதி



மங்கையில் தொடர்ந்து எழுதி வந்திருக்கிறார். இப்போது சிருங்கேரி ஸ்வாமிகள் அருள்வாக்கு எழுதுகிறார்.

இந்துமதி: பொதுவாக மங்கையில் வரும் கதைகள் ஸ்டீரியோ டைப்பாகவே அமைகின்றன. ஆண் இட்டப் பெண் அடங்கி சப்மிஸிவ்வா போகணும் அப்படீன்னு தான் எல்லாக் கதைகளுமே அமைகின்றன. Can't you change the pattern?

சாரதி: நமது இந்தியப் பெண்களுக்கென்று ஒரு வரையறை, லிமிடேஷன் இருக்கிறது. அதை மறுக்க முடியாது. ஆனால் ஊறிப் போன சில சமூகக் கொடுமைகளை மாற்றும் விதத்தில் புரட்சிகரமான கதைகளை மங்கை பெருமையுடன் வெளியிட்டிருக்கிறது. இப்போது உங்களுக்கு ஞாபகம் வரவில்லை என்று கருதுகிறேன். பழைய இதழ்களைப் படித்துப் பார்த்தால் நான் சொல்வதை உங்களால் உணர முடியும்.



"நான் ஒருத்தி இங்கே இல்லேன்னு கட்டடமே வெறிச்சுனு இருக்காம்! பக்கத்துப் போர்ஷன் காரி சொல்றாள்!"

"அதே மாதிரிதான் நான் ஒருத்தன் இல்லேன்னு ஆபீஸே வெறிச்சுனு இருக்காம்! ஆபீஸ் நண்பர்கள் சொல்றாங்கள்!"

வரப்போகும் மங்கை இதழ்களும் சில ஆஸ்ப்-பீட் கதைகளைத் தாங்கி வர இருக்கின்றன.

சாருமதி: ஸார், இந்த ஜோஸ்யப் பகுதி சும்மா போட்டதையே திருப்பித் திருப்பிப் போட்டுக் கொண்டு கும்பம், மேஷம், கன்னி — கொடுக்கல், வாங்கல், உப காரியம் என்று படித்துப் படித்து எங்களுக்கு மனப் பாடமே ஆகிவிட்டது. அலுத்துப் போச்சு. அந்தப் பக்கத்தில் ஏதேனும் உபயோகமாகப் போடக் கூடாதா?

சாரதி: உங்கள் கருத்துக்கு நான் மாறுபடுகிறேன். இரண்டு மூன்று மங்கை இதழ்களை ஜோஸ்யப் பகுதி இல்லாமல் நாங்கள் கொண்டு வந்து பல்லாயிரக் கணக்கான வாசக சகோதரிகளிடமிருந்து நன்றாக வாங்கிக் கட்டிக் கொண்டோம். உங்களைப் பொறுத்தவரை அது வறட்டு விஷயமாய் இருக்கலாம். ஆனால் அதற்கிருக்கும் வரவேற்பைப் புரிந்து கொண்டுதான் அப் பகுதியை நாங்கள் தொடர்ந்து பிரசுரிக்கிறோம்.

இந்துமதி: இந்தியாவில் பாடப் புத்தகங்கள் கூட ஆணுக்கே முக்கியத்துவம் தந்து அமைவதாக, ஆண் வர்க்கத்தை உயர்த்திக் காட்டுவதாக நான் சமீபத்தில் ஒரு கட்டுரையில் படித்தேன். உங்கள் கருத்தென்ன?

சாரதி: நான் அந்தக் கட்டுரையைப் படிக்கவில்லை. இருந்தாலும் என்னைப் பொறுத்தவரை நமது பாடப் புத்தகங்களில் கஸ்தூரிபாய், ஜான்ஸி ராணி போன்றவர்களைப் பற்றியும் நிறைய சொல்லப்பட்டிருப்பதாகவே நான் கருதுகிறேன்.

இந்துமதி: உங்கள் சமையல் குறிப்புக்கள், புதிய உணவு பதார்த்தங்கள் தயாரிக்கும் யோசனைகள் ரொம்பவும் 'பாஷ்' ஆக இருக்கின்றன. பொருளாதாரத்தில் உயர் மட்ட வாசிகள் மட்டுமே அவற்றைச் செய்து பார்க்க முடியும்.

சாரதி: செலவு குறைந்த, சாதாரண மக்களும் செய்து பார்க்கக் கூடிய உணவு வகைகளையும் எங்கள் 'ரெஸிபே' பகுதியில் போட்டு வருகிறோம்.

சாருமதி: 'சினிமா' பகுதி இல்லாத பத்திரிகை மங்கை ஒன்றுதான். அது அப்படியே இருக்கட்டும். எதிர் காலத்திலும் இப்படியே தொடரட்டும்.

இந்துமதி: ஐ டோண்ட் அக்ரி. மங்கையிலேயே ஒரு பக்கம் சினிமா செய்தி போடுவதால் ஒன்றும் குறைந்து விடாது. இல்லாவிட்டால் இதற்காகத் தனியே பணம் செலவு பண்ணி ஒரு சினிமாப் பத்திரிகை வாங்க வேண்டியிருக்கும். வீட்டிலே பேசற பல விஷயங்களிலே சினிமாவும் ஒண்ணுதானே. அட்லீஸ்ட் விமர்சனமாவது போடலாமே!

சாரதி: நீங்க ரெண்டு பேருமே கருத்தில் மாறுபடுகிறீர்கள். நாங்கள் சிவசங்கரியை விட்டு விமர்சனம் எழுதச் சொல்லி மங்கையில் பிரசுரித்தோம். வரவேற்பு இல்லையம்மா. மங்கை, சினிமா பகுதி இல்லாமல் வருவதைத்தான் தற்போது வாசக சகோதரிகள் விரும்புகிறார்கள். பின்னால் எப்படியோ?

சாருமதி: மங்கையின் பிரிண்டிங், கலர் டிரான்ஸ்பரன்ஸிஸ் அபாரம். அதை நான் பாராட்டியே ஆக வேண்டும்.

இந்துமதி: உங்கள் லே அவுட்டும், கதைகளுக்கான படங்களும் அபாரமாக அமைகின்றன. கங்கிராட்ஸ்.

சாரதி: ரொம்ப தாங்க்ஸ்.

கட்டுரை ஏற்பாடு: விஜய் நிர்மல்
புகைப்படங்கள்: எஸ்.எஸ். மணியன்

நினைவு அஞ்சலி



திருமங்கலம் (லால்குடி)

T. S. RAJU IYER

தோற்றம்	மறைவு
6-12-1890	25-12-1978

By
R. Srinivasan — New Delhi
R. Chandrasekaran — Neyveli



"அவாத்துப் பொண்.. ஆபீஸுக்குப் போறா!"

ஆர். வஸந்தா

"அம்மா, நான் கிளம்பறேன்." — ரேழியிலிருந்து கத்தினேன். சமையல் உள்ளே இருந்து அம்மா வந்து என் முகத்தைப் பார்த்தால்தான் கிளம்புவேன். அது என் பழக்கம்.

"என்ன இன்னிக்கு இந்தப் புடவையா? அப்பா கடையிலேருந்து ரோஜாப்பூ வாங்கிண்டு வந்திருக்கா பாரு. சாமி மேலே வச்சிருக்கேன். எடுத்து வச்சிண்டு போ."

"அட, அப்பா ரோஜாப்பூ வாங்கிண்டு வந்திருக்காளா? எனக்குத் தெரியாதே! சாமி அலமாரியிலிருந்து பெரிய பூவா ஒன்றை எடுத்து இடது காதுக்குப் பக்கத்தில் வைத்துக் கொண்டேன். தாழ்வாரத்தில் நின்றபடி மேலே மாட்டியுள்ள கண்ணாடியில் பார்த்துக் கொண்டேன். பிங்க் ஸாரி ப்ளவுஸ், மணி வளையல், பூ. அலங்காரம் 'பர்ஃபெக்ட்' ஆக இருந்தது. மனத்துக்கு ரொம்ப சந்தோஷமாக இருந்தது. நாற்காலியில் உட்கார்ந்து பேப்பர் படித்துக் கொண்டிருந்த அப்பா, "கிளம்பும்மா, மணி ஒன்பதாகப் போகிறது. அப்புறம் பஸ் போயிடும்" என்றார்.

அப்பாவுக்கும் அம்மாவுக்கும் செல்லப் பெண் நான். அப்படியும் சொல்வதற்கில்லை. அவர்களுக்கு எல்லோருமே செல்லம் தான். நான் கடைக்குட்டி என்பதால் கொஞ்சம் அதிக செல்லம். அவ்வளவுதான். அத்துடன் அவர்களுக்கு நான் நன்றாகப் படிப்பதில், நிறைய மார்க்குகள் வாங்குவதில், டைப்ரைட்டிங், ஷார்ட் ஹாண்ட், ஹிந்தி, பாட்டு, தையல் என்று ஒவ்வொன்றாகக் கற்றுக்கொண்டு மடமடவென்று பாஸ் செய்வதில் எல்லாவற்றிலும் ரொம்பப் பெருமை; அத்துடன் நான் படித்து முடித்ததும், 'டக்' கென்று இந்த வேலையும் கிடைத்தது.

திரும்பவும் அம்மாவிடம் சொல்லிக் கொண்டு வாசலில் இறங்கினேன்.

"உம், ஒன்பது மணியாச்சோன்னோ, ட்ரஸ் பண்ணிண்டு கிளம்பியாச்சு. வயசுப் பொண்ணுக்குத் தாசி மாதிரி என்ன அலங்காரம் வேண்டியிருக்கு! எம்பொண் இந்த மாதிரி ட்ரஸ் பண்ணிண்டு வெளிலே போனா காலை ஒடிச்சு அடுப்பிலே வைப்பேன்!"

வேறு யார்? பக்கத்தாத்து மாமிதான். வயிற்றெரிச்சல் திலகம்! யாரில் ஒருவர் ஒரு நல்ல புடவை கட்டிண்டால் ஆகாது. அவாத்து மாமா பக்கத்துத் தெருவில் உள்ள ஸ்கூலில் வாத்தியார். பாவம், சாது! அவருக்கும் சேர்த்து மாமி கெட்டிக்காரி. அவர்களுக்கு ஐந்து பெண்கள். முதல் இரண்டு பெண்களையும் மாமியே கல்யாணம் பண்ணிக் கொடுத்து விட்டாள். மூன்றாவது பெண் யாரையோ "லவ்" பண்ண ஆரம்பிக்கவே எப்படியோ கஷ்டப்பட்டு அந்தப் பையனுக்கே அந்தப் பெண்ணைக் கல்யாணம் பண்ணிக் கொடுத்திட்டா. நாலாவது பெண் ஸ்கூலில் படிக்கும்போதே கொஞ்சம் 'ஏடாகூடமாக' நடந்து கொண்டாள் என்பதால் அவளை ஸ்கூலை விட்டே நிறுத்தி விட்டார்கள். அவளும் அவள் தங்கையும் வீட்டோடு தான் இருக்கிறார்கள், கல்யாணத்துக்குக் காத்துக் கொண்டு. அதில்தான் அந்த மாமிக்கு இத்தனை வாய்!

கிளம்பியபோது சந்தோஷத்தால் பொங்கிய மனம் பக்கென்று தணிந்தது. மடமடவென்று பஸ் ஸ்டாண்டை நோக்கி நடந்தேன். சாதாரணமாக நான் போய் இரண்டு நிமிடத்துக்கெல்லாம் பஸ் வந்து

விடும். இன்று ஏன் இன்னும் பஸ்ஸைக் காணோம்?


சர்ரென்று பக்கத்தில் ஒரு சைக்கிள் வந்து நின்றது. ''செந்தில்.''

அடப்பாவி! இவன் ஏன் இங்கு வந்தான்? நான் இந்த ஊரிலிருந்து பக்கத்திலிருக்கும் கொஞ்சம் பெரிய ஊருக்கு மாற்றல் வாங்கிக் கொள்வதற்கு இவனும் ஒரு காரணம்.

எனக்கு முதலில் இந்த ஊரில்தான் ''அப்பாயிண்ட்மெண்ட்'' ஆயிற்று. குக்கிராமமுமில்லாத, நகரமுமில்லாத ஒரு பெரிய கிராமத்தில். போஸ்ட் ஆபீஸில் வேலை பார்ப்பது எத்தனை கஷ்டம் என்று அனுபவித்தால்தான் புரியும்.

இந்த ஊர், பெண்கள் அதிகம் வேலைக்குப் போய் அறியாத ஊர். நான் ஸ்கூலில் படிக்கும்போது இரண்டு கிறிஸ்துவப் பெண்மணிகள் டீச்சராக இருந்தார்கள். பிறகு முப்பத்தைந்து வயதைத் தாண்டிய ஒரு பெண்மணி தாலுக்கா அலுவலகத்தில் டைப்பிஸ்ட்டாக இருந்தார். பிறகு நான். போஸ்ட் ஆபீஸில்.

அந்த ஆபீஸில் ஆறு மாதம் வேலை செய்வதற்குள் போதும் போதுமென்று ஆகி விட்டது. கவுண்டரில் யாரிடமாவது, ''சில்லறை இல்லை, மாற்றிக் கொண்டு வாருங்கள்'' என்றால், ''ஒரு பெண்பிள்ளை நம்மைத் திருப்பி அனுப்புவதாவது'' என்பார்கள். ''மணி ஆர்டர் பக் பண்ண



டைம் ஆகிவிட்டது. நானே வாருங்கள்" என்றால், "அதெல்லாம் எனக்குத் தெரியும், நீ என்ன பெண் பின்னே சொல்வது!" என்பார்கள். வேறு சிலரோ, "நீ சிறு பெண் தானே? நான் அப்பா கிட்டே சொல்லிக்கிறேன். எனக்கு நீ நாலு கார்டு கொடு" என்பார்கள்.

சில இளைஞர்கள், நான் கவுண்டரில் சாதாரணமாக ஏதாவது பேசியதைக் கூட, நான் அவர்களைத் தனியாகக் கவனிப்பதாக நினைத்துக் கொண்டு, என்னைக் காதலிக்க ஆரம்பித்து விட்டார்கள். அதில் இந்தச் செந்திலும் ஒருவன்.

முதலில் தினம் ஆபீசுக்கு வந்துகொண்டிருந்தவன், பிறகு, உணவு இடைவேளையின் போது, ஆபீஸில் ஒருவரும் இல்லாத நேரங்களில் வந்து அறுக்க ஆரம்பித்தான். பிறகு ஒரு நாள் ஒரு பெரிய கவரைக் கொண்டு வந்து, "வெயிட் போடணும்!" என்றான். கவரின் மேலே பார்த்தால் என் பெயர். நான் அதைப் பார்ப்பது தெரிந்தவுடன், "அது உங்களுக்குத்தான். நாளைக்குப் பதில் கொடுங்கள்" என்று ரொம்ப நம்பிக்கையுடன் சொல்லிவிட்டுப் போய் விட்டான். பதினைந்து பக்கத்துக்கு ஒரு காதல் காவியம்! அதைக் கிழித்துப் போட்டுவிட்டு, பக்கத்து ஊருக்கு உடனே டிரான்ஸ்பருக்கு விண்ணப்பம் செய்தேன்!

அந்தச் செந்தில்தான் இவன்! ஏன் இங்கு வந்தான்? மனத்தில் கொஞ்ச நஞ்சம் பாக்கியிருந்த சந்தோஷமும் அவனைப் பார்த்ததும் மறைந்து போயிற்று.

"ஏன் உங்களை மாற்றி விட்டார்கள்? எங்கே.... அந்த ஊருக்கா? எனக்கு ஓர் உதவி பண்ண முடியுமா? இந்த ஆபீஸில் "ஸர்டிபிகேட் ஆப் போஸ்டிங்" பாரமே கிடைக்கவில்லை. எனக்கு அங்கேயிருந்து இரண்டு புத்தகங்கள் வாங்கிண்டு வரேளா?" என்று கேட்கிறான்.

"அய்யய்யோ! அதோ, சோமு மாமா வராரே. இவன் என்னோட பேசிண்டிருப்பதைப் பார்த்தால் நான் இவனோட 'ஓடிப் போகப்' போறதா ஊர் முழுக்கப் புரளி பண்ணி விடுவாரே! பகவானே, அந்த மாமா கிட்டே வரதுக்குள்ளே இவன் போய்த் தொலைய வேண்டுமே!

நல்ல வேளை! சோமு மாமா கிட்டே வரதுக்குள் பஸ் வந்து விட்டது. இவனிடமிருந்து விடுபட்டு பஸ்ஸில் ஏறி ஓரத்துச் சீட்டில் போய் உட்கார்ந்து கொண்டு விட்டேன்!

"பிங்க் அண்ட் புளு, ஐ லவ் யூ டூ" பின்னுமிருந்து கோரஸ். நான் இங்கிருந்து தினம் ஆபீஸ் போய் வருவது போல், காலேஜுக்குப் போய் வரும் மாணவர்கள் அவர்கள். தினம் இந்த பஸ்ஸிலேயேதான் வருவார்கள். அந்த கோரஸுக்கு உரியவர்கள் அவர்கள்தான்.

நான் ஆடாமல் அசையாமல் பஸ்ஸுக்கு வெளியே தெரியும் மரங்களையும், வயல்களையும், அல்லிக் குளங்களையும் எண்ணிக் கொண்டிருந்தேன். தினம் இப்படித்தான் பஸ்ஸின் உள்ளே ஒருவரையும் பார்க்காமல் வெளியிலேயே பார்த்துக் கொண்டு இருப்பதில் சில சமயம் தலையை இந்தப் பக்கம் திருப்பவே முடியாமல் போய்விடுமோ என்ற சந்தேகமாகிவிடும்.

பஸ் ஆபீஸ் வாசலில் நின்றது. மெதுவாக ஒருவர் மேலும் இடிக்காமல் இறங்கினேன். "வீ வில் மீட் இன் தி ஈவினிங்" மறுபடியும் கோரஸ்.

மணி 9.50 ஆகிவிட்டது. வேகமாக ஆபீசுக்குள் நுழைந்தேன். பத்து மணிக்குக் கவுண்டரில் தயாராக இருக்க வேண்டும். இன்றைக்கு 'இன்ஸ்பெக்ஷன்' வேறு இருக்கிறது. எல்லாம் கரெக்டாகச் செய்ய வேண்டும்.

'டொக்-டொக்'—இந்த மாதிரி கவுண்டரில் தட்டிக் கொண்டு இருப்பவன் வழக்கமாக வருபவன்தான். கையில் ஒரு 'பாக்கெட்'டை வைத்துக் கொண்டு 'வெயிட் போடணும்' என்றான். அதைக் கவுண்டரில் வைக்க வேண்டியதுதானே! என்று நினைத்துக்கொண்டு (சொல்லவில்லை, சொன்னால் திரும்ப கம்ப்ளெயிண்ட், இன்ஸ்பெக்டர், விஜயம் இத்யாதி.) கையில் வாங்கப் போனேன். 'டபா'ரென்று பாக்கெட்டைப் பின்னுக்கு இழுத்துக் கொண்டு சிரித்தான். மனத்துக்குள் ஆத்திரம் பற்றிக் கொண்டு வந்தது. என்ன விளையாட்டு, ஆபீஸில் வந்து! இவர்களுக்கெல்லாம் ஆபீஸ் போகும் பெண் என்றால் அவ்வளவு இளப்பம். என்னமோ இவர்களுடன் விளையாடத்தான் நாங்கள் ஆபீஸ் வருவதாக அவர்களுக்கு எண்ணம். முகத்தை 'பிளாங்காக' வைத்துக்கொண்டு நிமிர்ந்தேன்.


நான் வேலைக்குச் சேர்ந்த புதிதில் எல்லாம் கோபமோ, வருத்தமோ, மகிழ்ச்சியோ எதுவாக இருந்தாலும் முகத்தில் காண்பித்து விடுவேன். ஆனால் இந்த ஒரு வருட சர்வீஸில் என்ன நடந்தாலும், முகத்தைக் கல்லாக வைத்துக் கொள்ளப் பழகிக்கொண்டு

அவன்: உன் திருமணத்துக்கு சர்வகட்சியினரும் வந்திருந்தாங்களாமே...?"

இவன்: "ஆமாம்! நம்ம கட்சியில் கொஞ்ச நாள் இருந்தவராச்சேன்னு எங்கப்பா மீது இருந்த பாசத்தால் வந்திருந்தாங்க!"

— உ. ராஜாஜி





It's a widening scene at Shriram Fibres

One good thing leads to another for Shriram Fibres, leading manufacturers of Industrial Nylons.


The first product was nylon tyre cord for automotive tyres.


Then came nylon fishnet twine—proven 20% stronger than any other comparable brand.

And now, a breakthrough - Nylon Chips.
Shriram Fibres are the first to make Nylon Chips Moulding Powder in India—with quality that matches the world's best.

Shriram Fibres always look ahead...keep ahead.







Shriram Fibres Ltd.

Thiru Building,
160, Greames Road, Madras-600 006

OBM 3768 R

மகாமகத்தில் மக்கள் வெள்ளம்

கைத்தறி ஆடையில் உங்கள் உள்ளம்

மகத்தான மகாமகம் திருவிழாவை முன்னிட்டு,
கும்பகோணம், நகர உயர்நிலைப் பள்ளித் திடலில்,
23-2-1980 அன்று துவங்கப்பெற்ற

தேசிய கைத்தறிப் பொருட்காட்சி'80

16-3-1980 வரையில் நடைபெறும்.

பல்வேறு மாநிலங்களின் கைத்தறி அரங்குகள் பங்கு பெற்றுள்ளன. கவர்ச்சியும் தரமும் உள்ள துணி வகைகள் அனைத்தையும் ஒரே இடத்தில் காணவும் தேவையான வற்றை வாங்கவும் வருகை தாரீர்! 20% சிறப்புத் தள்ளுபடி உண்டு.



கோ-ஆப்டெக்ஸ்
கைத்தறி

காட்சி
அரங்கினைக்
காண வாரீர்!
20%
சிறப்புத்
தள்ளுபடி
பயனைப
பெறுவீர்!

ELEGANT

விட்டேன்! கொஞ்ச நாளில் சிரிக்கவே மறந்து போயிடுவேனோன்னு பயம்!

நடுவில் இன்ஸ்பெக்ஷன் ஆயிற்று. 'என் சீட்டில் எல்லாம் சரியாக இருக்கிறது.' 'நீட்'டாக இருக்கிறது என்று சொன்னதில் பக்கத்து சீட் நீலாவுக்கு வருத்தம். ''முன்னுலேயே நான் அழகென்று கர்வம். இப்பொழுது சூப்பரிடெண்ட் வேறு பாராட்டி விட்டாரோன்னோ, இனிமேல் தலை கழுத்திலேயே நிற்காது'' என்று பொருமிக்கொண்டிருந்தாள். என்னவோ நான்தான் இவளை நன்றாக வேலை செய்ய விடாதது போல்...

''எனி லெட்டர்ஸ் ஃபார் மீ?'' குரலுக்குரியவர் வாசுதேவன். இவர் மெடிகல் ரெப்ரசென்டேட்டிவ்.

இந்த மாதிரி இந்த ஆபீசுக்கு நான்கைந்து வாடிக்கைக்காரர்கள் உண்டு. மாதா மாதம் இரண்டு மூன்று நாட்கள் தங்குவார்கள் போலிருக்கிறது. அவர்கள் இந்த ஊரில் தங்கும்போது, அவர்கள் பெயருக்கு கேர்-ஆஃப் போஸ்ட் மாஸ்டர் என்று கடிதங்கள், மணி ஆர்டர், மற்றும் ரிஜிஸ்டர் எல்லாம் வரும். எனக்கு அவர்கள் எல்லோரையும் அடையாளம் தெரியும். கரெக்டாக எல்லார் தபால்களையும் எடுத்து வைத்துக் கொடுப்பேன். அதனால் அவர்கள் என்னிடம் தனியாக மரியாதை வைத்திருந்தார்கள். (அதில் கூட பக்கத்து சீட் நீலாவுக்குப் பொறாமை!)

அதில் இந்த வாசுதேவன் இன்னும். கொஞ்சம் நெருங்கிப் பேச ஆரம்பித்தார். முதலில் ''விஷ் யூ எ ஹாப்பி நியூ இயர்'', ''ஹேப்பி பொங்கல்'' இந்த மாதிரி. பிறகு ''திஸ் கலர் ஸ்யூட்ஸ் யூ வெல்'', ''யூ லுக் நைஸ் இன் திஸ் டிரஸ்'' இப்படி. பிறகு ''நீங்கள் எங்கிருந்து வருகிறீர்கள்? ''வாட் ஈஸ் யுவர் ஃபாதர்'' என்று.

ஒரு நாள் சாயங்காலம் நான் ஆபீஸிலிருந்து வரும்போது வழியில் வந்து ''இன்று மட்டும் கொஞ்சம் லேட் ஆகப் போங்களேன், எனக்கு உங்களுடன் கொஞ்சம் பேசவேண்டும்'' என்றார். ''ஐயம் சாரி, நான் லேட்-ஆ போனு எங்க அப்பா அம்மா ரொம்பக் கவலைப்படுவா, உங்களுக்கு ஏதாவது பேசணும்னு, எங்க வீட்டிலே வந்து பேசுங்கோ''ன்னு முகத்தில் அடித்தாற்போல் சொல்லிவிட்டேன். பின் என்ன, இவாளா எதையாவது நெனச்சுண்டா அதுக்கு நானு பொறுப்பு! நான் எங்க அப்பா அம்மாவுக்கு நல்ல பெண்ணு இருக்கத்தான் ஆசைப்படறேன். இந்த மாதிரி ஆபீஸுக்கு வரவாளையெல்லாம் காதலிக்கணும்னு...?

ஐய்யய்யோ, மணி 5.30 ஆயிடுத்தே. இப்போ கிளம்பினுத்தான் 5.40 பஸ்ஸைப் பிடிக்க முடியும். அதைப் பிடித்தால்தான் 6.30க்குள் வீடு திரும்பலாம். நான் இந்த பஸ்ஸை 'மிஸ்' பண்ணிட்டு அடுத்த பஸ்ஸில் போனுல் ரொம்ப இருட்டிவிடும். அப்புறம் தெருவிலே இருக்கிற அத்தனை மாமியும் வந்து நான் ஏன் 'லேட்'டுன்னு குசலம் விசாரிக்க வந்துடுவா!



மேற்கு ஜெர்மனியில் இப்போதெல்லாம் மது தயாரிக்கும் வேலையைக் கூட கம்ப்யூட்டர்கள் செய்கின்றன! பெரிய பெரிய அண்டாக்களில் வரும் திராட்சைகளை எடை போடுவது, தரம் பிரிப்பது, சரியான அளவில் ஒன்றோடொன்று கலந்து பிழிவது போன்ற பல காரியங்களையும் கம்ப்யூட்டர்களே நிர்ணயித்துத் தானியங்கு முறையில் இயந்திரங்களைச் செயல்பட வைக்கின்றன.


ஊர் வந்து சேர்ந்துடுத்து. பஸ்ஸை விட்டு இறங்கி வீட்டை நோக்கி நடக்கிறேன். வீடு திரும்பறோம்னு நினைத்தால் ரொம்ப சந்தோஷமாக இருக்கிறது.

''பாத்தேளோன்னோ! வயசுப் பொண்ணு வெளக்கு வச்சு ஆத்துக்கு வரதே! இதெல்லாம் ஒரு நாளைக்கு யாரையாவது இழுத்துண்டுதான் ஓடப் போறது. எங்காத்துப் பொண்ணு இருந்தா....''

வேறே யார்? பக்கத்தாத்து மாமிதான். நான் வீட்டுக்குள்ளே நுழையறதைப் பார்த்ததும் ஒலிபரப்ப ஆரம்பிச்சுட்டா.

'ஆமாம் மாமி, பேசமாட்டேன் நீங்களாம்! ஒவ்வொரு நாளும் வீட்டை விட்டுக் கிளம்பி, திரும்பி வந்து சேரரதுக்குள்ளே நாங்க, வேலைக்குப் போறவாளெல்லாம் எப்படி, சேணம் கட்டின குதிரை மாதிரி மனசை இழுத்துப் பிடிச்சுண்டு போயிட்டு வரோம்னு உங்ககிட்டே சொல்ல முடியுமா, சொன்னுல்தான் புரியுமா உங்களுக்கு!' என்று மனத்துக்குள் சொல்லிக் கொண்டு வீட்டுக்குள் நுழைந்தேன்!

தகடுகள் டிஸ்க்ராலாக இருந்தால் உங்களால் சேதம் பண்ண முடியாது



பெரும் வாரியான முக்கிய தொழில் சாலைகளுக்கான இரும்பு, நிலக்கரி மற்றும் பிரத்யேக தாதுப் பொருள்களை பெருமளவு கையாளுவதற்கு டிஸ்க்ரால் தகடுகள் மிகவும் உகந்ததாக இருக்கின்றன. டிஸ்க்ரால் தகடுகளின் பயனை எரிக்களவாய்—கூடைகள், தடுப்புத் தகடுகள், மதகுக்கதவுகள், வேகமாக அசைகின்ற தகடுகள், தானிய இயந்திரங்களில் உபயோகிக்கும் பிரத்யேக தகடுகள், சுத்தியல் மில்கள் போன்ற இடங்களில் நன்கு காணலாம் .... முரட்டுத்தனமான உபயோகிக்கும் இடங்களிலும், தேய்வின் பயங்கரம் அதிகமாக உள்ள இடங்களிலும் டிஸ்க்ரால் மிகவும் பயன் படுகிறது.

பிரத்யேக தேய்வுத்தடுப்பின் திறத்தினாலும், புத்திசாலித்தனமான உலோகக்கலவையால் செய்யப்பட்டதாலும், டிஸ்க்ரால் தகடுகள், கீறல்களாலும், அரைத்தூள்களாலும், அல்லது வெட்டுதலாலும் ஏற்படுகின்ற சேதத்தைத் தடுக்கின்றன. இதன் பயன், அடிக்கடி இயந்திரங்களின் பாகங்களை மாற்றும் நிலைமையையும், அனாவசியமான நேரச்செலவுகளையும், பணச்செலவுகளையும் தடுக்கிறது. எல்லாவற்றைக் காட்டிலும் டிஸ்க்ரால் கருவிகளை உருவாக்குவதில் எளிமையையும் உறுதியையும் இணைக்கிறது. தகடுகளின் இணைப்பு, இயந்திர வேலைப்பாடு, வெட்டுதல், துளையிடுதல் மற்றும் வளைத்தல், எல்லாம் எளிது-உங்களுக்கு வேண்டுமா?

மேலும் விவரங்களுக்கு கீழ்க்கண்டவர்களுக்கு எழுதவும்:

- டைரக்டர் ஆப் மார்க்கெட்டிங்
  தி டாடா அயர்ன் அண்ட் ஸ்டீல் கம்பெனி லிமிடெட்
  43, சௌரங்கி ரோடு, கல்கத்தா-700 071
- ஜாயின்ட் சீப் ஆப் புரொடக்ஷன் கண்ட்ரோல்
  தி டாடா அயர்ன் அண்ட் ஸ்டீல் கம்பெனி லிமிடெட்
  ஜம்ஷெட்பூர் 831 001
- சீனியர் அப்ளிகேஷன் இன்ஜினியர்
  தி டாடா அயர்ன் அண்ட் ஸ்டீல் கம்பெனி லிமிடெட்
  நியூ இந்தியா அஸ்யூரன்ஸ் பில்டிங்
  87, மஹாத்மா காந்தி ரோடு
  பம்பாய் 400 001
- சீனியர் அப்ளிகேஷன் இன்ஜினியர்
  தி டாடா அயர்ன் அண்ட் ஸ்டீல் கம்பெனி லிமிடெட்
  பேங்க் ஆப் பரோடா பில்டிங்
  16, பார்லிமெண்ட் ஸ்ட்ரீட்
  புது டெல்லி 110 001
- சீனியர் அப்ளிகேஷன் இன்ஜினியர்
  தி டாடா அயர்ன் அண்ட் ஸ்டீல் கம்பெனி லிமிடெட்
  20ஜெ, மஹாத்மா காந்தி ரோடு
  பெங்களூர் 560 001
- சீனியர் அப்ளிகேஷன் இன்ஜினியர்
  தி டாடா அயர்ன் அண்ட் ஸ்டீல் கம்பெனி லிமிடெட்
  பார்க் ஸெண்டர், 24 பார்க் ஸ்ட்ரீட்
  கல்கத்தா 700 016

TATA STEEL

டாடா ஸ்டீல்

TIS 3163R2

ராஜாஜி வாழ்க்கை வரலாறு

ராஜ்மோகன் காந்தி

காந்திக்கு ஸி. ஆர். எழுதினார்:

நாடாளு மன்றத்தின் திட்டத்திலும் கொள்கைகளிலும் ஜவாஹர்லால் எந்த அளவுக்குப் பொருந்துவார் என்பது பற்றி எனக்குச் சந்தேகம் இருந்தது; இன்னமும் இருக்கிறது. இந்த ஆண்டின் காங்கிரஸ் தலைவராக ஜவாஹர்லால் இருக்கலாம் என நான் உடனே ஒப்புக் கொண்டேன். உங்கள் அங்கீகாரம் இதற்கு உண்டு என்பதாகவும் என் உள் மனம் உணர்ந்தது. தனிப்பட்ட முறையிலும் சரி, பொதுப்படையாகவும் சரி, நாம் அவரைவிடச் சிறந்த ஒருவரைத் தேர்ந்தெடுத்துவிட முடியாது என்றே நீங்கள் கருதுவீர்கள். எனவே அக்கிராசனர் பதவி அவருக்கு வழங்கப்பட வேண்டியதுதான்.. ஆனால் அதே நேரத்தில் அவர் நாடாளு மன்றக் கொள்கையைச் சரியான மார்க்கத்தில் அனுசரிச் செயல்படுவாரா என்பது எனக்குச் சந்தேகமாகவே இருந்து வந்தது.

''நாடாளு மன்றக் கொள்கை குறித்து வல்லபாயும் புலாபாயும் எடுத்துள்ள முடிவுகளுக்குக் காரியக் கமிட்டியும் காங்கிரஸ் அக்கிராசனரும் எதிர்ப்புத் தெரிவிக்காமல் ஒத்துழைப்பு நல்குமாறு ஏதேனும் செய்யப்பட வேண்டும். இதை நீங்கள் கவனித்துக் கொள்ள வேண்டும்.''

''காங்கிரஸ் பதவி ஏற்கத் தயாராக வேண்டும்'' என்றும் ஸி. ஆர். சேர்த்துக் கொண்டார். 'அவ்வாறு பதவியை ஒப்புக் கொள்வது காந்தி – இர்வின் திட்டத்துக்கு ஒரு மாற்றாகும்' என்ற தமது முந்தைய கருத்தைத் திரும்பவும் சொன்னார். ''அது கௌரவத்தை அளிக்கும். அத்துடன் தேசியவாதிகள் அல்லாதாரும் பிற்போக்காளரும் மீண்டும் ஆதிக்கத்துக்கு வருவதைத் தடுக்கும்.'' ஸி ஆர் மேலும் தொடர்ந்தார்:

''நீங்களும் இதே கருத்தைத்தான் கொண்டிருக்கிறீர்கள் என்பதாக எண்ணுகிறேன். ஆயினும் எழுதுகிறேன். காங்கிரஸ் காரியக் கமிட்டி இது விஷயத்தில் தவறான மார்க்கத்தில் அழைத்துச் செல்லப்படக் கூடாது. பாமரப் போக்கில் அது சென்றுவிடக் கூடாது. ஸர்தார் சிங், டாக்டர் கான் சாஹேப் ஆகியோரும் வேறு பலரும் நிலைமை இன்னதென்று நான் உணர்வது போல் உணரவில்லை என்று காண்கிறேன்.''

அக்டோபரில் சென்னையில் நடந்த அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்துக்கு ஸி. ஆர். போகவில்லை. ஆனால் அதே மாதத்தில் பின்னால் தீபாவளி தினத்தன்று அவர் விடுத்த அறிக்கை அவர் மீண்டும் அரசியல் அரங்கில் சார்க்கப்படுகிறார் என்பதை உணர்த்தியது.

அந்த அறிக்கை சாதாரணமாகத்தான் இருந்தது. தங்கள் மத்தியில் இப்போது வந்திருக்கிற, மென்மையான, நல்ல, மாபெரும் விருந்தினர், காங்கிரஸ் அக்கிராசனர் பிரசாத்துக்கு மரியாதை காட்டும் முகமாக, தமிழ் மக்கள் கதர் வாங்க வேண்டும் என்று ஸி. ஆர். கேட்டுக் கொண்டிருந்தார். அவ்வளவே. ஆனால் ஸி. ஆர். பத்திரிகைகளுக்கு அறிக்கை அனுப்பிவிட்டார் என்பதே கவனத்துக்குள்ளாயிற்று.

பிரசாத் தம் பங்குக்கு ஸி. ஆருக்கு ஒரு பாராட்டுத் தெரிவித்தார்: ''ஸி. ஆரைக் காட்டிலும் உண்மையான, அன்பான கனவானான ஒரு மனிதரைக் காண்பது அரிது. எந்தப் பிரச்சினையிலும் ஸி. ஆரின் தீர்ப்பு என்றுமே பிசகியதில்லை. அவரது தீரம் அசாதாரணமானது. 1922ல் அவர் சட்டசபைப் பிரவேசத்தைத் தீரத்துடன் எதிர்த்தார். இப்போது அவர் அதே அளவு தைரியத்துடன் பதவிகள் ஏற்பதை ஆமோதித்துப் பேசி வருகிறார்... அவருக்கே நியாயமாக உரிமை உள்ள இடத்தை நான் கைப்பற்றிக் கொண்டிருக்கிறேன்'' என்று முடித்தார் காங்கிரஸ் அக்கிராசனர் பிரசாத்.

டிசம்பர் 27ம் தேதி கிட்டத்தட்ட ஒன்பது மாத இடைவெளிக்குப் பிறகு ஸி. ஆர். சென்னையில் அவையோர் முன் தோன்றினார். அந்தச் சந்தர்ப்பம் பரபரப்பூட்டுவது அல்ல. கௌரவமானது – ஸி. ஆரின் மூத்த தோழர் ஸி. விஜயராகவாச்சாரியார் பொது வாழ்வில் ஈடுபட்டு ஐம்பதாண்டுகள் ஆகியிருந்தன. ஆயினும் சிலர் பரபரப்பு அடைந்திருந்தனர். நீண்ட காலத்துக்குப் பிறகு ஒரு வழியாக மறுபடியும் ஸி. ஆர். பொது மேடையில் காணப்பட்டாரல்லவா!

50. திருச்சி சம்பவம்

ஐந்தாம் ஜார்ஜ் மன்னர் 1936 ஜனவரி 20ம் தேதி காலமானார். அவருக்குப் பிறகு எட்டாவது எட்வர்ட் இந்தியாவின் சக்கரவர்த்தியானார். லக்னோ காங்கிரஸுக்குச் செல்லவிருந்த தமிழகப் பிரதிநிதிகள் அந்த மாதக் கடைசியில் காரைக்குடியில் கூடினார்கள். அதில் கலந்துகொண்ட ஸி. ஆர். சென்னை ராஜதானி தேர்வைக் காங்கிரஸ் அக்கிராசனராகச் சிபாரிசு செய்ய வேண்டும்

※ சத்தியமூர்த்தி



என்று பிரேரேபித்தார். இது ஒப்புக்கொள்ளப்பட்டது. மற்ற ராஜதானிகளும் இதே போல் சிபாரிசு செய்ய, நேரு சம்பிரதாயமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இந்தக் கௌரவத்தையொட்டி ஒரு பலமான அடியும் விழுந்தது. அவர் மனைவி கமலா ஐரோப்பாவில் இறந்து போனார். ஜவாஹர்லாலின் வேறு பல நண்பர்கள் உள்ளத்தில் பதிந்தது போல் வி. ஆர். மனத்திலும் கமலாவின் குண நலன்கள் பதிந்திருந்தன. நேருவுக்கு ஏற்பட்ட நஷ்டத்தைக் கற்பனை செய்து பார்க்க முயன்றபோது வி. ஆர். தமது சொந்த அனுபவத்தையே ஒப்பிட்டு நோக்கினார் என்பது தெளிவு. ''குடும்பத் துயரமானது ஜவாஹர்லாலுக்குப் பொதுத் தொண்டில் உள்ள ஆழ்ந்த பற்றுதலை இருமடங்காக்கும் என்பதில் எனக்குச் சந்தேகமில்லை'' என்று அவர் ஓர் அறிக்கையில் கூறினார்.

அவரும் குடும்பத் துயரத்துக்கு மிக அருகில் இருந்தார். பிப்ரவரி தொடக்கத்தில் பம்பாயில் நிமோனியாவினால் பீடிக்கப்பட்ட லக்ஷ்மி கிட்டத் தட்ட மரணத்தைச் சந்திக்கும் கட்டத்துக்கு வந்துவிட்டாள். வி. ஆர்., மகள் அருகே இருப்பதற்காக விரைந்தார். நல்ல வேளையாக அவள் ஆபத்தான கட்டத்தைக் கடந்து திரும்பு முனையில் இருப்பதைக் கண்டார்.

மீண்டும் செயலில் இறங்கி விட்டபோதிலும் தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டியின் பொறுப்பை ஏற்க அவர் தயங்கினார். வி.ஆர். ஓய்வு பெற்றபோது காலியான மாகாணத் தலைவர் ஸ்தானத்தை இட்டு நிரப்பிய சத்தியமூர்த்தியே மீண்டும் அப்பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்படத் தமது ஆதரவைத் தந்தார். இந்தத் தேர்தல் எதிர்ப்பின்றி இலகுவாக நடந்து முடிந்துவிடவில்லை. சத்தியமூர்த்தியின் தலைமை ஓரளவு அதிருப்தியை உருவாக்கிக் கொண்டிருக்கிறது என்பதாகவும் காங்கிரஸில் பிராமண உறுப்பினர்களுக்கும் பிராமணரல்லாதாருக்கும் இடையே பிளவு ஏற்படுவது சாத்தியமே என்று இப்போது தோன்றுவதாகவும் அரசு சார்பில் கணிக்கப்பட்டது.

சரியான தவறு!

அரசியல்வாதியின் மகன் எழுதினான் இந்தியா ஒரு ஜனநாயக நாடு என்று!
கு. க. அதிகாரியின் மகன் எழுதினான் 'இந்தியா ஒரு ஜனனநாயக நாடு' என்று!

—பூண்டி



லக்னோ காங்கிரஸின்போதும் பிளவு ஏற்படும் என்றே அஞ்சும்படி இருந்தது. ஜவாஹர்லால் சோஷலிஸம் வேண்டும் என்றார். ராஜதானிகளில் பதவி ஒப்புக் கொள்ளும் கருத்தை எதிர்த்தார். பட்டேல், வி. ஆர்., பிரசாத் ஆகியோர் இதற்கு நேர் மாறாக எண்ணினர். இருப்பினும் ஒற்றுமை நிலவ காந்தி அருகில் இருந்தது உதவியது. காங்கிரஸிலிருந்து சம்பிரதாயமான முறையில் வெளியேறிவிட்டார் என்றாலும் மகாத்மா அதற்கு வழிகாட்டத் தயாராகவே இருந்தார்.


பதவி ஏற்பது பற்றிய பிரச்னையில் முடிவு ஒத்திப் போடப்பட்டது. காங்கிரஸ் அக்ராசனர் சோஷலிஸம் பற்றிப் பேசினார்; ஆனால் சோஷலிஸவாதிகள் அல்லாதாரே அதிகமாய் இடம் பெற்றிருந்த ஒரு காரியக் கமிட்டியை அமைத்தார். இவர்கள் காந்தியவாதிகள், கன்ஸர்வேடிவ்கள், வலதுசாரிகள் என்று பலவாறாகவும் அழைக்கப்பட்டனர். எதிர்பார்த்தபடியே இக்கமிட்டியில் பட்டேல், வி. ஆர்., பிரசாத் ஆகியோர் இடம் பெற்றனர்.

''சோஷலிஸம் பற்றிக் காங்கிரஸ்காரர்களுக்குள்ளே சண்டை நடக்கும் என்று பிரிட்டிஷார் ஆசையோடு ஒருவேளை நம்பிக் கொண்டிருக்கலாம். ஆனால் அவர்களுக்கு ஏமாற்றமளிக்க முடியும் என்று நாங்கள் நம்பிக் கொண்டிருக்கிறோம்'' என லக்னோ மகாநாடு முடிந்து இரு மாதங்களுக்குப் பிறகு வி. ஆர். கூறினார். ''முதலில் சுதந்திரம்'' என்பது ஒற்றுமைக்கு வி. ஆர். உருவாக்கிய எளிய சூத்திரம். இதுவே உண்மையில் ஜவாஹர்லாலின் அறைகூவலாகவும் இருந்தது. இந்தக் காலகட்டத்தில் சோஷலிஸம் பற்றிய விவாதத்தில் ஈடுபடுவது தத்துவார்த்த சுவாரஸ்யம் மட்டுமே உடையது என்பது வி. ஆரின் கருத்து. ஆனால் நேரு அவ்விதம் நினைக்கவில்லை. ஆயினும் சமூகத்தைப் புனரமைப்புச் செய்வதற்கு அரசியல் சுதந்திரம் முன்னோடியாக இருக்க வேண்டும் என்ற அளவில் வி.ஆருடன் ஒத்துப் போனார் நேரு.


இருப்பினும் ஒப்புரவு அவ்வளவு எளிதாக உருவாகவில்லை. லக்னோவைத் தொடர்ந்து வந்த மாதங்களில் மகாத்மாவின் தலையீடு பல சந்தர்ப்பங்களில் தேவைப்பட்டது.. ''மகாத்மா புன்னகைத்தபடியே வந்தார்; ஒரு ஜோக் அடித்தார்; முறுக்கேறியிருந்த நரம்புகள் தளர்ந்தன'' என்று காரியக் கமிட்டிக் கூட்டம் ஒன்றை ஹிந்து வர்ணித்தது. காந்தி வராதிருந்திருந்தால் அக்கூட்டம் சண்டையில் முடிந்திருக்கலாம்.

ஜூன் முடிவில் பட்டேல், வி. ஆர்., பிரசாத் ஆகியோர் தலைமையில் ஏழு காரியக் கமிட்டி அங்கத்தினர்கள் அவசரமல்லாத விஷயங்களில் விவாதங்கள் நீடிப்பதால் தங்கள் பொறுமைக்குச் சோதனை ஏற்படுவதாகக் கருதி ராஜிநாமா சமர்ப்பிக்கும் அளவுக்குச் சென்று விட்டனர். மகாத்மாவின் வற்புறுத்தலின் பேரில் ராஜிநாமாக்கள் வாபஸ் பெறப்பட்டன. (தொடரும்)

தமிழாக்கம்: கெ. ராஜேந்திரன்



கடைந் தெடுத்த
கலை நுட்பங்கள்
வடித்தெடுத்த
தந்தச்சிற்பங்கள் !
பூம்புகார்
கைநுட்பக் கலைத்திறன் பொருட்கள் களஞ்சியம்
தமிழ்நாடு கைத்திறன் தொழில்கள்
வளர்ச்சி இணையகம்
(ஒரு தமிழ்நாடு அரசு நிறுவனம்)
THDC 1258



உங்களுக்கு அதிர்ஷ்டத்தை அருவி போல் அள்ளித்தர
இதோ!
தமிழ்நாடு அரசு
பரிசுச்சீட்டு
6 முதல் பரிசுகள்
ரூ. 50,000
ரூ. 50,000
ரூ. 50,000
ரூ. 50,000
ரூ. 50,000
ரூ. 50,000
மற்றும் 9 இரண்டாவது பரிசுகள்
ரூ. 10,000
மேலும் அனேக பரிசுகள். பரிசுச் சீட்டின் விலை ரூ 1
குலுக்கல் நாள்
20-3-80
வெளியீடு
தமிழ்நாடு பரிசுச் சீட்டு இயக்குநர்
அரசினர் தோட்டம், சென்னை 600 002
EP-DIPR

புரொபசர் நாராயண சர்மா, தம் இருக்கையில் வசதியாகச் சாய்ந்தபடி பார்த்தார். 'டேபிள் வெயிட்'டின் அடியில் படபடத்த தாள்களில் அவர் பார்வை ஒருகணம் சென்று நிலைத்தது.

'ஆர் தி இண்டியன் விமன் லிபரேட்டட்?' இன்று பிற்பகல் நடைபெறவிருக்கும் 'இன்டர்நேஷனல் செமி'னாரில்தாம் படிக்க வேண்டிய 'ரிசர்ச் பேப்ப'ரின் தலைப்பைக் கண்ட அவரது இதழ்க் கடையில் ஒரு புன்னகை மின்னி மறைந்தது.

உலகில் உள்ள சர்வ தேசப்புகழ் பெற்ற விரல் விட்டு எண்ணிவிடக் கூடிய அளவு சிறப்புப் பெற்ற 'ஆன்த்ரோபாலஜிஸ்ட்'டுகளில் ஒருவர் நாராயண சர்மா. இந்தியாவில் உள்ள சமூகக் கட்டுப்பாடுகள், மகளிர் முன்னேற்றத்தை எந்த அளவு பாதித்திருக்கின்றன என்பதைப் பற்றிய 'தீஸிஸ்'க்காகப் 'போஸ்ட் டாக்ட்ரல்' பட்டம் பெற்றவர். பி.எச்.டி. பட்டம் பெற அவரது 'கைடன்ஸ்'க்காகக் கியூவில் காத்திருக்கும் ஆராய்ச்சி மாணவர்கள் ஏராளம். அவரே 'கைடா'க அமைய வேண்டும் என்பதற்காக 'மினிஸ்டீரியல் லெவல்' வரை சிபாரிசுக்குப் போனவர்களும் உண்டு.

அன்றைய செமினாரில் வெண்கலக்குரலில் 'பேப்ப'ரை வாசித்து முடித்த சர்மா பார்வையாளர்களின் மீது தமது கம்பீரமான பார்வை யொன்றைப் படர விட்டார். கம்பிக் கூண்டு வண்டியிலிருந்து வெளியேறி 'டிரெயின'ரின் சோதனைகளுக்குத் தயாராக மைதானத்தின் நடுவில் நிற்கும் 'சர்க்கஸ்' சிங்கத்தைப் போல... 'ஆடியன்'ஸின் கேள்விக் கணைகளை எதிர்கொள்ளத் தம்மைத் தயாராக்கிக் கொண்டார். பத்துப் பதினைந்து நிமிடங்கள்.... தொடர்ச்சியாக வினாக்களும், விடைகளும் அந்தக் 'கான்ஃபரன்ஸ்' ஹாலை அதிர வைத்தன.

தம் 'ரிசர்ச்' மாணவர்கள் வீடு வீடாகத்தெருத் தெருவாக... கிராமம் கிராமமாகச் சென்று சேகரித்த புள்ளி விவரங்களுடன், இந்தியாவின் மாநில வாரியாக... இன வாரியாக... சாதி வாரியாக நிலவும் பெண்ணடிமைச் சாபக்கேட்டை... அவர் பிட்டுப்பிட்டு வைத்த பாங்கைக் கண்டுகேள்வி கேட்டவர்களெல்லாம் வியந்துபோனார்கள் இந்த 'செமினா'ரில் கலந்து கொள்ள வென்றே மாஸ்கோவிலிருந்து



தொடு மணற் கேணி


எம்.ஏ.சுசீலா

வந்திருந்த பேராசிரியர் ஒருவர் மேடைக்கு ஓடிச் சென்று சர்மாவைக் கட்டியணைத்து அவரது இரு கன்னங்களிலும் மாறி மாறி முத்தமிட்டார். பல கோணங்களிலிருந்தும் காமிராக்கள் பளிச்சிட்டன.

சர்மா வீட்டு முன் ஹாலில், தரையில் பவ்யமாகக் குனிந்து மண்டியிட்டபடி அவரது 'ஷூ லேஸை' அவிழ்த்துவிட்டுக் கொண்டிருந்தாள் வாழ்க்கைத் துணைவி பார்வதம்.

''எங்கே அந்தக் குட்டியைக் காணோம். படிச்சிண்டிருக்காளா?''

மெல்லிய குரலில் நடுங்கியபடி வந்தது பார்வதத்தின் பதில்: ''இல்லே! இன்னிக்குச் சாயங்காலம் காலேஜுலே என்னவோ



''இங்கிலீஷ் முறைப்படி போட்டா, காப்பியிலே ரெண்டு ஈ இருக்கணும், டீயிலே ஒரு ஈ இருக்கணும்.''
''ஏன் அப்படி?''
''அதனோட ஸ்பெல்லிங் அப்படி!''

— வ. தேனப்பன்

'ஃபங்க்ஷன்' இருக்காம். கொஞ்சம் லேட் ஆகும்போல இருக்குன்னு அந்த மணிக்கு 'ஃபோன்' பண்ணினா! எப்படியும் எழரைக்குள்ளே வந்துடறதா....''

''மணி ஒன்பது அடிக்கப் போறதே! ராத்திரி எட்டு மணிக்கப்புறம் பொம்மனாட்டிகள் வீடடங்கி இருக்காமே சுத்திண்டிருக்கிறது எனக்குப் பிடிக்காதுன்னு உனக்குத் தெரியாது?''

சர்மா கர்ஜித்துக் கொண்டிருக்கும்போதே வதா சிநேகிதியின் காரில் வந்திறங்கி அவளுக்கு 'பை' சொல்லிவிட்டுப் படியேறி வந்தாள்.

பிரட்டக்களையெல்லாம் விட அந்த வீட்டாரை ரொம்பவும் பயமுறுத்தும் சர்மாவின் மௌனம், சாப்பாட்டு மேஜையில் மெள்ளக் கலைந்தது.

''அப்படி என்னம்மா... இத்தனை நாழி வரைக்கும் 'ஃபங்க்ஷன்' உங்க காலேஜிலே! காலேஜ் டே கூட இல்லையே?''

''அது வந்துப்பா... இன்னிக்கு என். எஸ். எஸ். யூனிட் இனாகுரேஷன். அதுக்கு 'சோஷியல் வெல்ஃபேர் மினிஸ்டர் வந்து அட்ரஸ் பண்ணினதாலே 'மீட்டிங்'கை அட்டெண்ட் பண்ணாமப் போக யாருக்கும் 'எக்ஸம்ப்ஷன்' தரமாட்டேன்னுட்டா.''

''அப்படி என்ன ஸ்பெஷலா பேசினார் உங்க மினிஸ்டர்?''

அப்பாவின் 'மூட்' கொஞ்சம் 'லைட்' ஆகி விட்ட தைரியத்தில் உற்சாகமாக உரையாடினாள் வதா.

''எல்லாம் உங்க 'டாப்பிக்'தான்ப்பா.''

''என்னது? என் 'டாப்பிக்கா?''

''ஆமாம். 'விமன் இமான்ஸிபேஷன்' தான் டாப்பிக். பொருளாதார சுதந்திரம் இல்லாம இருப்பது பெண்கள் அடிமையாய் இருக்க ஒரு காரணம்! அதை ஓரளவுக்குக் கிராமத்திலே இருக்கிற பெண்களுக்கும் எடுத்துச் சொல்லி, அவாளையும் 'இண்டிபெண்டண்ட்'டா ஆக்க முயற்சி பண்ணணும்! அதுக்கு என்னென்ன வழியிலே எல்லாம் செயல்படலாம்னு....''

புரொபசரின் குரல் வதாவின் ஊக்கத்தை இடைவெட்டியது.

''ஆமாம்! ஏறுகிற குரங்குக்கு ஏணி வச்சு வேறே கொடுக்கணுமாக்கும்?''

தம் ஜோக்கைத் தாமே ரசித்துச் சிரித்த வண்ணம் கை கழுவி விட்டு வந்தார் அவர்.

வதா மலைத்துப் போய் நின்றாள். அப்பாவின் 'டியூயல் ரோல்' — இரட்டை வேடம் அவளுக்கொன்றும் புதிதல்லவென்றாலும்.... இந்த வார்த்தைகள்... இத்தனை 'குரூ'டாக அருவருப்பாக... எப்படி?

''குரங்கு?... ஏணி...?''

படுக்கையில் விழுந்த பின்னரும் கூட அப்பாவின் வார்த்தைகள் அவளைத் துரத்தித் துரத்தி அலைக்கழித்தன. நேரே... அவரோடு பேச முடியாதவற்றை மானசீகமாய்... மனசுக்குள் பேசித் தீர்த்தாள்.

'அப்படிப் பார்த்தா... உங்க 'தீஸிஸ்' கூட ஒரு வகையிலே ஏணிதானேப்பா?'


'நோ... நாட் தட்! அது அவர்களுக்காக வைக்கப்பட்ட ஏணியில்லே. தன்னோட 'ஸ்டேட்டஸ்' உயரறதுக்காக அப்பா தனக்குத் தானே வச்சுண்ட ஏணி!'

'என்னதான் இருந்தாலும் தான் ஏணியிலே ஏறக் கருவியா இருக்கறவாளைப் பத்தி... அவாளுக்கு ஒரு 'சொல்யூஷன்' ஏற்படறதைப் பத்திக் கொஞ்சம் கூடவா அவருக்குக் கவலை இருக்காது?'

'ஏன் இல்லே! நிறையவே இருக்கு! பட்... இ அதர் லே! 'ப்ராப்ளம்ஸ்' இருந்திண்டே இருக்கிற வரைக்கும்தானே அப்பா மாதிரி ஆட்களுக்கெல்லாம் 'மாக்ஸிமம் டேட்டா கலெக்ஷன்' பாஸிபிள்! 'போஸ்ட்டாக்டரல்' என்ன... அதுக்கும் மேலே ஏதாவது 'டிகிரி' இருந்தால் கூட 'அச்சீவ்' பண்றது கஷ்டமா என்ன? 'பட்... 'சொல்யூஷ'ன்னு ஒண்ணு ஏற்பட்டுப் போச்சுன்னு ...கேணியிலே நீர் வத்திப்போயிட்டா.... அற்ற குளத்து அறுநீர்ப் பறவைகள் எங்கே போகும்?'

பொறியைத் தட்டியதுமே...





காம்ப்டாலக்ஸ் ஸ்பாட்லைட்
துணிகளின் டிசைன்களைத் தனித்
தொனிரச் செய்கிறது—பார்ப்பவ-
ரைக் கவர்ந்திழுக்கும் வகையிலே.



உங்கள் வைரங்களிலே
மேலும் அதிக ஜொலிப்பு—
காம்ப்டாலக்ஸ்
ஸ்பாட்லைட் மூலம்.

PE-..-4365

காம்ப்டாலக்ஸ், எடுத்துப் பொருத்திடக் கூடிய, எத்தேவைக்கும் ஏற்ற ஸ்பாட்லைட். ஷேடுகளோ இணைப்புகளோ தேவையில்லை. பொருத்துங்களேன், பொறியைத் தட்டியதும், அதன் விற்கும் திறனை அறியலாமே!

PHILIPS

PHILIPS 50

காம்ப்டாலக்ஸ்

எடுத்துப் பொருத்திடலாம், எத்தேவைக்கும் ஏற்ற ஸ்பாட்லைட்

பிலிப்ஸ்

திருச்செம்பூர் திருவிழா

ஸ்ரீ காஞ்சி காமகோடி ஜெயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள் கடந்த ஒரு மாதமாக பம்பாயில் பல இடங்களிலும் முகாமிட்டு ஆஸ்திக அன்பர்களைத் தமது தெய்வீக அருளால் மகிழ்வித்து வருகிறார்.

தமிழர், தமிழரல்லாதார் என்ற வேறுபாடின்றிப் பல மொழி பேசும் பக்தர்களும் ஸ்வாமிகளின் எளிமை, இனிமை, தெய்வீகம் ஆகியவற்றால் கவரப்பட்டிருக்கின்றனர்.

முலுண்ட் என்ற இடத்தில் ஸ்வாமிகள் தங்கியிருந்தபோது ஒரு மெய் சிலிர்க்கும் சம்பவம் நடந்ததாகச் சொல்லப்படுகிறது. ஓர் அம்மையாரின் தங்க நகை தரிசிக்க வந்த இடத்தில் களவு போய்விட்டதாம். அவர் ஸ்வாமிகளிடமே சென்று கண்ணீருடன் முறையிட, ஸ்வாமிகள் அவரை ஓர் ஓரத்தில் சென்று அமருமாறு பணித்தாராம். பிறகு வழக்கம் போலத் தம் திருப்பணிகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்தாராம். சற்று நேரத்தில் பூஜை முடிந்து அபிஷேக தீர்த்தம் வழங்கும்போது அபிஷேக நீர் பெற்றுக் கொள்ளத் தம்மிடம் வந்த ஒரு பெண்மணியிடம், "உமது மடியில் இருப்பதை அந்த அம்மாளிடம் கொடுத்துவிட்டுத் தீர்த்தம் பெற்றுக்கொள்ள வரவும்" என்று சொன்னாராம். திடுக்கிட்ட அந்தப் பெண்மணி தன் குற்றத்தை ஒப்புக்கொண்டு நகையை உரியவரிடம் சேர்ப்பித்துவிட்டு ஸ்வாமிகளிடம் மன்னிப்புக் கோரினாராம்.



✳ திரு கி. வா. ஜ. வின் நேர்முக வர்ணனை

சமீபத்தில் பம்பாய் மாதுங்கா பகுதியில் ஆஸ்திக சமாஜத்தில் ஸ்வாமிகளைத் தரிசிக்கும் பேறு கிட்டியது. ஸ்வாமிகள் சற்று நேரத்தில் செம்பூர் என்ற இடத்துக்குப் பாத யாத்திரை மேற்கொள்ளவிருந்ததால் சமாஜத்தின் வெளியே பக்தர்கள் கூட்டம் ஏராளமாக இருந்தது. கூட்டத்தை ஒழுங்கு படுத்திக் கொண்டிருந்த போலீஸ் சார்ஜண்ட் மராட்டியர். அவர் ஸ்வாமிகளைப் பற்றிப் பேசுகையில் "செருப்புக் கூட அணியாமல், என்ன வேகமாய் நடக்கிறார்! நல்ல வேளையாக எனக்கு ஜீப்போடு டியூட்டி சரியாகி விடுகிறது. இல்லையானால் செம்பூர் வரை ஸ்வாமிகளின் வேகத்துக்கு ஈடு கொடுத்து என்னால் நடக்க முடியாது" என்று அங்கலாய்த்துக் கொண்டார்.

சற்று நேரத்துக்கெல்லாம் சமாஜத்தின் வாசலில் திடீர் பரபரப்பு! ஸ்வாமிகள் பக்தர் குழாம் பின்தொடர வேகமாக வெளியே வந்து கொண்டிருந்தார். ஓர் உயரமான இடத்தில் ஏறிப் பக்தர்களுக்குச் சிரித்த முகத்துடன் கையை உயர்த்தித் தரிசனம் அளித்து விட்டு உடனே விடுவிடுவென்று கீழே இறங்கி ஓட்டமும் நடையுமாகத் தம் பாதயாத்திரையைத் துவங்கிவிட்டார். சற்று முன் போலீஸ் சார்ஜண்ட் கூறியது சற்றும் மிகையில்லை என்று எண்ணத் தோன்றியது!

சென்ற மாதம் 24ம் தேதி ஸ்வாமிகள் திருச்செம்பூர் செட்டா நகரில் முருகன் கோவிலுக்குக் கும்பாபிஷேகம் செய்து வைத்தார். (கல்கி 7-10-79 இதழில் இக்கோவிலைப் பற்றித் தகவல் வெளியாகியிருக்கிறது.)


கும்பாபிஷேகத்துக்கு ஒரு வாரம் முன்பிருந்தே நாள்தோறும் பூஜைகள், வேத கோஷங்கள், இன்னிசைக் கச்சேரிகளுடன் திருவிழாக் கோலம் கொண்டது. "கும்பாபிஷேகத்துக்கு முதல் நாள் ஸ்வாமிகள்

தொழிலுக்கு வர்ணனை!


1. உங்கள் அர்ச்சனையை மறுபடியும் ஆரம்பிச்சிட்டேளா? — அர்ச்சகர் மனைவி
2. லெக்சர் பண்ணினது போதும் நிறுத்துங்க — புரொபசர் மனைவி
3. எதுக்கெடுத்தாலும் ஏன் இப்படிக் குறுக்கு விசாரணை செய்யறீங்க? — வக்கீல் மனைவி
4. மறுபடியும் உங்க பழைய பல்லவியையே பாடாதீங்க. — பாகவதர் மனைவி
5. உங்க அம்மா உங்களுக்கு நல்லா 'கீ' கொடுத்து விட்டது தெரியுதே! — கடிகார ரிப்பேர்க்காரர் மனைவி

— ஆர். மரகதம்





ஆச்சார்ய ஸ்வாமிகள் கும்பாபிஷேகம் செய்யும் காட்சி



திரு சீர்காழி கோவிந்தராஜன் பாடிய தெய்வப் பாடல்களை ரசித்துக் கேட்டார்.

கும்பாபிஷேகத்தன்று கோவிலின் வெளி வாசலில் பல இடங்களிலும் closed circuit Televsion பெட்டிகளை வைத்துக் கும்பாபிஷேகத்தைப் பக்தர்கள் எல்லோரும் காண ஏற்பாடு செய்திருந்தனர்.

சென்னையிலிருந்து வந்திருந்த கலைமகள் ஆசிரியர் திரு கி. வா. ஜகந்நாதன் கும்பாபிஷேக நிகழ்ச்சியைத் தமிழில் நேர்முக வர்ணனை செய்தார். பம்பாய் தமிழ்ச் சங்கத் தலைவர் திரு ஆதிலட்சுமணன் ஆங்கிலத்திலும் திரு கே. கே. ராஜன் மலையாளத்திலும் வர்ணித்தனர்.

அன்று மாலை திரு ஏ. கே. சி. நடராஜன் அவர்களின் கிளாரினெட் கச்சேரி நடைபெற்றது.

பம்பாயின் பிரபல தொழிலதிபர் ஸ்ரீ ஹரீஷ் மகேந்திராவைக் கும்பாபிஷேக விழாக் குழுத் தலைவராகவும், பம்பாய் ஷண்முகானந்தா சபையை உருவாக்கிய பேராசிரியர் பு. வி. ராமானுஜத்தைத் திருப்பணிக் குழுத் தலைவராயும் கொண்டு நூற்றுக்கணக்கான சமாஜத்தின் அங்கத்தினர்களும், ஆதரவாளர்களும் மற்றும் பக்தர்களும் அல்லும் பகலும் அயராது உழைத்து நிதி திரட்டி இது போல் ஒரு விழாவை பம்பாய் சரித்திரத்தில் கண்டதில்லை என்னும் அளவுக்கு நடைபெற்றதைப் பெருமிதத்துடன் கூறிக்கொண்டிருந்தார் செயலாளர் திரு பி. எஸ். சுப்பிரமணியன்.

இந்தக் கோவிலை உருவாக்கிய சிற்பி, மகாபலிபுரத்தைச் சேர்ந்த குமரேச ஸ்தபதி அவர்களும், அவரது உதவியாளர் திரு ராமகிருஷ்ண ஸ்தபதியும்.

இந்தக் கோவில் கட்டடத்தின் ஆர்க்கிடெக்ட் திருச்சியைச் சேர்ந்த திரு சி. எஸ். கே. ராஜு. இக்கட்டடத்தைக் கட்டிய கண்டிராக்டர் ஜஸ்டன்வாலா என்ற முஸ்லிம் அன்பர். பம்பாயின் மிகப் பிரபலமான கட்டிடக் கண்டிராக்டர். இந்துக்கள் வணங்கும் முருகப் பெருமானின் ஆலயத் திருப்பணிக்கு கிறிஸ்தவ மதத்தைச் சார்ந்த ஒருவரும், முஸ்லீம் மதத்தைச் சார்ந்த ஒருவரும் ஒத்துழைத்திருக்கும் இந்த அற்புதம் இந்தியாவில் வேறெங்கும் நிகழ்ந்ததில்லை எனலாம்.

கட்டுரை: ''இயாகு'';
''விஸ்வநாதன்''

படங்கள்: இயாகு; ஆர். பஞ்சல்

ராஜகோபுரம் கும்பாபிஷேகம்

✖ புலவர் அல்லா தைஹர், சென்னை-5
கே: பார்த்திபன் கனவு கதை நிகழ்ச்சி சிவகாமியின் சபதத்தின் நிகழ்ச்சிக்குப் பின்னால் நடந்தவை களாக உள்ளன. பின் ஏன் கல்கி முதலில் பார்த்திபன் கனவை எழுதினார்?
ப: ஏன் எழுதினார் என்பதை விட இப்படி எழுதியும் எந்த நாவலிலும் ஒரு முரண்பாடு ஏற்படாமல் எப்படி எழுதினார் என்று வியப்படையுங்கள். 'சபத'த்தைப் படித்த கையோடு 'கனவை'ப் படித்துப் பார்த்தால்தான் அமரர் கல்கியின் அபாரத் திறமையை உணர முடியும்.

✖ எஸ். சிவாஜிராவ், மதுரை-16
கே. மக்கள் தொகை பெருகுவதைப் போல் வாரம் ஒரு பத்திரிகை உதயமாகிறதே இதன் விளைவு என்ன ஆகும்.
ப: குழந்தையோ பத்திரிகையோ போஷாக்கு கிடைக்காவிட்டால் அதிக நாள் வாழ முடியாது.


✖ எஸ். உதயகுமாரி, இன்னம்பூர்
கே. ஒரு பொருளைத் தேவையில்லை என்று வாங்காமல் விட்டு விட்டு, பிறகு அதற்காக வருந்தியது உண்டா?
ப: உண்டு, உண்டு. சவரன் 75 ரூபாயாக இருந்தபோது வாங்காமல் இருந்துவிட்டேன். இன்று 1500 ரூபாயாக ஆகி விட்டதைக் கவனிக்கும்போது வருத்தம் ஏற்படுகிறது. (அப்போது வாங்காமல் விட்டதற்கு ஒரு முக்கிய காரணம்: பணமின்மை!)

✖ இரா. தியாகராஜன், கடப்பேரி
கே. ஆன்மீகமும் நாத்திகமும் உண்டாகும் இடம் எது?
ப: கஷ்டப்படுவோர் உள்ளங்களில். துயர் வரும்போது சிலர் கடவுளைத் தொழுகிறார்கள்; வேறு சிலர் தூஷிக்கிறார்கள்.

✖ ரி. எஸ். பாஸ்கரன், சென்னை-4
கே. நரி முகத்தில் விழித்திருக்கிறீரா?
ப: நாரி முகத்தில் விழித்திருக்கிறேன். பலன்? கேட்காதீர்கள்.

✖ என். குணசீலன், பட்டுக்கோட்டை
கே. நாணயத்தின் ஒரு பக்கம் தலையும், பின் பக்கம் பூவும் வைத்திருப்பது ஏன்?
ப: தலையின் பின்பக்கம்தானே பூ வைத்துக் கொள்கிறோம்? அதனால்தான்! (சில சமயம் பொன் வைக்கும் இடத்தில் பூ வைக்கிறோம் என்று சொல்லிக் குறைந்த பணத்தைக் கொடுக்கும்போது பொருத்தமாக இருக்கட்டும் என்ற காரணத்தாலும் நாணயத்தில் பூவைப் பொறிக்கிறார்கள் போலும்!)





✖ சரோஜா சக்ரவர்த்தி, செங்கல்பட்டு
கே. சமீபத்தில் ரசித்த ஜோக்?
ப: தஞ்சாவூர் சென்று வந்த ஒரு நபர் கூறியது: தஞ்சாவூரில் கொசுத் தொல்லை அதிகம். தஞ்சாவூர் கோயில் நந்திகூட முன்பு சின்னதாகத்தான் இருந்தது. கொசுக் கடியினால் வீங்கி வீங்கி, வளர்ந்து விட்டமாதிரி பெரிசாகி விட்டது!

✖ ஸிங்பெல், பம்பாய்-89
கே. கடுகு சிந்தினால் கலகம் என்கிறார்களே?
ப: 'கடுகு' சிந்தித்தால் கலகம் என்பது சரியான வாசகமாக இருக்கலாம். அல்லது கடுகு சிந்திவிட்டால் எப்படி பொறுக்கி எடுப்பது என்று கலக்கம் ஏற்படுவதால் கலகத்திற்குப் பதில் கலக்கம் என்பதே பொருத்தமாகப் படுகிறது.

✖ சி. என். ராமன், ஈரோடு
கே. சமீபத்தில் பெருமைப்பட்டுக் கொண்ட நிகழ்ச்சி உண்டா?
ப: பெருமை அல்ல. மனநிறைவு பெற்ற விஷயம் உண்டு. சில வாரங்களுக்கு முன்பு ஒரு கேள்விக்கு, ''சந்தேகங்கள்தான் அறிவை வளர்க்கும். 'மனிதனின் பல நூறு சந்தேகங்களினால்தான் முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது' என்கிற ரீதியில் பதில் தந்திருந்தேன். ஜனவரி ரீடர்ஸ் டைஜஸ்டில் கிட்டத்தட்ட இதே கருத்தை ஒரு பிரெஞ்சு எழுத்தாளரும் தெரிவித்திருந்ததைப் பார்க்க ஒரு செகண்ட் உச்சி குளிர்ந்தது. 'நம் பதில்களில் சில சமயம் நல்ல கருத்துக்களும் வருகிறதே' என்று மன நிறைவு கிட்டியது!

✖ கே. எம். இளங்கோ, குப்புச்சிபாளையம்
கே. பெரும்பாலான புலவர்கள் புவராக (Poor) இருப்பதன் காரணம் என்ன?
ப: புலவர் புவராக இருப்பதற்குக் காரணம் புரவலர் இல்லாததே!

ரூ. 5 பரிசு பெறுபவர்:
இ. அல்லா தைஹர்
48, பழனி அம்மன் கோயில்
6-வது தெரு, சென்னை-5

Printed by V. Murali and published by V. Vaidyanathan on behalf of Messrs Bharathan Publications Private Ltd., at the Bharathan Press, Guindy, Madras-600 032. Editor: K. Rajendran

இந்தியாவிலேயே முதல் முறையாக...





கோகுல்

ஸான்டால் மற்றும் ஸாண்டல்வுட் பவுடர்கள் ISI முத்திரை பெறுகின்றன.

வாசனை திரவியத் தொழிலில் மற்றொரு சாதனை!

கோகுல் ஸான்டால் மற்றும் ஸாண்டல்வுட் பவுடர்கள் மைக்ரோஃபைன் செய்யப்பட்ட சந்தனம் மற்றும் மூலிகைப் பொருட்கள் கொண்டு தரமாக தயாரிக்கப் படுகின்றன என்பதற்கு இதோ இன்னும் ஓர் அத்தாட்சி!

மேனியெங்கும் நறுமணம் களி நடனம் ஆட, புத்துணர்வுடன் சருமத்தின் மென்மை காத்திடும் முதல் தரமான கலை மணம் கமழும் கோகுல்!

IS:3959

ISI

CM/L.NO.8223

டி.எஸ்.ஆர் & கம்பெனி மதராஸ்.

இளமைப் பொலிவுடன் இனிய மணம் தவழும் இரகசியம்—கோகுல்.

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Sri Lenka
இலங்கையில் விலை 90 சதம் (தபால் செலவு தனி)
மலேசியாவில் விலை (விமானப்பதிப்பு) 75 மலேயக் காசு